258

சக்தி

மாத வெளியீடு



சுபானு ௵
சித்திரை ௴

-/8

கதைகள்

சேவல் மிட்டாய்
மறைந்த பவுன்
திருவிழா
அநாதை

★

வரலாறுகள்

நமது தமிழ்நாடு
ஐயரவர்கள்

★

கட்டுரைகள்

இந்தியாவைக்காக்
அழகுப் போட்டி
முன்னேற்றமா?
குடிகள் யார்?
எழுத்தாளன்
பேச்சுக் கலை

★

பாடல்கள்

எங்கள் ரயில் வண்
நட்சத்திரங்கள்

★

குறிப்புக்கள்

உடம்பும் மருந்து
புத்தக உலகம்
காலச்சுழல்
விசித்திரம்
கதம்பம்

கவர்ச்சியான ஆடைகளுக்கு

S. R. B.

No. 83, வாலாயமான பழய கடை,

Formerly S. R. பாலுசாமி அய்யர் அண்டு சன்ஸ்

★

இக் கலியாண காலத்தில் மாதர் மனதிற்குவந்த **சேலைகள்** கிடைக்குமோ எனும் கவலை வேண்டாம்

★

கைவசமுள்ள நவீன நூதன ஜவுளி ரகங்களை நேரில் வந்து பார்வையிட உங்களை வணக்கத்துடன் அழைக்கிறோம்

★

உங்கள் நல்வரவை எதிர்பார்க்கும்

S.R.B. குப்புசாமி அய்யர் & ஸன்

83 நைனியப்பநாயகன் தெரு (போன் 3506) P.T. மதராஸ்

பிருன்ஞ்சு 230 கீழ்மாரட்டுவீதி (போன் 36) மதுரை

"HIS MASTER'S VOICE"

இசைவாணியின் தமிழிசை

ஸ்ரீமதி எம். எஸ். ஸுப்புலக்ஷ்மி

மா தயை வஸந்த 2 பாகங்கள் } N. 18208

எல்லா "எச். எம். வி." கிராமபோன் வியாபாரிகளிடமும் கிடைக்கும்

"ஹிஸ் மாஸ்டர்ஸ் வாய்ஸ்"

விரைவில் வெளிவரும்!

ரூஸோ

(வாழ்க்கை வரலாறு)

ஆசிரியர்:
வெ. சாமிநாத சர்மா

★

"மனிதன் சுதந்தரமாய்ப் பிறந்தான்; ஆனால் எங்கும் விலங்கு மாட்டியவனாய்க் காணப்படுகிறான்" என்று மனங்குமறிய பிரஞ்சுப் பேரறிஞர் ரூஸோ. இந்த ஜனநாயக நவயுகத்திற்கு விதை தெளித்த மூலகர்த்தர்களுள் அவர் ஒரு முக்யஸ்தர்.

★

சக்தி காரியாலயம்
வடக்கு வெளி வீதி :: மதுரை

உங்கள் ஆயுள் இன்ஷ்யூரன்ஸுக்கு உகந்தது

யுனைடெட் இந்தியா

லைப் அஷ்யூரன்ஸ் கம்பெனி லிமிடெட்

★

யுனைடெட் இந்தியா லைப் பில்டிங்

எஸ்பிளனேட் :: மதராஸ்

டிரஸ்டி : மதராஸ் சர்க்காரின் அபிஷியல் டிரஸ்டி

1906 முதல் திருப்தி அளித்துவரும் ஊதியம்

கூண்டுக்கிளி

முதலிய ஐந்து நாடகங்கள்

ஆசிரியர்: ஹரீந்திரநாத சட்டோபாத்தியாயா

நேர்த்தியான இரண்டாம் பதிப்பு வெளிவந்துவிட்டது

"ஒவ்வொரு நாடகத்திலும் கவிதா அழகின் ஜொலிப்பும், கருத்தைக் கவ்விய அம்சங்களும் துள்ளிக்கொண்டிருக்கின்றன." —வீரகேசரி

"ஹரீந்திரரது இலக்கிய பொக்கிஷங்களிலே அழியாச் சுடராய் விளங்குகிறது இது. தமிழில் அழகுறக் கொண்டுவந்துள்ளார் தி.ஜ.ர." —நவசக்தி

"இவற்றில் கவியரசி, கற்பனைக் கோபுரத்திலே ஏறி, உணர்ச்சி தரும் வாசகங்களைச் சங்கநாதம் செய்கிறாள்!" —ஜோதி

"இந்த நாடகங்களில் கவிதை மணம் வீசுகிறது." —பாரதமணி

"சமூகத்தின் ஏற்றத் தாழ்வுகளைக் கண்டு மனம் வெதும்பிய கவிஞனின் கனற் கற்பனையே, கூண்டுக்கிளி முதலிய நாடகங்களாகப் பரிணமித்திருக்கிறது." —ஹிந்துஸ்தான்

விலை ரூ 1—4—0

சக்தி காரியாலயம்

வடக்குவெளி வீதி, — மதுரை

மேற்கண்ட ரிகார்டுகள் எங்களிடம் கிடைக்கும்:

S. கண்ணன் & Co.,

திருச்சிறாப்பள்ளி,

சுபானு
மலர் 8

சக்தி

சித்திரை
இதழ் 2

அன்பும் அறிவும் அறமும் திருவும் அருளும் ஆற்றலும்
இன்ப வாழ்வும் விளங்கச் சக்தி எழுந்து பொலிகவே!

காலச்சுழல்

ஜின்னுவின் பல திசைப் பாய்ச்சல்: முஸ்லீம் லீக் கூடியது. அதன் 'நிரந்தர'த் தலைவர் ஜின்னு பேசிவிட்டார். பேச்சாவது! பலர்மீதும் பாயும் எண்டிசைப் பாய்ச்சல் அது. ஜின்னுவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வருகிறது. காந்திஜி மீது பாய்கிருர். காந்திஜிதான் திரும்பத் திரும்பக் காங்கிரஸைக் கெடுத்து, லீகிடம் சமரசம் செய்துகொள்ள வொட்டாது தடுத்ததுபோல், அவர் குற்றம் சுமத்துகிருர். ஹிந்து சமூகத்தையே பரிகசிக்கிருர். தாங்கள் 1,300 வருஷங்களுக்கு முன்னே ஜனநாயகத்தைக் கற்றுவிட்டார்களாம். ஹிந்துக்களுக்கோ அது வெகு தூரமாம். அமெரி மீதும் லின்லித்கோ மீதும் முட்டுகிருர். இந்தியா ஒரே தேசம் என்று அவர்கள் சொல்லியது அவருக்கு எரிச்சலாயிருக்கிறது. ஹிந்து இந்திய சமஸ்தானங்கள் மீதும் அவர் மோதுகிருர். அவைகள் முஸ்லீம்களுக்கு நீதி வழங்கவில்லையாம். பணக்கார முஸ்லீம்களையும் அவர் விடவில்லை. "நம் மக்களில் 50 லட்சம் பேர் ஒரு வேளை உண்டு பட்டினி கிடக்கிருர்கள். ஜாக்கிரதை!" என்று முஸ்லீம் முதலாளிகளை ஜின்னு காய்கிருர். லீக்குக்குப் பணத்தைக் கொள்ளை கொள்ளையாய் வாரிக் கொடுக்காததே அவர்களின் குற்றமோ என்னவோ! விஷயம் மர்மமாயிருக்கிறது. ஆமாம், இந்த ஜின்னு என்னதான் விரும்புகிருர்? அவருடைய உள்ளக் கருத்துத்தான் என்ன?

* *

அமெரிக்குப் பின்பாட்டே: முக்கிய கட்டம் வரும்போது, அமெரி மாதிரியும் லின்லித்கோ மாதிரியும்தான் ஜின்னுவும் பேசுகிருர். காங்கிரஸ் சட்டமறுப்பு இயக்கத்தை, தம் சர்க்கார் இருந்தால், தாமும் நசுக்கியே தீர்த்திருப்பாராம். காங்கிரஸ் வேண்டாம், ஜின்னுவையே கூப்பிட்டு ஒரு தேசீய சர்க்கார் அமைக்கச் சொல்லுங்களேன் என்று, வைசிராய்க்கு மகாத்மாஜி எழுதினு ரல்லவா? "என் அவருக்கு எழுதினுர்? எனக்கெழுதுவதற்கென்ன?" என்கிருர் ஜின்னு. ஆனல், அதே மூச்சில், அதைப்படி ஒரு தேசீய சர்க்கார் அமைக்க முடியும் என்றும், அவர் கேட்கிருர். தேசீய மந்திரிசபை

அமைத்தால், அரசியல் அமைப்புச் சட்டத்தையே மாற்றிவிடுவதாகுமாம். பாகிஸ்தான் போய்விடுமாம். ஆகையால், அது கூடாதாம். இது அமெரிக்குப் பின்பாட்டுப் பாடுவதேபோல் இல்லையா?

*   *

ஆத்திரம் உண்மையா: காங்கிரஸ் மிகப் பெரிய அரசியல் கட்சி. அதுதான் கலகத்தில் இறங்கி, குற்றவாளி யாகிவிட்டது. அதன் பேச்சை, பிரிட்டிஷ் சர்க்கார் கேட்க முடியாது. அடுத்தபடி பெரிய அரசியல்கட்சி லீக் அல்லவா? அதன் இடம் அதிகாரத்தை ஏன் கொடுத்து விடக் கூடாது என்று ஆத்திரப்படுகிறார் ஜின்னா. "காந்தியே! நீர் என்னை ஆளக்கூடாது என்றே சொல்லுகிறேன்" என்னும் ஜின்னா, இந்தியா பூராவையும் தாம் ஆளமட்டில் தயாராயிருக்கிறார். ஆனால், அந்த அதிகாரத்தைக் கொடுப்பவரைத்தான் காணோம். காங்கிரஸ் ஹிந்துக்களும் லீக் முஸ்லீம்களும் பாகிஸ்தானுக்கு ஒத்துப் போய்விட்டால், இருவரும் சேர்ந்து, சுதந்தரத்துக்குப் போரிடலாமாம். அப்போது பிரிட்டன் பணிந்து விடுமாம். இந்தியாவைத் தாயகமாய்க் கருதும் காங்கிரஸ்காரர்கள், சரியான வழியிலோ தவறான வழியிலோ, அதன் விடுதலைக்காகப் போராடுகிறார்கள். இந்தியாவிலே ஒரு பாகம் முஸ்லீம் தேசம் — பாகிஸ்தான் — என்று கூறும் ஜின்னா, அந்த விடுதலை ஆசை அந்தரங்க சுத்தியானதாயிருக்குமானால், என்ன செய்ய வேண்டும்? முழு இந்தியாவுக்கும் அவர் போராடவேண்டாம். முஸ்லீம் இந்தியாவின் விடுதலைக்குப் போராடலாமே? 'பேச்சுப் பேச்சென்னும், பெரும்பூனை வந்தக்கால் கீச்சுக் கீச்சென்னும் கிளி' என்றபடி, பேசிப் பேசிக் கடைசியிலே வெறும் கீச்சலோடு நிற்பதால் என்ன பயன்?

*   *

நிற வேற்றுமை நாகம்: தென்னாப்பிரிக்காவிலே, நிற வேற்றுமை நாகம் படம் விரித்தாடுகிறது. இந்தியத் துருப்புகள் அங்கே வெள்ளைக்காரத் துருப்புகளோடு, தோளோடு தோள் பொருந்தத் துணை நின்று போரிடுகிறார்கள். இந்தியத் துருப்புகளின் வீரத்தையும் தியாகத்தையும் சர்ச்சில் துரைமகனும் அமெரி துரைமகனும் வானளாவப் புகழுகிறார்கள். ஆனால், தென்னாப்பிரிக்க யூனியன் சர்க்கார், இந்தியரை நசுக்கும் புதிய சட்டமொன்றை - இந்தியா முழுதும் ஒரே முகமாகக் கண்டித்தும் - நிறைவேற்றிக்கொண்டிருக்கிறது. டிரான்ஸ்வாலிலே, ஏற்கனவே இருந்துவருகிறது இந்தச் சட்டம். நேட்டாலிலும் இப்போது இதைக் கொண்டு வருகிறார்கள். டர்பன் நகரம் ஐரோப்பியருக்கே சொந்தமாம். அதை அப்படியே காப்பாற்ற உறுதி கொண்டிருக்கிறதாம் யூனியன் சர்க்கார். அங்கே புதிதாய் ஸ்தாவர சொத்து எதையும் ஆசியாக்காரர்கள்-அதாவது இந்தியர்கள் தான்-வாங்கக் கூடாதென்று தடுக்கிறது இந்தச் சட்டம். அவசியமானால், நேட்டாலின் இதர இடங்களுக்கும் இது வியாபிக்குமாம். இந்தக் கொடிய சட்டம் நிறைவேறுது செய்ய, இந்தியா மந்திரி அமெரி, தாம் தலையிட முடியாதென்று சொல்லிவிட்டார். இந்திய சர்க்காரின் வேண்டுகோளோ யூனியன் சர்க்காரின் காதிலே விழவேயில்லையாம். இந்திய சர்க்கார் என்பது என்ன? பிரிட்டிஷ் சர்க்

காரின் ஒரு 'டிபார்ட்மெண்டு' தானே? இந்தியரின் உரிமைகளைப் பறிக்க இப்படி ஒரு சட்டம் நிறைவேறுகிறதே என்ற தனது ஆழ்ந்த துக்கத்தைக் காட்டும் ஓர் அறிக்கையை இப்போது இந்திய சர்க்கார் வெளியிட்டு விட்டது. அதோடு தீர்ந்தது அதன் கடமை. அடிமை இந்தியாவின் குரல், காற்றிலே கலந்து மறைய வேண்டியதுதானே?

*　　*

ஐயரவர்கள் நினைவு: புதைந்து போய் மண்ணோடு மண்ணாய் மறையவிருந்த பழந்தமிழிலக்கியப் பொக்கிஷங்கள் பலவற்றை வெளிக்கொணர்ந்து, தமிழுலகுக்கு வழங்கிய பேருபகாரி மகா மகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையரவர்கள் நம்மை விட்டகன்று ஒரு வருஷமாகிவிட்டது. அவரைத் தமிழரனைவரும் இன்று நினைவு கூர்கிறோம். வெறும் நினைவு கூர்தல் மட்டும் போதுமா? ஐயரவர்கள் செய்த அரிய தமிழ்த் தொண்டு அளவிடற்கரியது. அதைத் தொடர்ந்து நடத்தவேண்டு மல்லவா? ஏட்டுச் சுவடிகள், காகிதப் பிரதிகள், தனிப் பாடல்கள், பற்பல குறிப்புக்கள் ஆகிய 'மூலப் பொருள்'களை ஐயரவர்கள் மலை மலையாய்ச் சேகரித்து வைத்திருக்கிறார்கள். அவைகளையெல்லாம் ஆராய்ந்து பதிப்பிக்கும் காரியத்தைச் செய்ய வேண்டாமா? அதற்கு ஐயரவர்களின் ஞாபகார்த்தமாக ஒரு 'ட்ரஸ்ட்' ஏற்படுத்த முயற்சி நடப்பதாய் அறிகிறோம். அந்த ஸ்தாபனம் அமைந்து வெற்றிகரமாய் வேலை செய்ய, பொருள் உதவியும் தொண்டும் புரியத் தமிழர்கள் கடமைப்பட் டிருக்கிறார்கள். அது தமிழுக்கும் தங்களுக்குமே உதவிக்கொள்வ தாகும்.

பிலிப்ஸ் நாடகம்: மகாத்மா காந்தியைப் பேட்டிகண்டு பேச, அமெரிக்கக் குடியரசுத் தலைவர் ரூஸ்வெல்டின் தூதரான பிலிப்ஸ், இந்திய சர்க்காரை அனுமதி கேட்டார். கேட்கும் போதே, அனுமதி கிடைக்காது என்று தெரிந்துதான் கேட்டாராம்! அப்படி ஏன் கேட்க வேண்டும்? எல்லாக் கட்சியார்களின் அபிப்பிராயங்களையும் அறிய, பாரபட்சமில்லாமல் தாம் முயன்றதாகக் காட்டிக்கொள்வதற்காகத்தானும். இவர் கேட்டதற்கு இந்தச் 'சரியான' காரணம் இருப்பது போலவே, இந்திய சர்க்கார் மறுத்ததற்கும் ஒரு 'சரியான' காரணம் சொல்லப்படுகிறது. இவருக்கு அனுமதி கொடுத்தால், இந்திய விஷயத்தில் ஏதோ அமெரிக்கா தலையிட முயற்சிக்கிறது என்ற தப்பபிப்பிராயமும், நம்பிக்கையும் இந்தியா எங்கும் ஏற்பட்டுவிடக் கூடுமாம். அதற்கு இடங்கொடுக்கா திருக்கவே, பிலிப்ஸுக்கு நமது சர்க்கார், அனுமதி மறுத்தார்களாம். பிலிப்ஸ் நீட்டி முழக்கிக்கொண்டு, இந்தியாவுக்கு வந்து, 'பாரபட்ச மில்லாமல்' பலரையும் கண்டுபேசி, எல்லார் அபிப்பிராயங்களையும் அறிய முயன்றதே, அந்தத் தப்பபிப்பிராயத்துக்கு இடங்கொடாதா? காந்திஜியை அவர் பேட்டி கண்டால் மட்டும்தான் அந்தத் 'தப்பபிப்பிராயம்' உண்டாகுமா? எல்லாம் ஏதோ அர்த்தமற்ற விசித்திர நாடகமாகவே யிருக்கிறது! சர்க்கார் இம்மாதிரி போலி அந்தஸ்துச் செய்கைகளை விட்டு, அந்தரங்க சுத்தியாகவும் மனம் விட்டும் இந்தியப் பிரச்னையைத் தீர்க்க முயன்றாலொழிய, அது ஒருநாளும் தீராது.

★

● வர்ணங்களின் சக்தி: வர்ணங்களின் சக்தி, கண்ணைத்தான் பாதிக்கும் என்று பொதுவாக எல்லாரும் நினைப்போம். ஆனால், சுவை, ஸ்பர்சம், வாசனை முதலிய புலன்களையும் அது பாதிக்கும் என்று ஸாமுவேல் ஜி. ஹிப்பன் என்ற ஓர் எஞ்சினீர் சமீபத்தில் நிரூபித்துக் காட்டிவிட்டார்.

ஒரு விருந்து நடந்தது. அவர் அதில் வர்ண விளக்குகள் போட்டார். அருமையான உணவுப் பண்டங்க ளெல்லாம் விதம் விதமாய் வட்டிக்கப்பட்டன. ஆனால், ஒவ்வொன்றும் விளக்கு ஒளியின் ஜாலத்தினால் தன் இயற்கை வர்ணத்தை விட்டு வேறு வர்ணமாய் விளங்கியது. பழத் துண்டுகள், சாம்பல்பூத்த ஊதா ஆயின; பச்சைப் பட்டாணிகள், மிளகு போல் கறுத்தன; பால், ரத்தச் சிவப்பாயிற்று; காப்பி, நோய் பிடித்த மஞ்சளாயிற்று. அத்தனையும் மிக்க நேர்த்தியான பண்டங்கள் தான்; சங்கீதமோ கர்ணாமிர்தமாய்ப் பொழிந்துகொண் டிருந்தது. அப்படி யிருந்தும், பல விருந்தாளிகளால் உண்ண முடியவே யில்லை. சிலர் நோயும் பிடித்துவிட்டார்கள். விருந்து மோசமாய்ப் போனாலும், எஞ்சினீரின் பரீட்சை முதல்தர வெற்றி யாயிற்று.

* *

● வேஷ உலகம்: 'உண்மை' என்கிறோம்; 'நாணயம்' என்கிறோம். ஆனால், சென்ற சில நாட்களுக்குள், இந்த வாக்கியங்களை—கீழே கண்ட உபசார மொழிகளை—எத்தனை தடவை நீங்கள் சொன்னீர்கள் என்று கணக்கெடுங்கள்; அப்படிச் சொல்லும்போதே, சொல்லும் சொல்லுக்கு நேர்விரோதமாக மனது எண்ணியது எத்தனை தடவை என்பதையும் கணக்கெடுங்கள். ஏறக்குறைய அத்தனையும் அப்படியே எனக் காண்பீர்கள்:

"அடடா! உங்களைப் பார்த்தது எனது பெரும் பாக்கியம்!"

"உடம்பு கொஞ்சம் அசௌக்கியமா யிருக்கிறது. அதனால்தான் வர முடியவில்லை. மன்னியுங்கள்."

"என்ன, நீங்கள் நம்ம வீட்டுக்கே வரமாட்டேன் என்கிறீர்களே! ஒரு நாளாவது வரக்கூடாதா?"

"ஆமாம், உங்களை நல்லாய் எனக்கு ஞாபக மிருக்கிறதே......நீங்கள் வந்து......நீங்கள்......"

"அப்பப்பா; உங்கள் குழந்தைகள் ரெம்பச் சமர்த்து; எவ்வளவு புத்திசாலிகளா யிருக்கின்றன!......"

* *

● கைதி அரசனின் ஆசை: அவுரங்கசீப் சக்கரவர்த்தி, 1867-ஆம் வருஷம் கோல்கொண்டாவை முற்றுகை யிட்டார். அபுல் ஹாஸன் (டானு ஷா) என்ற மன்னன் எட்டுமாத காலம் வீரமாய் அவரை எதிர்த்துப் போராடினான். பிறகு சளைத்துச் சரணடைந்து கைதி யானான்.

அப்படி அவன் கைதியா யிருந்த போது, சக்கரவர்த்தியின் பாண்டு வாத்தியக்காரர்கள் ஏதோ ஒரு ஹிந்துஸ்தானிப் பாட்டை வாசித்தார்கள். அந்தப் பாட்டு, அபுல் ஹாஸனுக்குப் பரமானந்தம் அளித்தது. "ஐயோ! இந்தப் பாட்டை வாசித்தவர்களுக்குக் கொடுக்க என்னிடம் பணமில்லாது போயிற்றே! இருந்தால், இவர்களுக்கு லட்ச ரூபாய் கொடுத்திருப்பேன்" என்றான் கைதி அரசன். இப்படி அவன் சொன்னதை, யாரோ அவுரங்கசீப் சக்கரவர்த்தியிடம் தெரிவித்தார்கள். அந்தப்படியே லட்ச ரூபாயை அந்த பாண்டு வாத்தியக்காரர்களுக்குப் பரிசளிக்க உத்திரவிட்டுவிட்டார் சக்கரவர்த்தி!

★

கதம்பம்

ஜலதோஷத்தை வெல்ல வழி: தென்னாப்பிரிக்காவைச் சேர்ந்த டாக்டர் தியொடோர் என்பவர், ஜலதோஷம் வராமல் தடுக்க, ஒரு விசித்திரமான வழி சொல்லுகிறார். நாலைந்து வருஷங்களுக்கு முன் அவருக்கு வருஷத்தில் மூன்று தடவையாவது கடுமையான ஜலதோஷம் வராதிருப்பதில்லையாம். ஜலதோஷம் வரும்போதெல்லாம், முன்னால் தும்மல் வருவது நிச்சயம். ஆகையால், தும்மலை அடக்குவதே, ஜலதோஷத்தைத் தடுக்கும் வழி என்று ஒரு யுக்தி செய்தார். தும்மல் எப்போது வந்தாலும் சரி; மூக்கைக் கெட்டியாகப் பிடித்து நெருக்கியோ, மேலுதட்டை நடு மையத்தில் அமுக்கியோ, வயிற்றுக்குள்ளேயே தும்மியோ, மூக்கினால் தும்மாமல் அவர் அடக்கி வந்தாராம். இதில் அவருக்கு வெற்றியும் கிடைத்துள்ளதாம்.

சீனாவின் ரகஸ்யம்: சென்ற 2,000 வருஷங்களில், தார்த்தாரியர், துருக்கியர், கிதான், ஜூச்சென், மங்கோலியர், மஞ்சுக்கள் ஆகிய ஜாதிகளால் ஆறு முறை சீனா ஜயிக்கப்பட்டுள்ளது. ஆயினும், சீனா இன்னும் சீனாவாகவே இருப்பதன் காரணம், அது, வந்தவர்களின் மனதை மாற்றி அவர்களைத் தன்னிடம் ஐக்கியப்படுத்திக்கொண்டதே யாகும்.

ஸ்டாலின் மகிமை: காஜக்ஸ்தானிலுள்ள விவசாயியான ஒரு கவிஞர், தங்கள் தலைவர் ஸ்டாலினை இவ்வாறு புகழ்கிறார்: "உம்மைத் தீர்க்க தரிசிகளோடு ஒப்பிட விரும்பினேன்; ஆனால், அவர்கள் பொய் சொல்லியிருக்கிறார்களே! கடலோடு ஒப்பிட விரும்பினேன்; ஆனால், கடலில் மறைந்துள்ள பாறைகள், கப்பல்களை மோதிவிடுமே! மலைக்கு ஒப்பிட விரும்பினேன்; ஆனால், மலைகளின் உச்சியைக் காண முடியுமே! சந்திரனுக்கு ஒப்பிட விரும்பினேன்; ஆனால், சந்திரன் இரவில் மட்டும்தானே பிரகாசிக்கும்! சூரியனுக்கு ஒப்பிட விரும்பினேன்; ஆனால், சூரியன் மேகமில்லா நாட்களில்தானே பிரகாசிக்கும்!"

ஊமையான பெண் பேசுகிறாள்: ஜயராம்தாஸ் தௌலத்ராம் என்ற பிரபல காங்கிரஸ் தலைவர் கைதியாகிச் சிறைப்பட்டார். அந்தத் துயரத்தின் அதிர்ச்சியால், அவருடைய மகள் பிரேமி என்பவள் ஊமையாகிவிட்டாளாம். இப்போது, அவள் தன் தந்தையைப் பேட்டி காண அனுமதி பெற்றுப் பேட்டி கண்டாளாம். உடனே, அவளுடைய ஊமை நீங்கி, பேச்சு வந்துவிட்டதாம்! அளவற்ற துயரமும், அளவற்ற சந்தோஷமும் எவ்வளவு சக்தி வாய்ந்தவை என்பதை யார் சொல்ல முடியும்?

யுத்தமும் கலையும்: "பிரிட்டனில் முன்னைவிட அதிகமான ஜனங்கள் இப்போது, சித்திரங்கள், நகைகள், அபூர்வ வஸ்துக்கள் ஆகியவைகளை வாங்குகிறார்கள். அவைகளின் விலை அகாதமாய் ஏறிவருகிறது. அழகுள்ள நிலைத்த பொருள்களிடம் ஜனங்களுக்கு அதிக அன்பை, யுத்தம்

ஊட்டுகிறதா என்ன? இல்லவே இல்லை. ஒரு பவுன் நோட்டு நாணயத்தின் மதிப்புக் குறைந்து விடுமோ என்னவோ என்று அநேகர் அஞ்சுகிறார்கள். அதற்காக, தங்கள் பணத்துக்கு ஜங்கம சொத்துக்களாக வாங்கிக் குவிக்கிறார்கள். 1939-ஆம் வருஷம் இருந்ததைவிட வைரக் கற்களின் விலை ஒன்றுக்கு ஒன்றேகாலாக இப்போது உயர்ந்திருப்பதன் காரணம் இதுதான்" என்கிறார் பிரபல ஆசிரியர் ஹானன் ஸ்வாபர். இங்கென்ன வாழ்கிறது? உலகெங்குமே ஜனங்களின் மனோபாவம் ஒரே தினிசாய்த் தான் இருக்கிறது.

யுத்த நிர்ப்பந்தம்: அமெரிக்காவில், கப்பற்படைத் தொழிற்சாலையில் வேலை செய்துகொண்டிருக்கும் ஒரு ஸோல்ஜர் 386 பவுண்டு இருக்கிறானாம். அவனுக்குச் சாதாரணமான கால்சட்டைகள் போதவில்லை. ஆனால், யுத்தக் கட்டுப்பாடுகள் காரணமாக, பெரிய கால்சட்டைகளை அதிகாரிகள் அவனுக்குக் கொடுக்க மறுத்துவிட்டார்கள். ரூஸ்வெல்ட்டுக்கு உடனே அவன் பின் வருமாறு ஒரு தந்தி அடித்தான்: "மூன்று தடவை உங்களுக்கு வோட் செய்திருக்கிறேன். இது வரை ஒரு சலுகையும் கேட்டதில்லை. இப்போது தேவை. நான் கொஞ்சம் பருமனான மனிதன். 386 பவுண்டு நிறையுள்ளவன். தீவிரமாய்க் கப்பல்கள் கட்டிக் கொண்டிருக்கிறேன். கலிபோர்னியாவின் மகாத்மா காந்தி யாகிவிட எனக்கு இஷ்டமில்லை. பெரிய கால்சட்டை அனுப்பச் செய்யுங்கள். சீக்கிரம். மெத்த அவசரம்." அவன் விரும்பியபடியே கால்சட்டைகள் கிடைத்தனவாம்.

கடிகாரத்தை விழுங்கினான்: "அடே! நீ இந்தக் கடிகாரத்தை விழுங்குவாயா?" என்று யாரோ அவனைக் கேட்டிருக்கிறார்கள். "ஓ! விழுங்குவேனே" என்று பந்தயம் கூறியிருக்கிறான் பையன். கடிகாரத்தை நிஜமாகவே விழுங்கிப் பந்தயத்தையும் ஜயித்துவிட்டான். சமீபத்தில் சிந்து ஐதராபாதில் நடந்த சங்கதி இது. ஆனால், மூன்றாவது நாளிலே, பையனின் வயிற்றில் தாங்கமுடியாத வலி உண்டாயிற்று. ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோனார்கள். வயிற்றை எக்ஸ்-ரே படம் பிடித்தார்கள். ஆப்பரேஷன் நடந்தது. கடிகாரம் அப்படியே முழுசாக வெளியே எடுக்கப்பட்டது. ஆனால், டயலை மூடியிருந்த மைக்காவும், பெரிய முள்ளும் மட்டில் காணோம்!

★

'ஸ்வராஜ்யம்'

'சுயராஜ்யம்' என்ற வார்த்தை முதன் முதலாக, தாதாபாய் நௌரோஜியால், 1906-ஆம் வருஷம் கல்கத்தாக் காங்கிரஸில், அவரது தலைமைப் பிரசங்கத்தில்தான் உபயோகிக்கப் பட்டது.

அவர் சொன்னார்: "நாங்கள் எந்தத் தானங்களையும் கேட்கவில்லை; நீதியையே கேட்கிறோம். பிரிட்டிஷ் பிரஜைகள் என்ற முறையில் நம் உரிமைகளைப்பற்றிய பாகுபாடுகளையும் விவரங்களையும் விரித்துக்கொண்டிராமல், முழு விஷயத்தையும் ஒரே வார்த்தையில் சொல்லிவிடலாம்—இங்கிலாந்திலும் காலனிகளிலும் உள்ளது போலவே 'தன்னாட்சி' அல்லது 'ஸ்வராஜ்யம்' என்பதுதான் அது."

—பிரித்விஸ் சந்திர ரே.

பேச்சுக் கலை

THE REGISTRAR OF BOOKS
17 MAY 1943
MADRAS

'ராதா'

பேச்சு என்பதன் முக்கிய உபத்திரவம், அது நம் கருத்துக்களைப் பிறருக்கு வெளியிடுவதற்காகவே ஏற்பட்டிருக்கும் தொல்லைதான், சொற்கள் ஒவ்வொன்றுக்கும் ஏதோ அர்த்தம் வைத்துக்கொண் டிருக்கிறோம். அந்தச் சொற்களை மணி கோப்பதுபோல், சரம் சரமாய்க் கோக்கிறோம். வாக்கியங்கள் அமைகின்றன. வாக்கியங்கள், ஒன்றை ஒன்று தொடர்கின்றன. நம் மனதுக்குள்ளே நிகழ்ந்த எண்ண விந்தைகள், எதிரேயிருப்பவரின் மனத்திலும் புகைப்படம் போல் விழுகின்றன. ஆனால், அப்படித் தெளிவான, கச்சிதமான, 'எண்ணப் புகைப்படங்'களை, நாம் பிறருக்கு நம் பேச்சிலே, எப்போதும் வழங்கி வருகிறோமா? அதுதான் இல்லை. அநேக சமயங்களில், நாம் சொற்களைப் பிரயோகிக்கும் விதம், பிறருக்கு நம் எண்ணங்களைத் தெரிவிப்பதில்லை; அவர்களுக்குத் தலைவேதனையைத் தான் உண்டாக்குகிறது.

பல வருஷங்களுக்கு முன், ஜே. பி. பிரீஸ்ட்லீ என்ற பிரபல ஆங்கில ஆசிரியர், ஒரு ரயில் வண்டியில் பிரயாணம் செய்து கொண்டிருந்தார். அப்பொழுது, இரண்டு நாகரிகப் பெண்மணிகள், 'கீச்சுக் கீச்சு' என்று ஏதோ பேசிக்கொண் டிருந்தார்கள். அதைக் கவனித்துக்கேட்ட அவருக்கு; அவர்கள் என்ன பேசுகிறார்கள் என்றே புரியவில்லை. பின்னே ஏன் பேசினார்கள்? அந்தப் பேச்சின் பயன் தான் என்ன?

அவர்களின் பேச்சைப் பற்றிச் சிந்தித்த ஆசிரியர், இந்த முடிவுக்கு வந்தார்: "அவர்கள் பேசியதற்குப் பதிலாக, இனிமையான பீ, பா, போ என்ற ஒலிகளைச் செய்துகொண்டிருந்தால், ஒன்றும் மோசமாய்ப் போயிருக்காது. அதைவிட, இருவரும் சேர்ந்தாற்போல் பாடியிருந்தால், இன்னும் தரமாயிருக்கும். ஆனால்.........உண்மையில் அவர்கள் பேசிக்கொண் டிருக்கவில்லை; பாடிக்கொண் டிருந்தார்கள் என்றே தோன்றுகிறது. அவர்கள் மிக்க களிப்போ டிருந்தார்கள்; அவர்களின் குரலோ இன்னிசைதான்......ஏதாவது கருத்து மட்டில் அவர்களின் பேச்சிலே குறுக்கிட்டிருக்குமானால்; அது கொடிய துராக்கிரமணமாகவே இருந்திருக்கும். கருத்து என்பது அநாவசியமான சங்கதி........"

ஆசிரியர் இதைக் கேலியாகத்தான் எழுதியிருக்கிறார். இத்தகைய அர்த்தமற்ற பேச்சு, எங்கும்தான் நிறைந் திருக்கிறது. வார்த்தைகளைச் 'சள, பள! சள, பள!' என்று பலர்

பேச்சுப் பேசுவது, கருத்தை வெளியிட அல்ல, தலைவேதனை உண்டாக்கவே என்பது போல் இருக்கிறது அநேக சமயங்கள் நம்முடைய சம்பாஷணைகள். சம்பாஷணை என்பது, மனிதநாகரிகத்துக்கே ஆணிவேர் போன்ற மூல சூட்சுமமாகும். அதை அழகாய்ச் செய்யத் தெரியவேண்டாமா?

கொட்டி விடுகிறார்கள். பலர் என்ன, நம்மில் ஒவ்வொருவருமே அநேக சமயங்களில் இப்படிச் செய்கிறோம். பிறர் இவ்வாறு பேசும் போதுதான், நமக்கு இந்தத் தலை வேதனை புரிகிறது. ஆனால், நாம் பிறருக்கு எத்தனை ஆயிரம் தடவைகள் இந்தத் தலைவேதனையை உண்டாக்கியிருக்கிறோம் என்பதை ஆண்டவன்தான் அறிவார்.

கொஞ்சநாள் வரையில், நீங்கள் ஒரு விரதத்தை அனுஷ்டித்துப் பாருங்கள். நாலு பேர் கூடும் இடங்களில், நீங்கள் எவ்வளவு குறைவாகப் பேச முடியுமோ அவ்வளவு குறைவாகப் பேசுவதென்றும், முடிந்தால் முழு மௌனம்கூடச் சாதிப்பதென்றும் சங்கல்பம் செய்யுங்கள். மனிதர்கள் பேசும் பேச்சு, எப்படியெல்லாம் செல்லுகிறதென்று காண்பீர்கள். எங்கேயோ ஆரம்பிக்கும் பேச்சு, எங்கேயோ போகும். ஒருவர் சொன்னதற்குச் சரியான பதிலில்லாமல், மற்றொருவர் ஏதோ பேசுவார். அவரவர் பெருமையையும் திறமையையும் வெளியே காட்ட, ஒவ்வொருவரும் முயன்றுகொண்டிருப்பார்கள். ஆனால், எவர் பெருமையும் திறமையும் வெளிப்படமட்டில் செய்யாது. அதோடு போனாலும் பாதகமில்லை. சில சமயங்களில், தம்மையறியாமல் ஒருவர் குறுக்கிட்ட பேச்சோ, சொன்ன வார்த்தையோ, மற்றொருவரை அலட்சியம் செய்து அவமதித்ததுபோல அவருக்குத் தோன்றி, அவர் மனதைப் புண்படுத்திவிடுவதுமுண்டு. அதை அவர் அங்கே கூறி ஆற்றிக்கொள்ள முடியாது. அது உள்ளே புரையோடிக் கொண்டுதான் இருக்கும்.

'பெரிய மனிதர்கள், கருத்துக்களைப்பற்றிப் பேசுவார்கள்; நடுத்தரமானவர்கள், பண்டங்களைப் பற்றிச் சர்ச்சை செய்வார்கள்; கீழானவர்கள், மனிதர்களைப் பற்றி வம்பளப்பார்கள்' என்கிறார் ஓர் அறிஞர். இது ஓரளவு உண்மைதான்; அதாவது பெரும்பாலும் இப்படி நடக்கும். ஆனால், எதைப்பற்றிப் பேசினாலும், யாரைப்பற்றிப் பேசினாலும், கட்டுத் திட்டமற்ற 'சள்ளுவாய்'ப் பேச்சு, மேலே கண்ட உபத்திரவங்களை உண்டாக்கியே தீரும். இந்தக் குணம் ஒரு வியாதிபோல, பெரும்பாலோரைக் கெட்டியாகப் பீடித்திருக்கிறது. ஆனால், வியாதிகளைப் போல, இதன் அடையாளங்கள் வெளிப்படையாகத் தெரிவதில்லை. என்னென்னவோ கொடிய நோய்களையெல்லாம் குணப்படுத்த, அபூர்வ சிகிச்சைகளைக் கண்டுபிடித்து வருகிறார்களே; அம்மாதிரி இதற்கும் ஒரு மருந்தோ, சிகிச்சையோ கண்டுபிடிப்போரைக் காணோமே என்று இரங்கக் கூடத் தோன்றுகிறது.

வார்த்தைகளை நிறுத்து, நிறுத்துப் பேசவேண்டும்; நாலு பேர் மனோபாவங்களையும் நன்கறிந்துகொள்ள வேண்டும்; எழுந்த விஷயத்துக்குப் புறம்பான சொற்களை, அர்த்தமில்லாமல் கொட்டலாகாது; முடிந்தால் பரிபூர்ண மௌனமும் சாதிக்க வேண்டும்—இதுதான் பேச்சுக் கலையின் சூட்சுமம்.

★

ஸி. ஏ. க்யூ.—

உங்களுக்கு எப்போதும் பாதுகாப்பளிக்க



"ஸி. ஏ. க்யூ." இது ஒன்றேதான். அதைத் தயாரிப்பது ஸ்பென்ஸர் கம்பெனியார்தான்

நோய்கள் நம்மை அணுகாமல் தடுப்பதில் ஸி. ஏ. க்யூ. எவ்வளவு சக்தி வாய்ந்தது என்பதைச் சென்ற 30 வருஷங்களுக்கு மேலாக இதற்கு இருந்துவரும் பிராபல்யம் நிரூபிக்கிறது. இன்புளுயன்ஸா, டிங்கி ஜுரம், ஜலதோஷம், மார்ச்சளி முதலிய உபாதைகளைக் குணமாக்குவதில் இன்று ஸி. ஏ. க்யூ. தலைசிறந்து விளங்குகிறது. இதில் ஒரு டோஸ் சாப்பிட்டதுமே குண மேற்படுகிறது. டாக்டர்கள் எல்லோரும் க்ஷேமமான, நிச்சய குணமளிக்கும் மருந்தென்று இதை சிபார்சு செய்கிறார்கள். ஜலதோஷம், மார்ச்சளி இன்புளுயன்ஸா முதலியவைகளைத் தடுப்பதில் ஸ்பென்ஸர் கம்பெனியாரின் ஸி. ஏ. க்யூ. நிகரற்றது.

ஒரு புட்டி விலை ரூ. 1-4-0 :: மாத்திரைகள் ஒரு டப்பா ரூ. 1

ஸ்பென்ஸர் & கோ. லிமிடெட்

மருந்து வியாபாரிகள் :: சென்னை

ESTD. IN 1910. Head Office : CALCUTTA

INSURE WITH REPRESENT

THE ARYYA INSURANCE CO., LTD.

FOR

SAFETY, SERVICE & STRENGTH

For particulars, please apply to :

H. W. PRABHU, Esq., Chief Agent
For Rayalaseema, Mysore & Hyderabad States
HOLENARASIPUR (Mysore State.)

தமிழ் நாட்டின் ஒப்பற்ற

மாதப் பத்திரிகை "சக்தி" -/8

மாதப் புத்தகம் "குமரி மலர்" 1/-

புதிய வெளியீடுகள்

- சோவியத் ருஷ்யா
- யான் பெற்ற இன்பம்
- எப்படி எழுதினேன்?
- அக்கினி
- போரும் காதலும்
- டால்ஸ்டாய் கட்டுரைகள்
- இரு சகோதரிகள்
- சுகம் எங்கே?

உங்கள் நூல் நிலையத்துக்கு வேண்டிய
புத்தகங்கள் யாவும் கிடைக்கும்
இன்றே வருக!

அரு. இராமசாமி,
சக்தி, ஏஜண்டு, கண்ணுப்பிள்ளை வீதி, காரைக்குடி

திடீரென்று தோன்றுகிறாள் அப்ஸரஸ் போன்ற ஒரு பெண். ஒரே ரகளை. கடைசியிலே..............................?

திருவிழா

கோவை அ. அய்யாமுத்து

அஜீஸ்கான் சாயபு 'நாஸ்தா'வை முடித்துவிட்டு, ஹாய் என்று சோபாவில் சாய்ந்து, உக்கா பிடித்துக்கொண் டிருந்தார்.

அவருடைய பீபி, அருகில் அமர்ந்து ஆனந்தமாய் ஏதேதோ பேசிக் கொண்டிருந்தாள்.

பேப்பர் பையன் தினசரியை வீட்டுக்குள் வீசி யெறிந்துவிட்டு வேகமாய்ப் பறந்தான். விழுந்த பேப்பரைச் சாவதானமாய்ச் சென்றெடுத்தாள் பீபி.

உள்ளே நுழைந்தாள் ஒரு யௌவன மங்கை. வயது பதினெட்டுக்கு மேல் இராது. நூலே கலவாத சித்திர வேலை செய்த ஜரிகைச் சேலை உடுத்தி யிருந்தாள். அவள் நெற்றியில் அணிந்திருந்த ஜவ்வாதுப் பொட்டும், தலையில் சூடியிருந்த மல்லிகைப் பூவும், ஜம் மென்று அறை முழுவதும் மணம் வீசியது. இடுப்பிலே தங்க ஒட்டியாணம். காதிலே போட்டிருந்த வைரத் தோடு, நட்சத்திரத்தைப் போலப் பிரகாசித்தது ; டோலக் இரண்டும் நவீன முறையில் தொங்கிக்கொண் டிருந்தன. கழுத்திலே கல் இழைத்த சங்கிலி. வலது கையில் ஒரு டஜன் தங்க வளையல். இடது கையில் 'ரிஸ்டு வாட்சு'; பாம்புத் தோலால் செய்யப்பட்ட கைப் பையொன்று. காலிலே சிலிப்பர்.

அஜீஸ்கான் பேந்தப் பேந்த விழித்தார். பீபியின் உள்ளம் படபட என்று துடித்தது.

தேவகன்னிகை போன்று திடும் பிரவேசமாய் உள் நுழைந்த உருவத்தைக் கண்டு, பீபி திக்பிரமை யடைந்தாள். வீடு தவறி நுழைந்திருக்கலா மென்று அஜீஸ்கான் எண்ணினார்.

நங்கையைப் பின் தொடர்ந்து ஓர் ஆள் - வண்டிக்காரன் போல் தெரிகிறது - தோல் பெட்டி, படுக்கை, வெள்ளிக் கூஜா சகிதம் உள்ளே நுழைந்தான்.

ஆடவனைக் கண்ட பீபி, அதி வேகமாய் உள்ளே மறைந்து, திரைமறைவில் நின்று, பேராச்சரியத்துடன் கவனிக்கலானாள்.

"நீங்கள் யார் வீட்டுக்குப் போக வேண்டும்?" என்று சிறிது தடுமாற்றத்துடன் கேட்டார் அஜீஸ்கான்.

கேட்ட கேள்விக்குப் பதில் கூறாமல், பையைத் திறந்து ஒரு ரூபாயை எடுத்து வண்டிக்காரன் கையில் கொடுத்தாள் வந்தவள். அவன் அதைக் கண்குளிரப் பார்த்து, "ஆஹா! புண்யவதி! எவ்வளவு தயாளம்!" என்று வழக்கத்துக்கு விரோதமாய் வாழ்த்திக்கொண்டே சென்றான்.

"என்ன அஸரத்! யார் வீட்டுக்கு என்று கேட்டீர்கள்? ஏன், தங்கள் வீட்டுக்குத்தான். என்னைத் தெரியவில்லையா உங்களுக்கு?" என்று சொல்லிக் கொண்டே, அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தாள் நவீன மங்கை.

அஜீஸ்கான் பேந்தப் பேந்த விழித்தார். பீபியின் உள்ளம் படபட என்று துடித்தது.

"உங்களைத் தெரியவில்லையே, நான் கண்டதில்லையே!" என்றார் அஜீஸ்கான் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டு.

கலகல என்று சிரித்தாள் யுவதி. அவள் பற்கள்; முத்துக்கள் போலப் பளிச்சென்று தெரிந்தன.

"பேஷ்! வந்தவளை வெகு அழகாக உபசரிக்கிறீர்களே! அதுவே போதும். ஓகோ! தெரிந்தது! உங்கள் பீபி உள்ளே இருக்கிறாள் என்று பயம் போலும்! வேண்டாம் என்றால் போய்விடுகிறேன். தெரியாது கிரியாது, பார்த்ததில்லை கீர்த்ததில்லை என்றெல்லாம் பாசாங்கு செய்வானேன்? இதோ! என் தாயார் கொடுத்தனுப்பிய கடிதம்" என்று, பையிலிருந்து கடிதமொன்றெடுத்து மேஜையின் மீது வைத்தாள். கடிதத்தைக் கையிலெடுத்தார் அஜீஸ்கான். சந்தேகமில்லை. அவருடைய விலாசந்தான் எழுதப்பட்டிருந்தது. அவருக்குப் பைத்தியம் பிடித்துவிடும் போல் இருந்தது. கைகள் நடுங்கக் கடிதத்தைப் பிரித்தார், பார்த்தார், படித்தார்:

"அன்புள்ள அஸரத் அஜீஸ்கான் சாயபு அவர்கட்கு, உபய க்ஷேமம். வந்தனம். தாங்கள் இங்கு வந்திருந்த சமயம் நேரில் தெரிவித்தபடி என் மகள் கோகிலத்தை அனுப்பி யிருக்கிறேன். உங்கள் இருவருடைய க்ஷேமத்துக்கும் அடிக்கடி கடிதம் எழுதவும்.

தங்கள் நன்றியுள்ள

செல்லம்."

"ஹரே! அல்லா! எகியா! செல்லம், கோகிலம், நம்பள்க்கு ஒன்றும் புரியவில்லையே" என்று அரற்றினார் அஸரத்.

"நீங்கள் நம்ப ஆத்துக்கு வந்து ஒரு மாதங்கூட ஆகவில்லையே! வாஹ்வா! அதற்குள்ளாகவா ஒன்றும் தெரியாமலும் புரியாமலும் போய்விட்டது?" என்று பரிகாசமாய்ச் சிரித்தாள் கோகிலம்.

திறந்த வாய் திறந்தபடியே கோகிலத்தைப் பார்த்தார் அஜீஸ்கான். அவர் மெய் தளர்ந்தது, நா குழறியது, வாய் வறண்டது, சொல் மறைந்தது. அவர் தலையும் சுழலும் போலிருந்தது.

திரையை விட்டு வெளியே தோன்றினாள் பீபி.

"தெரியாது, கிரியாது! என்னத்துக்கு இந்த ஜாலமெல்லாம்? நான் வேணுமானல் போய் விடுறேன். அப்போ நல்லா, வெகு நல்லாத் தெரியும் இவளை உங்களுக்கு" என்று ஒவ்வோர் எழுத்தையும் அழுத்தந் திருத்தமாக உச்சரித்தாள்.

"பாருங்கம்மா! நீங்களும் ஒரு பெண், நானும் ஒரு பெண். இந்த மனுஷன் இப்படி முழுப் பூசனிக்காயைச் சோற்றில் மறைக்கப் பார்க்கலாமா?" என்ருள் கோகிலம்.

"நீயும் ஒரு பெண்ணு! பெண் ரூபத்தில் வந்த ஒரு பிசாசு! சைத்தான்! மரியாதையாய் வெளியில் போய்விடு. இல்லா விட்டால் துடைப்பக் கட்டைப் பூசை கிடைக்கும்" என்று கர்ஜித்தாள் பீபி கண்களில் தீப்பறக்க.

பீபியைப் பார்த்தால் பேய் போல் இருந்தது அஜீஸ்கான் கண்களுக்கு. கோகிலமோ இந்திர லோகத்து ரம்பை போல் விளங்கினள்.

"ஆமாம், தாயே! நீ பேசாமல் போய்விடு. இந்த பீபி நிரம்பக் கெட்டவள். அவளுக்குக் கோபம் வந்தால் ஆண்டவனாலும் அடக்க முடியாது" என்று முறையிட்டார் அஸரத்.

"ஓஹோ! நான் நிரம்பக் கெட்டவள். இந்தச் சிறுக்கி நல்லவள்! தெரிந்தது உங்கள் மனசிலுள்ள சங்கதி. உங்களை முன்பின் தெரியாமல், இப்படி ஒரு பெண் தைரியமாக வரவே மாட்டாள். நீர் செய்வது ஜாலம். சொல்வது பொய். நான் போகிறேன் என் அப்பன் வீட்டுக்கு. ஊம், கூப்பிடு ஒரு ஜட்கா. இல்லா விட்டால் நானேபோய்விடுவேன் நடுத்தெருவுக்கு. கோஷா, கீஷா எல்லாம் காற்ருய்ப் பறந்து விடும்."

அஸரத்தின் முகம் சூடுபட்ட கத்தரிக்காயைப் போல் வதங்கி விட்டது. அவரையும் மீறிக் கோபம் வந்துவிட்டது.

"நீ வெளியே போகிருயா, இல்லையா?" என்று அதட்டினர் கோகிலத்தை.

அவள் உட்கார்ந்தபடியே அலட்சியமாக, "சேச்சே! நீர் என்ன மனுஷன்! ஒரு பொம்மனாட்டிக்குப் பயந்து என்னை மறுத்தது மல்லாமல், விரட்டவும் பார்க்கிறீரே!" என்ருள்.

"அப்படிக் கேளு! காறித் துப்பு அவர் முகத்தில்" என்ருள் பீபி.

எழுந்தார் அஜீஸ்கான். கோகிலத்தின் கழுத்தைப் பிடித்து நெக்கித் தள்ளினர்.

"அம்மா! உங்க கைக் குட்டை" என்ருெரு கைக் குட்டையுடன் உள்ளே நுழைந்தான் வண்டிக்காரன்.

பீபி உள்ளே ஓடினள்.

நாற்காலியி லிருந்த கோகிலம் தரையில் தடுமாறி விழுந்தாள்.

பார்த்தான் வண்டிக்காரன். "அடே சண்டாளா! எவ்வளவு தைரியம் உனக்கு! இப்படியும் ஒரு பெண்ணைச் செய்யலாமா" என்று கத்தினன்.

பாய்ந்தார் அஜீஸ்கான் வண்டிக்காரன்மேல். அவன் கன்னத்திலும் ஓங்கிப் பளீரென்று ஓர் அறை விட்டார்.

அடிபட்டவன் வெளியே ஓடினன். "போலீஸ்! போலீஸ்! கொலை! கொலை!" என்று அவன் தெருவில் போட்ட சத்தம் வீட்

டுக்குள் விருந்த அஜீஸ்கானின் காதில் விழுந்தது. பீபியின் காதிலும் விழவே, அவள் உள்ளே மூர்ச்சித்து விழுந்தாள்.

அடுத்த நிமிஷம் போலீஸ் சப் இன்ஸ்பெக்டரும், இரண்டு கான்ஸ்டேபிள்களும், வண்டிக்காரன் பின் தொடர, உள்ளே நுழைந்தார்கள்.

கீழே விழுந்து கிடந்த கோகிலத்தைத் தூக்கி, நாற்காலியில் அமர்த்தி, வெள்ளிக் கூஜாவையெடுத்து, தண்ணீரை டம்ளரில் ஊற்றி, அவள் முகத்தில் தெளித்துக் குடிக்கவும் கொடுத்து, மேஜை மீதிருந்த பேப்பரை எடுத்து விசிறி, ஆசுவாசப்படுத்தி விட்டு, அஜீஸ்கானைப் பார்த்து:

"என்ன சாயபு! இந்தப் பெண்ணைச் சாகடித்துவிட்டீரே! என்ன சொல்லுகிறீர்?" என்று கேட்டார் சப் இன்ஸ்பெக்டர்.

"இல்லை...அவள்......அக்கிரமமாய்......"

"அந்தக் கதையெல்லாம் போலீஸ் ஸ்டேஷனில் போய்ப் பேசிக் கொள்ளலாம். மரியாதையாய்ப் புறப்படும்."

அஜீஸ்கான் சாயபு நடுத்தர வயதுள்ளவர். ஆண்டவனுக்குப் பயந்தவர். தேசாபிமானி. யாதொரு தப்புத் தண்டா, தகரார்களும் இதுவரை அறியாதவர். அவர் போலீஸ் ஸ்டேஷனுக்குப் போனது கிடையாது. கச்சேரி வாசலை மிதித்ததில்லை. அவரை ஸ்திரீலோலன் அல்ல என்று சொல்ல முடியாவிட்டாலும், மிக்க மிதமானவர் என்று கூசாமல் சொல்லலாம். எங்காவது எப்போதாவது போய் வருவது உண்மைதான். ஆனால், கோகிலத்தை இதற்குமுன், அவர் பார்த்தது கிடையாது. செல்லத்தின் பெயர்கூட, அவர் கேட்டதில்லை. கோகிலம் வந்த மர்மம், அவருக்குப் புரியவே இல்லை. ஆகவே, அவர் கோபத்துக்கு நியாயம் இல்லாமலு மில்லை. என்றாலும், போலீசுக்குப் போவதா? ஊரெல்லாம் இப்படி யொரு விஷயம் நடந்ததெனத் தெரிவதா? ஜனங்கள் என்ன நினைப்பார்கள்? 'போலீஸ் ஸ்டேஷனுக்கு நட' என்றதும், அஜீஸ்கானின் உடம்பெல்லாம் வியர்த்துச் சட்டையெல்லாம் நனைந்து விட்டது. இந்த விபத்திலிருந்து எப்படி மீளுவதென்று ஆலோசிக்கக் கூட, அவருக்குத் தைரியம் பிறக்கவில்லை. நல்ல வேளையாய், அஜீஸ்கானின் ஆப்த நண்பரான சிவசாமி உள்ளே நுழைந்தார். அஜீஸ்கானுக்குச் சற்றே தைரியம் பிறந்தது.

"வாங்க ஸார்! மிஸ்டர் சிவசாமி! நீங்கள் வந்தது ஒரு விதத்தில் நல்லதாயிற்று. பாருங்கள் இந்தப் பெண்ணை இந்தச் சாயபு அகாரணமாய் அடித்து இம்சை செய்திருக்கிறார்" என்றார் சப்-இன்ஸ்பெக்டர்.

"பாருங்கள், எசமான்! என் கன்னம் வீங்கிவிட்டது. யாதொரு காரணமும் இல்லாமல் என்னையும் இந்தச் சாயபு அடித்து விட்டார்" என்றான் வண்டிக்காரனும்.

சிவசாமியும் அஜீஸ்கானும் ஓர் அறைக்குள் நுழைந்து, சிறிது நேரம் பேசிவிட்டு வந்தார்கள்.

"இன்ஸ்பெக்டர்! தங்களிடம் தனியாக ஒரு வார்த்தை சொல்ல வேண்டும்" என்றார் சிவசாமி.

"சும்மா தாராளமாய்ச் சொல்லுங்கள். நமக்கிடையில் ரகசியம் எதற்காக?"

"இல்லை-இருந்தாலும்......"

சப் இன்ஸ்பெக்டர் கான்ஸ்டே பிள்களைப் பார்த்தார். அவர்கள் வெளியில் போய்விட்டார்கள்.

"ஏதோ நடந்தது நடந்து விட்டது. யார்மேல் தப்பு என்ற விசாரணை வேண்டாம். இந்தப் பெண்ணைப் போகச் சொல்லுங்கள். அவளை அடித்ததற்காக, ஏதாவது கொடுத்துச் சமாதானப் படுத்தி விடலாம்" என்று அவளைக் கேட்டார் சிவசாமி.

"என்னம்மா! அப்படிச் செய்து விடலாமா?" என்ருர் சப் இன்ஸ்பெக்டர்.

கோகிலம் பேசாது மௌனமாயிருந்தாள்.

சிவசாமி, அஜீஸ்கானின் காதில் ஏதோ சொன்னர்.

அஜீஸ்கான் உள்ளே சென்று, இரும்புப் பெட்டியைத் திறந்து, இரண்டு பச்சை நோட்டுகளை யெடுத்துக் கொண்டு வந்தார்.

என்ன ஆச்சர்யம்!

ஹாலுக்குள் ஒருவரும் இல்லை. வெள்ளிக் கூஜா, பெட்டி, படுக்கை ஒன்றையுங் காணேம்! கனவா, நினைவா என்று கண்களைத் தேய்த்து விழித்தார். மளமள என்று தெருவுக்குச் சென்ருர்.

குதிரை வண்டி யொன்றில் கோகிலமும், சப் இன்ஸ்பெக்டர் வகையருப் பேர்வழிகளும் ஏறிச் சென்றுகொண் டிருந்தார்கள். சிவசாமி, தெருத் திண்ணை மீது நின்றுகொண் டிருந்தார். தெருவிலே ஜனக்கூட்டம். அஜீஸ்கானைக் கண்டதும் ஒரே ஆரவாரம்!

"என்ன அஜீஸ்! எப்படி நம்ம ஊர் மாரியம்மன் திருவிழா?" என்ருர் சிவசாமி.

அவரை யறியாமலே, அஜீஸ்கானுக்குச் சிரிப்பு வந்துவிட்டது.

"அந்தப் பெண் வேஷம் போட்டிருப்பது ஒரு பையன்தானு!" என்று கேட்டார் சில நிமிஷங்கள் கழித்து.

"இன்னுமா உனக்குச் சந்தேகம்? நம்ம சேஷையர் பிள்ளை மணியை நீ பார்த்ததே கிடையாதா?" என்ருர் சிவசாமி.

★

அமெரிக்கர் இயற்கை

ஒரு சமயம் வெஸுவியஸ் எரிமலையின் உச்சியில் போய் நின்றுகொண்டு, அதன் வாயில் பொங்கிக்கொண் டிருக்கும் தீக்குழம்பைக் கண்ட ஓர் அமெரிக்கப் பிரயாணி, மற்ருேர் அமெரிக்கப் பிரயாணியிடம், "அடேயப்பா! என்ன காந்தல் காந்துகிறது! நரகத்திலே எரியும் அக்கினி மாதிரியல்லவா வேகிறது!" என்ருன்.

பக்கத்திலே நின்றுகொண் டிருந்த ஓர் ஆங்கிலப் பிரயாணி, "என்ன ஆச்சர்யம்! இந்த அமெரிக்கப் பசங்கள் போய்ப் பார்த்து வந்திராத இடமே கிடையாதையா!" என்று தன் நண்பனிடம் கூறினன்.

சத்துருவின் ஆங்கிலம்!

பிரபல ஜெர்மன் ஸ்தானிகரான ஹெர் வான் ரிப்பன்டிராப்புக்கு இதாலிய பாஷை தெரியாது. முஸலினியின் மருமகனை கவுன்ட் ஸியானேவுக்கு ஜெர்மன் பாஷை தெரியாது. ஆகையால், இருவரும் சந்தித்துப் பேசுகையில், தங்கள் பொதுச் சத்துருவான பிரிட்டிஷ்காரரின் பாஷையாகிய ஆங்கிலத்திலேயே சம்பாஷிக்கிருர்கள். ஏனெனில், இருவருக்கும் அந்த பாஷை நன்ருய்த் தெரியுமாம்!

உலகம் முன்னேறுகிறதா?

'ஓ! நம் பெரியவர்கள் காலத்திலே, உலகத்திலே தேனும் பாலும் ஆறாய் ஓடியது. அறிவிலே அவர்கள் அசகாய சூரர்கள்' என்றெல்லாம் புகழ்வது சர்வ சகஜமாயிருக்கிறது. இது 'போன முயல் பெரிய முயல்' என்ற கதைதானா? அல்லது இதில் ஏதாவது உண்மை உண்டா? எந்த அளவில்? இதையெல்லாம் ஆராய்கிறார் நண்பர்.

ந. சிதம்பர சுப்ரமண்யன்

சோமு அலுப்புடன் வந்தான். அவனது முகத்தில் ஏமாற்றம் பிரதிபலித்தது. வேலைக்காக அவன் போய்ப் பார்க்காத பிரமுகர்கள் இல்லை; கம்பெனிகளும் பாக்கியில்லை.

"ஏன் ஒன்றும் பிரயோசனமில்லையோ?" என்றேன்.

"ஒன்றும் சுகமில்லை. ஏதாவது கிடைக்கும் என்றும் தோன்றவில்லை. முன் காலத்தில் நம் பெரியவர்களுக்கு யோகம் அடித்தது. சுலபமாகச் சம்பாதித்தார்கள். இப்பொழுது பிழைத்திருப்பதே சாத்தியமில்லாமல் போய்விடும்போலிருக்கிறது. வெகு மோசம்" என்றான்.

"வேலை கிடைக்காவிட்டால், காலத்தை ஏன் குறை சொல்லுகிறாய்?" என்றேன்.

"காலம்தான் குற்றவாளி. உன்மேலும் என்மேலும் குற்றமில்லை. நம் தகப்பனார் பாட்டனார்களைவிட, யோக்கியதையிலும் குணத்திலும் நாம் மோசமில்லை. பின் ஏன் இப்படித் திண்டாட வேண்டும்? காலம்தான் இவ்விதம் நம்மை ஆட்டிவைக்கிறது."

"இதோ பார், சோமு! வர வர நாகரிகம் சீர் குலைந்து வருகிறதென்றுதான் உன் பேச்சுக்கு அர்த்தம். அதை நான் ஒப்புக்கொள்ளவே முடியாது. நேற்றைய தினத்தைவிட இன்று நாம் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறோம் என்று நீ சொல்லுகிறாய்?"

"ஆமாம், அதிலென்ன சந்தேகம்? முன்பு ஜனங்கள், சந்தோஷமாகவும் ஆரோக்கியமாகவும் திருப்தியோடும் வாழ்ந்துவந்தார்கள். ஆனால், இப்பொழுதோ, எங்கே பார்த்தாலும், அதிருப்தி, கொடுமை, கஷ்டம் இவைதான் நிரம்பியிருக்கின்றன. இது வளர்ச்சிக்கு அறிகுறியா?"

"சோமு! சந்தோஷமும் திருப்தியும் மனதைப் பொறுத்தவை. எருமை மாட்டுக்கு எப்பொழுதும் திருப்திதான். அதைக் கேளு! அதற்குக் குறையே கிடையாது. எந்தக் காலத்திலேயும் ஒரே மாதிரியான சந்தோஷத்தைக்கொண்டிருக்கிறது அது. உனக்கு மாத்திரம் அதிருப்தி ஏற்படுவானேன்?"

"சந்தோஷம் மனதைப் பொறுத்தது என்பது சரி. ஆனால், மனிதன் மனோ வளர்ச்சியில் எருமையைப் போலத்தான் முன்னேறியிருக்கிறான் என்றே நான் சொல்லுகிறேன்."

"அப்படிச் சொல்ல முடியுமா? நாளுக்கு நாள் மனிதன் அறிவிலும் அனுபவத்திலும் முன்னேறியே வருகிறான். அதுவே இயற்கை நியதியுமாகும். அதற்கு மாறாக நடப்பது சாத்தியமேயில்லை."

"வேதோபநிஷத்துக்களுக்கு மேல், மனிதன் ஞானத்தின் சிகரத்தை, எட்டிப் பிடிக்கவுமில்லை; எட்டிப் பிடிக்கவும் முடியாது. அதுதான் மனித அறிவு வளர்ச்சிக்கு எல்லை. அதற்குமேல், பின்னால் வந்தவர்கள் என்ன திட்டமான புதுத் தத்துவங்களைக் கண்டு பிடித்துவிட்டார்கள்? சொல், பார்ப்போம்" என்று சொல்லிக்கொண்டே வந்தவன், "எனக்கு நாழியாகிவிட்டது; நான் போய் வருகிறேன்" என்று கூறி, போய்விட்டான்.

அநேகம் தடவைகள் எனக்கும் அவனுக்கும் இவ்வாறு வாக்கு வாதங்கள் நடக்கும். உலகம் நாளுக்கு நாள் பின்னோக்கிப் போய்க்கொண்டிருக்கிறது என்ற கொள்கையுடையவன் சோமு. நானோ, உலகம் நிச்சயமாக முன்னேறிக்கொண்டு வருகிறது என்ற திட்டமான அபிப்பிராயம் உடையவன். வேலை கிடைக்காமல் அலுத்து வந்த அவனுடன் மேலே விவாதத்தை நடத்தவில்லை.

ஒரு விதத்தில் அவன் சொல்லுவது சரிதான். புத்தனும் இயேசுவும் அசோகனும் வந்து எவ்வளவோ சீர்திருத்த முயன்றும் உலகம் திருந்தமாட்டேனென்கிறது; நாய் வாலைப்போல, பழையபடியே இருந்துகொண்டு வருகிறது; சில விஷயங்களில் பின்னோக்கிக்கூடப் போய்க்கொண்டிருக்கிறது. யுத்த வெறியும் மிருக பலமும் யூதர்களுக்குச் செய்யும் அநீதங்களைப் போன்ற அக்கிரமங்களும், ஏகாதிபத்திய மனப்பான்மையும், நிற வேற்றுமையும், முதலாளித்துவமும், வகுப்புச் சச்சரவும், வேலையில்லாத் திண்டாட்டமும், வறுமையும் நிறைந்த இந்தத் தற்கால உலக சமுதாயம் முன்னேறியிருக்கிறது என்று எப்படிச் சொல்வது? இப்படிக் கேட்பது, வைரத்தின் ஒரே ஒரு பட்டையைக் கொண்டே அதை மதிப்பிடுவதுபோலாகும். பல பட்டைகளையும், முழு வைரத்தையுமே பார்த்தால்தான், வைரத்தின் உண்மை மதிப்புத் தெரியும். அதேபோல்தான் உலகப் போக்கை அதன் பல துறைகளையும் கொண்டே மதிப்பிடவேண்டும்.

உலகம் முன்னேறிக்கொண்டுதான் வருகிறது. மனிதனுக்கும் சமூகத்துக்கும், மனிதனுக்கும் மனிதனுக்கும் உள்ள கடமைகளும் உறவுகளும், தெளிவடைந்து வருகின்றன. 'மனிதனின் வாழ்க்கை உயரவேண்டும்; நாகரிகமாக வாழ வேண்டும்' என்ற எண்ணங்கள் பரவி வருகின்றன. 'குற்றம் செய்தவன் பாவி; தண்டனையடைய வேண்டியவன்' என்று நினைத்தது போக, 'அவன் சந்தர்ப்பத்தாலும், மனோ விகாரங்களாலும் குற்றம் செய்தவன்; அவனைச் சீர்திருத்த வேண்டியது சமூகத்தின் கடமை' என்ற மனப்பான்மை வளரவில்லையா?

தவிர, ஒரு காலத்தில் சொத்து என்பது மகா புனிதமான வஸ்துவாயிருந்தது. பிறர் சொத்தை

அபகரித்தவனின் உயிரையே அக்காலத்து மனிதர்கள் அபகரித்து வந்தார்கள். உயிரை விடச் சிறந்ததாகச் சொத்துக்களைக் கருதினார்கள். சில நூற்றுண்டுகளுக்கு முன்பு, இங்கிலாந்தில், திருட்டு வழக்குகளில், திருடர்களின் சார்பாக வாதிக்க வந்த வக்கீல்களின் காதுகளையே நறுக்கிவிடும்படி அந்த நாட்டுச் சர்க்கார் உத்திரவிட்டார்களாம்! சொத்தை அபகரிப்பது அவ்வளவு பயங்கரமான குற்றமாக அந்தக் காலத்தவரால் கருதப்பட்டது.

ஆனால், இப்போது 'சொத்து வைத்துக்கொண்டிருப்பவன் தான் திருடன்' என்று சொல்லும் கட்சி வந்துவிட்டது. 'என் சொத்து என்று ஒருவன் சொல்லிக்கொள்ள உரிமை ஏது?' என்று அவர்கள் கர்ஜிக்கிறார்கள். மனிதனுக்கும்மனிதனுக்கும் ஏற்றத் தாழ்வுகளை உண்டுபண்ணும் இந்தச் செல்வத்தையும் சொத்துக்களையும், பொதுவுடைமையாக்க முயலுகிறார்கள். ஆயிரமாயிரம் வருஷங்களாக, மனித சமூகத்தை வாட்டி வந்த வறுமைக்கு மருந்தாக அபேதவாதத்தைக் குறிப்பிடுகிறார்கள். 'ஏழையாய்ப் பிறந்தவன், கடைசிவரையில் சோற்றுக்கு இல்லாமல் கஷ்டப்பட்டுச் சாகவேண்டியது; பணக்காரர்களோ, ஏழைகளின் உழைப்பினால், ஆனந்தமாகச் சுக வாழ்வு வாழவேண்டியது—இது தான் நீதியோ?' என்று நியாயம் கேட்கிறார்கள். இதெல்லாம் முன்னேற்ற லட்சணங்களா? பின்னேக்கிப் போவதன் சாட்சியங்களா?

'எப்பொழுதெல்லாம் தர்மத்துக்குப் பங்கம் நேரிடுகிறதோ அப்பொழுதெல்லாம், தர்மத்தை ஸ்தாபிப்பதற்கும், அதர்மம் நாசமடைவதற்கும், நான் அவதாரம் செய்வேன்' என்று கண்ணன் பார்த்தனுக்கு வாக்குறுதி கொடுத்திருக்கிறார். ஆனால், தர்மத்தை ஸ்தாபிப்பதற்கு, இதுவரையில் - ஈசுவரனாயிருந்தாலும் சரி, மனிதராயிருந்தாலும் சரி-மிருக பலத்தைத்தான் உபயோகிக்கவேண்டி வந்தது.

'சத்தியத்தையும் தர்மத்தையும், மிருக பலத்தினால் காப்பாற்ற வேண்டுமா? ஆத்ம பலம் மிருக பலத்தைவிடப் பெரியதில்லையா?' என்று கேட்கிறார் தற்கால மனிதரொருவர். பிறரைக் கொன்று கொண்டிருந்தவனே வீரன் என்று நினைத்தது போக, பிறருக்காகச் சகல கஷ்டங்களையும் ஏற்கத் தயாராயிருக்கும் மனோவலிமை கொண்டவனை மதிக்க, நாம் பழகிக்கொள்ள வில்லையா?

'இந்த உலகத்திலுள்ள சகலமும் ஈசுவரனால் வியாபிக்கப்பட்டிருக்கிறது' என்ற வாக்கியத்துக்கு மேலான உண்மையை நாம் தெரிந்துகொண்டாலும் சரி, தெரிந்து கொள்ளாவிட்டாலும் சரி; 'எல்லாம் ஒன்று' என்ற தத்துவத்தை வாழ்க்கையிலே அமுலுக்குக் கொண்டு வரும் அபேதவாதக் கொள்கையும் அஹிம்சா முறையும், இப்பொழுதுதான் ஜனங்களின் மனத்தில் பரவிவருகின்றன. சகல மனிதருக்கும், நன்மையைப் பயக்கும் அபேதவாதத்தையும், மனத்தினால்கூடப் பிறருக்குத் தீங்கு நினைக்க முடியாத அஹிம்சா முறையையும் எல்லோரும் கைப்பிடித்து நடக்கும் நிலைமை வந்துவிடுமானால்......அப்புறம் தேவர்களன்றோ மனிதர்களைக் கண்டு பொறாமைப் படுவார்கள்?

★

'மதனகாமராஜன்,' 'அனந்த சயனம்,' 'குமாஸ்தாவின் பெண்,' 'பிரஹலாதா' படங்களில் புகழ்பெற நடித்த தென்னாட்டுத் தலைசிறந்த நடிகை எம். வி. ராஜம்மா சொல்லுகிறார்:

"நான் எப்பொழுதும் அருந்துவது நரஸூஸ் காபிதான். நரஸூஸ் காபியின் தனிப்பட்ட நறுமணத்திற்காகத்தான் நான் அதை விரும்புகிறேன்."

M.V. Rajamma.

புகழ்பெற்ற ஸினிமா நக்ஷத்திரங்கள் விரும்புவது.

நரஸூஸ் காபி

M N K.—17 TM.

60% மிச்சம்:
பெட்ரோல் செலவு ஒழிந்தது



*ஸ்டார்டிங் அதிசுலபம்:
சீக்கிரத்தில் ஸ்டார்ட் ஆகிவிடும்.

*மும்முறை வடிகட்டும் வசதி:
கியாஸை வேறெந்த பிளாண்டையும் விட நன்ருக சுத்தப் படுத்துகிறது.

*இலவச ஸர்வீஸ்:
ஓட்டும்போது சில்லரைத் தொந்தரவுகள் இருந்தால், டிஸ்ட்ரிப்யூட்டர்கள் சரிப்படுத்தித் தருவார்கள்.

*அதிக பளுவின்மை:
சரிசமமான கனம் நிரவப்பட்டிருப்பதால் டயர் தேய்வு குறைவு. பிரேக்கிற்கு பந்தோபஸ்து அதிகம்.

*நேர்த்தியான தோற்றம்:
அழகிய ஒழுங்கான அமைப்பு.

இந்தப் பிளாண்டின் திறமையைப் பிரத்யக்ஷமாகக் காண்பிக்கும்படி டிஸ்ட்ரிப்யூட்டர்களிடம் கேளுங்கள்.

இந்தியா முழுவதிலும் மோட்டார் சொந்தக்காரர்களில் 4000 பேருக்குமேல் T. V. S. கியாஸ் பிளாண்டையே உபயோகிக்கின்றனர். காரணம் என்ன? மோட்டார் வைத்துக்கொள்ளும் செலவு நிதானப் படுத்துவதற்கு இதுவே சரியான வழி என்று அவர்கள் உணர்ந்துவிட்டார்கள். அமைப்பிலும் உழைப்பிலும் மிகவும் நவீனமான சீர்திருத்தங்கள் யாவும் T. V. S. பிளாண்டில் இருக்கின்றன. மோட்டாரில் இந்த பிளாண்டை இணைப்பதும் ஓட்டுவதும் சுலபமாக இருக்கிறது. அதுமட்டுமல்ல. பிளாண்டை வைப்பதிலுள்ள செலவு முழுதும் சொற்ப காலத்துக்குள்ளாகவே ஏற்படும் சிக்கனத்தால் ஈடு செய்யப் படுகிறது. T. V. S. பிளாண்டின் சில விசேஷ அம்சங்கள் மேலே தரப்பட்டுள்ளன.

T. V. சுந்தரம் அய்யங்கார் & சன்ஸ்

மதுரை, சென்னை

'துறைவன்'

வான வயலினிலே—ஆயிரம்
வண்ணம் படைத்திடவே
மோனப் பிரமனவன்—விதைத்த
முத்துவிதை யிவையோ ?

மைக்குழல் மங்கையிரா—வந்து
மையல்செய் போதினிலே
மெய்க்களி பூண்டிடவே—உதிர்ந்த
மென்னகை ரத்தினமோ ?

சந்திரத் தேவியவள்—அன்னச்
சாயலைக் காட்டிவர
முந்திவழி விரித்த—நல்ல
முல்லையிதழ் தாமோ ?

நீலத்திரை விடுத்த—வான
நாடகப் பேரரங்கில்
கோலக்கலை ருசிக்க—வந்த
கொள்ளைவிழி யாமோ ?

நாயகன் வந்திடுவான்—என்று
நங்கை மதியமவள்
மேயதோர் கோலமேயோ—இந்த
மென்சுடர் வண்ணமெலாம் ?

காதலர் செய்கையெலாம்—ஒருவர்
கண்டிடா ரென்றிருக்கச்
சீதளக் கண்சிமிட்டி—களுக்கெனச்
சிரிக்கும் கள்ளரடா !

★

செல்வர்கள் மோட்டார்களிலும் ரிக்ஷாக்களிலும் போய்க்கொண்டே யிருக்கிறார்கள். அவனுடைய தகர டப்பா காலியாகக் கிடக்கிறது. அவனோ........

அனாதை

மீ. வி. சபரிராஜன்

எந்த ஊரோ, எந்தத் தேசமோ, யார் கண்டார்கள்? அவனுக்கு இந்த ஊர் மண் விதித்திருக்கிறது. வேஷ்டி ஆயிரங் கந்தல். மேலே போட்டிருக்கிற சட்டையை நெருப்பில் போட்டாலும் வேகாது. தலைமயிர், கரடி புலி வாழும் காடுபோ லிருக்கிறது. உடம்பி லிருக்கிற எலும்புகளைத் தனையையும், ஒன்று பாக்கியில்லா மல் எண்ணிவிடலாம். எலும்புக் கூடு உயிர்பெற்றுச் சுடுகாட்டி லிருந்து வந்திருக்கிறதோ?...... இல்லை, நிஜமான மனிதன்தான். முகத்தில் பிரேதக் களை; ஏக்கம். பாவம், சாப்பிட்டு எத்தனை நாள் ஆகிறதோ? நேற்று ராத்திரியி லிருந்து ஒரே இடத்தில் படுத் திருக்கிறான்.

செல்வர்கள் ரிக்ஷாக்களிலும் மோட்டார்களிலும் போய்க் கொண்டே யிருக்கிறார்கள். 'கடபுடா' என்று சப்தித்த வண்ணம் டிராம்கள் சென்று கொண்டே யிருக்கின்றன.

" உஸ்ஸ்......ஸ்ஸ்... "

பிச்சைக்காரன் மிகவும் ஆயா சத்துடன் பெருமூச்செறிகிறான். போவோர் வருவோரை அவ னுடைய கண்கள் ஆவலுடன் நோக்குகின்றன. எழுந்து உட் காருவதற்குத் 'தம்பாய' மில்லை. ஏதோ பேச வாய்திறக்கிறான். வார்த்தைகள் வெளிவர வில்லை. ஐயோ, என்ன சொல்லுகிறு யப்பா?

" சாமீ, தருமஞ் சாமீ ! "

ஹூம், என்ன?......பிச்சையா கேட்கிறாய்?......அட, நாராயணா! இவ்வளவு மெதுவாகக் கேட் டால் யார் கொடுக்கப் போகிறார் கள்? இரண்டு காதுகளும் செவிடு படும்படி அலறினால் கூட, இந்த உலகம் கவனியாதே......நீ இப் படி......

" உஸ்ஸ்...ஸ்...... "

பிச்சைக்காரன் மீண்டும் பெரு மூச்சு விடுகிறான். அவனுக்குத் தலை கிறுகிறுக்கிறது. கைகால் நரம்புகள் 'வெடுக்கு வெடுக்' கென்று மின்சாரத்தைப் போல் இழுக்கின்றன. எல்லா அவ யவங்களும் சோர்கின்றன. களைப்புத் தாங்க முடியவில்லை. நிரம்ப நிரம்ப ஆயாசம். பாதி எழுந்தவன், காலை நீட்டி மீண்டும்

மண்ணில் சாய்ந்தான். வெய்யில் கொளுத்துகிறது. நல்ல தூக்கம் இந்த வெய்யிலில்! பலே!...... பிச்சைக்காரன் தூங்குமூஞ்சி போலிருக்கிறது!.........

பாவம், அவனை ஏன் தூங்குமூஞ்சி யென்று சொல்லவேண்டும்? சொல்வதற்குத்தான் நாவிருக்கிறதா? சாப்பிட்டு நாலுநாள் ஆகிறது. பட்டினி, பட்டினி, கொலை பட்டினி! ஒரு வேளைச் சாப்பாடில்லாவிட்டால், நம் வயிறு என்ன பாடுபடுகிறது!

உண்மையைச் சொல்கிறேன்: அவன் கதை நிரம்பப் பெரிசு. ரத்தினச் சுருக்கமாக இரண்டொரு வார்த்தை. அவன் சாதாரணப் பிச்சைக்கார னல்ல. கொஞ்சம் நல்ல நிலைமையி லிருந்தவன்தான். உலகவாழ்வில் பல இன்பங்களையும் அனுபவித்தான். திடீரென்று நிகழும் ஆபத்துக்களால், மனிதர்களுக்கு வாழ்க்கையில் விரக்தி ஏற்படுவது சகஜம் தானே! அந்தமாதிரி, ஒருநாள் இராத்திரி எவருக்கும் தெரியாமல் இவனும் வீட்டை விட்டுக் கிளம்பி விட்டான். நாடோடியாகப் பல இடங்களிலும் அலைந்தான். மாலையானவுடனே கையில் திருவோடு ஒன்று ஏந்திக்கொண்டு ஒவ்வொரு வீட்டு வாசலின் முன்னும் போய்நிற்பான். "பர்வதா பிச்சை, தாயி" என்று சத்தம் போடுவான். வளையலணிந்த கைகள் அவன்மீது மனம் வைத்து ஏதாவது கொண்டுவந்து போட்டால், வாங்கிக் கொண்டு போவான். இல்லாவிட்டால், வாய் பேசாது போய்விடுவான். 'படுப்பதற்கு எங்கே போவது?' என்ற கவலையே கிடையாது அவனுக்கு. ஆண்டவன் அளித்த இரு கைகளைத் தலைக்கு வைத்துக் கொண்டு பூமாதேவியின் மடிமீது படுத்து நிம்மதியாகத் தூங்கிவிடுவான். அவனுக்கு யாதொரு குறைவுமில்லை. ஒரோரு சமயம் வீட்டைப் பற்றி ஞாபகம் வந்தால், அவனையுமறியாமல் அவனுடைய கண்களிலிருந்து இரண்டொரு சொட்டுக் கண்ணீர் வரும்.

பத்துநாளாக அவனுக்கு உடம்பு சரியா யில்லை. எப்படியோ தட்டித் தடுமாறி இந்த ஊருக்கு வந்து சேர்ந்தான். முதல் நாள் லேசான காய்ச்சல். அன்று நல்ல மழை. தங்குவதற்குச் சரியான இடங் கிடைக்கவில்லை. மழை இரைச்சலாலும் ஈரத் தரையாலும், அவனுக்குக் குளிர் ஜுரம் பிறந்துவிட்டது. அவன் படுத்திருந்த இடம், ஒரு கம்பெனியின் தாழ்வாரம். அவ்விடத்திலிருந்து அவனை ஓட்டிவிட்டார்கள் கம்பெனி சிப்பந்திகள்.

பிச்சைக்காரனின் உடம்பு கொதித்தது. அவனல் நடக்க முடியவில்லை. பக்கத்திலிருந்த சில வீட்டு வாசல்களின் முன்னே போய் நின்றுன். 'மாதர் திலகங்கள்' அவன்மீது தண்ணீரை ஊற்றினர்கள். ஒருவன் நாயை அவன்மீது சூப் பிடிக்க விட்டான். சில சிறுவர்கள் கற்களை வீசினர்கள். உலகம் அவனை ஒரு பெரும் பைத்தியக்காரனகவோ, திருடனகவோ சந்தேகித்தது. நிற்பதற்கோ, நடப்பதற்கோ, அவன் காலில் தெம்பில்லை. அவனல் என்ன செய்ய முடியும்?

அவனுக்கு , ஆதரவளிக்க யார் இருக்கிறார்கள்? வானமே கூரையாக வையகமே பாயாக நினைத்து இங்கே வந்து தொப்பென்று விழுந்தான். அதிலிருந்து ஓரடி கூட இன்னும் நகரவில்லை.

காய்ச்சலையும் மீறிப் பசி அரக்கன் கொடுமைப் படுத்துகிறான். அவனால் தூங்கவும் முடியவில்லை; உட்காரவும் முடியவில்லை. மீண்டும் எழுந்திருக்கிறான். இரு கையையும் கூப்பிய வண்ணம், போவோர் வருவோரை நோக்கி, "சாமீ, தருமஞ் சாமீ!" என்கிறான்.

செல்வர்கள் மோட்டார்களிலும் ரிக்ஷாக்களிலும் போய்க் கொண்டே யிருக்கிறார்கள். 'கடபுடா' என்று சப்தித்த வண்ணம் டிராம்கள் சென்று கொண்டே யிருக்கின்றன. எதிரே மாடமாளிகை கூடகோபுரங்கள் போன்ற கட்டிடங்கள். அருகே யிருக்கும் காப்பி ஹோட்டல்களி லிருந்து, வயிற்றைத் தடவிய வண்ணம் ஆட்கள் வந்துகொண்டே யிருக்கிறார்கள். குழந்தைகளை மாதர்களும் மாதர்களை ஆடவர்களும் கொஞ்சுகிறார்கள். எங்கும் சந்தோஷம், ஆனந்தம்!

பிச்சைக்காரனின் வேண்டுகோளுக்கு உலகம் மௌனம் சாதித்தது. அவனும் மௌனமாகக் கண்களை மூடிக்கொண்டான்.

செல்வர்கள் தங்கள் வாகனங்களில் போய்க்கொண்டே யிருக்கிறார்கள். டிராம்கள் 'கடபுடா' என்று சப்தித்தவாறு போய்க் கொண்டே யிருக்கின்றன.

பிச்சைக்காரனின் தகர டப்பா, காலியாய்க் கிடக்கிறது.

பகல்பொழுது கழிந்தது. அந்தி மயங்கிற்று. எங்கும் விளக்குகள். ஜகஜ்ஜோதியா யிருக்கிறது. மாதர்களின் கீதநாதமும் வாத்தியங்களின் இன்னிசையும், மனதுக்கு உற்சாக மளிக்கின்றன. அதோ, ஆலயத்தின் பெரிய மணி 'டணார்' 'டணு' ரென்று அதிர்கிறது. பகவான்......கடவுள்...... அப்படியும் ஒருவர் இருக்கிறார்! மண்ணுலகில், மாட மாளிகைகளும் கூட கோபுரங்களும் ஒரு புறமிருக்க, அவற்றருகே புல்லால் வேய்ந்த குடிசைகளும் பாழ் வெளியும் இருக்க வேண்டுமென்பது அந்தப் பகவானின் திருவுள்ளம்!

ஐயோ, இவன் ஏன் மறுபடியும் எழுந்திருக்கிறான்! உலகத்தின் காது செவிடு என்பது இவனுக்குத் தெரியவில்லையா? மனித சபலம் விடுமா?.........

"புண்ணியவான்களே! ஒரு சொட்டுத் தண்ணீர் கிடைக்குமா?......நாக்கு வறள்கிறதே ....ஐயோ, காப்பாற்ற மாட்டீர்களா?........."

கண்கள் பஞ்சடைந்து விட்டன. உலகம் இருக்கிறதா, இல்லையா என்பதுகூட அவனுக்குத் தெரியவில்லை. 'ஒருவேளை, மேலுலகுக்குத்தான் வந்து விட்டோமோ' என்றுகூட அவன் யோசித்தான். ஆனால், அந்த டிராம் வண்டிகளின் 'கடபுடா' சத்தம் கேட்கிறதே!

செல்வர்கள் தங்கள் மோட்டார்களிலும் ரிக்ஷாக்களிலும் போய்க்கொண்டே யிருக்கிறார்கள். 'கடபுடா' என்று சப்தித்த வண்ணம் டிராம்கள் நகர்ந்து கொண்டே யிருக்கின்றன. பாதாம் ஹல்வாவைத் தின்று விட்டு, வயிற்றைத் தடவிக்

கொண்டே ஒருவன் வெளியே வருகிருன்.

தகர டப்பா காலியாகக் கிடக்கிறது. தண்ணீர் கொண்டுவந்து கொடுப்பாரைக் காணோம்.

இரவு முழுதும் எமனுடன் போராடினுன். அதிகாலையில் அவனுடைய ஆவி பிரிந்தது......

கண்கள் பாதி திறந்தவண்ண மிருக்கின்றன. வாயில் ஓர் இள நகை — பச்சாதாபமற்ற இந்த உலகைப் பார்த்துச் சிரிக்கிருன் போலிருக்கிறது! - முகத்தில் சாந்தி. கால் கைகள் கட்டை போலக் கிடக்கின்றன. தலைமயிர் முழுவதும்.......அடேடே, எங்கே அந்தத் தகர டப்பா! அதை எவனே அடித்துக்கொண்டு போய்விட்டான், ஐயா!

ஜனங்கள் போய்க்கொண்டும் வந்துகொண்டு மிருந்தார்கள். அவர்களுடைய 'மேன்மையான' கண்களில், பிச்சைக்காரன் 'தட்டுப்பட'த்தான் செய்தான். ஆனல், அத்தப் பார்வையில், ஐயோ, எவ்வளவு வெறுப்பு! "உதைக்கவேண்டும், சார், இந்தப் பிச்சைக்காரப் பயல்களை. நன்ருகப் பாசாங்கு பண்ணக் கற்றுக்கொண்டானுகள்" என்ருர்கள் நாகரீக புருஷர்கள்.

எறும்புகளும் ஈக்களும் அவனைத் தேடி வருகின்றன. அவனுடைய பிரிவுக்காக வருந்திக் கண்ணீர்விட, இந்த உலகில் ஒரு ஜீவனுமில்லை. மணி பத்தாயிற்று. பதினென்ருயிற்று. பன்னிரண்டு மாயிற்று. பிச்சைக்காரனை யாரும் கவனிக்கவில்லை. ஒரு மணி சுமாருக்கு முனிசிபல் தோட்டியொருவன் அந்தப் பக்கமாக வந்தான். பிச்சைக்காரன் கட்டைபோல அசையாமல் படுத்திருப்பதைக் கண்டான். நாலா பக்கமும் சுற்றிப் பார்த்துவிட்டு, அவனருகே ஏதாவது சில்லறை கிடக்கிறதா என்று ஆராய்ச்சி செய்தான். ஒன்று மில்லை. தரித்திரப் பிச்சைக் காரன்! தோட்டி வெறுப்படைந்தான். அவனுக்குக் கோபங்கூட வந்தது. இரண்டு மூன்று தடவை சத்தம் போட்டுப் பார்த்தான். பிச்சைக்காரனின் வாயிலிருந்து ஒரு வார்த்தைகூட வெளிவரவில்லை. அருகே யிருந்த ஒரு குச்சியை எடுத்துப் பிச்சைக்காரனின் காதில் மெதுவாக விட்டான் தோட்டி. பிச்சைக்காரன் எழுந்திருக்கவே யில்லை. தோட்டியின் சந்தேகம் தீர்ந்தது.

"அடடே, செத்துப்பூட்டையா நீ? நமக்கு வேலை வச்சயா, நாசமாய்ப் போக!" என்று ஒரு முறை சபித்தான்.

நகரசபைக்குத் தகவல் கிடைத்தது. கமிஷனர், நான்கு தோட்டிகளை யனுப்பி, 'அநாதைப் பிரேத'த்தைப் புதைக்கும் படி உத்திரவிட்டார். மாட்டைத் தூக்கிக்கொண்டு போய்க் குழியில் புதைப்பதைப் போல, தோட்டிகள் அவனை எடுத்துக் கொண்டுபோய்ப் புதைத்தார்கள்.

செல்வர்கள் மோட்டாரில் சென்றுகொண் டிருந்தார்கள். டிராம்கள் 'கடபுடா' என்று சப்தித்தவண்ணம் நகர்ந்து கொண்டிருந்தன. பாதாம் ஹல்வாவைத் தின்றுவிட்டு வயிற்றைத் தடவிக்கொண்டே வெளி வருகிருர் ஒரு கனவான். ஏழைப் பிச்சைக்காரனுக்காக ஒரு சொட்டுக் கண்ணீர் விடுவோர் யாராவது உண்டா? என்ன முட்டாள்தனமான கேள்வி!

★



இந்தியாவைக் காக்கும் வழி

'நெப்போலியன்' எழுதுகிறார்:

அறை நெ. 6871,
ராணுவப் பகுதி,
பரமண்டலம்.

ஐயா! மகாயுத்தம் என்று நீங்கள் சொல்வீர்களே (என் சம்பந்தப்பட்ட மட்டில் அதில் எவ்வித மகாத்மியத்தையும் நான் காண முடியவில்லை)! அந்த யுத்தத்தில் கீர்த்திபெற்ற என் தேசத்துப் பிரபலஸ்தர் ஒருவர், 'நெப்போலியன்' என்றொரு புத்தகம் எழுதியிருக்கிறார். அவர் என்னைப்பற்றிப் பிறர் எழுதியதையெல்லாம் மிக ஜாக்கிரதையாகப் படித்து ஆராய்ந்தாரேயொழிய, தாமே என்னைப்பற்றி அவ்வளவு ஜாக்கிரதையாய் ஆராயவில்லை, இது எனக்கு வருத்தந்தான். ஆயினும், ஏதோ கொஞ்சமாவது என்னைப்பற்றி அவர் ஆராய்ந்துள்ளார். உங்கள் தளபதிகளோ இதைக் கூட செய்யவில்லை. உங்கள் எதிரிகள் இந்தப் பிசகைப் புரியவில்லை. என்னைப்பற்றி அவர்கள் நன்றாக ஆராய்ந்து, என் போலவே நடக்கிறார்கள்; என் பிசகுகளைக் கூடக் காப்பியடிக்கிறார்கள்! நீங்களோ என்னைப் போல் நடக்க ஒருபோதும் முயலவேயில்லை. முன்னதாகவே ஒரு திட்டம் வகுத்துக் கொள்ளாமல், நான் எந்த யுத்தத்துக்கும் போனதே கிடையாது; உங்களிடமோ இதுவரையில் ஒரு திட்டத்தையும் காணோம். நான் இரண்டு சூத்திரங்களைக் கடைப்பிடிப்பது வழக்கம். 'எல்லா இடங்களிலும் எதிரியை எதிர்க்க வேண்டும்; அப்போது வழி தெரியும்' என்பது ஒன்று; 'சகலத்தையும் பாதுகாக்க முயன்றால், ஒன்றையும் பாதுகாக்க முடியாது' என்பது மற்றொன்று. இந்த இரண்டு சூத்திரங்களையும் ஒன்றோடொன்று பொருத்திப் பார்க்க, நீங்கள் அடியோடு தவறிவிட்டீர்கள். ஆனால், இரண்டையும் மட்டில், மனப்பூர்வமாக ஏக காலத்தில் பின்பற்றி விட்டீர்கள். போன யுத்தத்திலே, மண்ணை முக்கியமென்று (அதாவது நம் கையில் உள்ள இடத்தை விடக்கூடாதென்று) உங்கள் தளபதிகள் கருதினார்கள்; அதுபோலவே, நீங்களும் இன்று கருதுகிறீர்கள். யுத்தத்தை முடிவாய்த் தீர்மானம் செய்யக்கூடிய இடத்திலே நம் சேனையைக் குவிக்க வேண்டும் என்ற என் யோசனை உங்களுக்கு ஒருபோதும் புரியவில்லை. யுத்தத்தைத்

நவீன யுத்த தந்திரங்களுக்கெல்லாம் மூல கர்த்தா மகா நெப்போலியன்தான் என்று சொல்வார்கள். அந்த நெப்போலியன், பரமண்டலத்திலிருந்து எழுதியது போல, ஒரு கற்பனைக் கடிதத்தை, 'டைம் அண்ட் டைடு' என்ற லண்டன் பத்திரிகை வெளியிட்டுள்ளது. இந்தியாவைக் காக்க, இந்தியாவை விட்டு ஓடிபோவதுதான் சரியான வழி என்கிறார் இந்த 'நெப்போலியன்'!

தீர்மானம் செய்யக்கூடிய இடம் என்பதன் அர்த்தம்கூட உங்களுக்குப் புரிகிறதோ இல்லையோ; நான் அறியேன்.

உங்களுடைய ஆசியப் போரில், சகலத்தையும் பாதுகாக்க நீங்கள் முயன்றீர்கள்; சகலத்தையும் இழந்தீர்கள் — ஹாங்காங், மலாயா, பிலிப்பைன், கிழக்கிந்தியத் தீவுகள், சிங்கப்பூர், பர்மா, ரங்கூன் சகலத்தையும் இழந்தீர்கள்; இன்னும் மோசம் என்ன என்றால், கப்பற்படை வல்லரசாகிய நீங்கள், ஒரு கப்பற்படையையும் இழந்து விட்டீர்கள். நீங்கள் ஓரிடத்தில் உங்கள் சேனையை ஒருமுனைப்படுத்திக் குவித்திருந்தீர்களானால், என்ன நடந்திருக்கும்? நீங்கள் இப்போது இழந்ததை யெல்லாம் அப்போதும் இழந்துதா னிருப்பீர்கள் என்பது உண்மை. உங்களுடைய வீரமான எதிர்ப்பைச் சமாளித்துக் கொண்டு, இந்த நாடுகளைப் பிடிக்க, ஜப்பானியருக்கு எவ்வளவு காலம் பிடித்ததோ அதே காலம்தான், நீங்கள் எதிர்த்துப் போராடாமலே அவர்கள் வந்து இவற்றைப் பிடித்துக் கொள்ளவும் ஆகியிருக்கும். ஆனால், அப்போது உங்கள் சேனைகளும் கப்பல்களும் அழியாமல் இருந்திருக்கும்.

இப்போது அதே பிசகை நீங்கள் மறுபடியும் புரிய உத்தேசித்திருக்கிறீர்கள். இந்தியாவைப் பாதுகாக்க, எண்ணுகிறீர்கள். விதியின் போக்கை நோக்கினால், அப்படிச் செய்யவே கூடாது என்பதற்கு அற்புதமான காரணம் உங்களுக்குப் புலனாகி யிருக்கும். நான் சொல்வதற்குச் செவி கொடுப்பீர்களா? மண் முக்கியமல்ல வென்று உங்களுக்கு நான் சொல்லுகிறேன். மனிதர்கள்தான் முக்கியம். உங்களிடம் மனிதர்கள் அதிகமில்லை. இந்தியாவிலே உங்கள் மனிதர்களை வீணாக்காதீர்கள். நடந்தது நடக்கட்டுமென்று துணிந்து, வெளியேறி விடுங்கள். ஒவ்வொரு சோல்ஜரையும், தேகவலுவுள்ள ஒவ்வொரு மனிதனையும், ஒவ்வொரு ராஜபக்தனையும்

இந்தியாவை விட்டு வெளியேற்றி விடுங்கள். இந்தியாவின் வட மேற்கு எல்லைத் துருப்புகளை எகிப்துக்குக் கொண்டுவாருங்கள். வட கிழக்கு எல்லைத் துருப்புகளை இலங்கைக்குக் கொண்டு செல்லுங்கள். ஏனெனில், இலங்கையை, இந்தியாவுக்கு 'எல்லை வெளிக் காவல் ஸ்தல'மாக நீங்கள் உபயோகிக்கலாம். இலங்கையை நீங்கள் உறுதியாகக் காத்தீர்க ளானல், எதிரி தரைமூலமாகவே மேற்குப் பகுதிக்கு வர வேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும். அப்போது, எதிரி வெகு தூரத்தி லிருக்கும்போதே நீங்கள் சாவகாசமாக வெளியேறலாம். எடுத்துக் கொண்டுபோக முடிந்ததை யெல்லாம் கொண்டு போய் விடுங்கள்; முடியாததை யெல்லாம் அழித்து விடுங்கள். ரயில்பாதை, மின்சார உற்பத்திச் சாலை, தொழிற்சாலைகளை நீங்கள் மீண்டும் நிர்மாணித்து விடலாம்; மனிதர்களை மீண்டும் பிழைக்கச் செய்ய முடியாது. உங்களுக்கு மனிதர்களே தேவை, அவசர மான தேவை; சிந்துநதிக் கரையிலும் கங்கைக் கரையிலு மல்ல, நைல்நதிக் கரையிலேதான் மனிதர்கள் வேண்டும்.

நீங்கள் கற்றுக் குட்டிகள் தான். என்றாலும், இரண்டாயிரம் வருஷங்களாக யுத்தம் புரிந்து வருகிறீர்கள். ஆதலால், நைல்நதிப் படை எங்கே இருக்கிறதோ அதுதான் முடிவான யுத்தஸ்தலம் என்று உங்களுக்குத் தன்னிச்சையாய் விளங்கும். நான் ஏன் எகிப்துக்குப் போனேன்? இந்தியாவைப் பிடிக்கவே. உங்கள் கப்பற்படை மட்டும் வந்திரா விட்டால், எகிப்து மண்ணிலே இந்தியாவை நான் ஜயித்திருப்பேன்; யாரும் எதுவும் அதைத் தடுத்திருக்க முடியாது. இந்தியாவைக் காப்பதா? நைல்நதிக் கரையிலேதான் இந்தியாவை நீங்கள் காக்க முடியும். ஒரு போர் வீரன் என்ற முறையில் நான் சொல்லுகிறேன்: இந்தியா எப்படிப் போனாலும் உங்களுக்குக் கவலை யில்லை. இந்த உங்கள் யுத்தத்திலே யார் ஜயிக்கிறானே அவனுக்குக் கிடைக்கப் போகிற கனிந்த பழம் இந்தியா. உங்கள் சேனையை ஒரு முனைப் படுத்திக் குவிக்காதது, பேரபாயமான தவறாகும். அந்தத் தவற்றினல், ஜப்பானியரிட மிருந்து மாத்திரமே கூட நீங்கள் இந்தியாவைக் காத்துக் கொள்வது சந்தேகம்; ஜப்பானியரிட மிருந்தும் இந்தியரிட மிருந்தும் இந்தியாவைக் காக்க முடியுமா என்பதை அடியோடு சந்தேகிக்கிறேன். யுத்தத்திலே தோற்றா லொழிய, இந்தியாவை நீங்கள் சாசுவதமாய் இழக்கத் தேவை யில்லை; இந்தியாவை ஏதோ சில காலம் காப்பாற்றிக் கொள்ள முயல்வதனல், நீங்கள் யுத்தத்திலேயே தோற்றுப் போக நேர்ந்து விடும். கீழ்த்திசையின் பாலத்தை நீங்கள் காப்பாற்றி வருவீர்க ளானல், யுத்தத்திலே நீங்கள் ஒருபோதும் தோல்வியுறத் தேவை யில்லை.

:

இத்தகைய தீர்மானத்தை உங்கள் பொதுஜனங்கள் பொறுக்க மாட்டார்கள் என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். நீங்கள் மூன்று வருஷ காலமாக ஒரு தீர்மானமும் செய்ய மறுத்து வருவதனல் ஏற்பட்ட பயங்கரமான பலன்களை யெல்லாம் அவர்கள் பொறுத்துக் கொண்டுதான் வந்திருக்கிறார்கள். அவர்களுடைய மக்களின் உயிரை, பிரயோசனமான முறையில் சாவதற்காவது நீங்கள் காப்பாற்றி வருவீர்களானல், அவர்கள் முணு

முணுக்க மாட்டார்கள். முப்பது கோடி மக்களைக் கொண்ட ஒரு தேசத்தைக் காப்பாற்றுவது ஒரு மாதத்தில் ஆகக்கூடிய வேலை அல்ல என்று அவர்களுக்குச் சொல்லுங்கள். ஜப்பானை இந்தியர் எதிர்க்காதிருந்தால் கூட, ஜப்பானியப் படைகளை அமெரிக்கரும் ஆஸ்திரேலியரும் சூழ்ந்து கொள்ளுவார்கள். இங்கிலையிலும், இந்தியாவுக்குள் படையெடுத்து முன்னேற ஜப்பான் துணியுமானல், இந்தியாவை அது ஜயிப்பதற்கு முன்னேயே, ஜெர்மனியை நீங்கள் தோற்கடித்துவிட்டு இந்தியாவுக்குத் திரும்பப் போதிய சாவகாசம் உங்களுக்கிருக்கும். அமெரிக்காவில் கொஞ்சம் ஸோல்ஜர்கள் இருக்கிருர்கள். முள் புதரில் சிக்கிய செம்மறியாட்டைப் போல, ஜப்பானியரின் பெரும்படை ஒன்று இந்தியாவில் மாட்டிக் கொண்டதைக் கண்டால், அந்த அமெரிக்க ஸோல்ஜர்கள் களிகூர மாட்டார்களா! ஜப்பானியர், குவெட்டாவுக்கு வந்து விட்டார்களானல், டோக்கியோ அதோகதி யாகிவிடும். ஜப்பானியர் அப்படி வந்து மாட்டிக் கொள்வார்கள் என்று நான் நினைக்கவில்லை. சில விமானப்படைத் தளங்களும் ஒரு கப்பற் படைத் தளமும்தான், மேற்கே வருவதற்கு, அவர்களுக்குத் தேவை. முடிவான யுத்த ஸ்தலம் எது என்று அவர்களுக்கும் தெரியும்; அது டில்லி அல்ல என்று அவர்களும் அறிவார்கள். அந்த ஸ்தலத்துக்கு, அவர்களுக்கு முன்னே நீங்கள் வந்து சேர்ந்துவிடுவதுதான் புத்திசாலித்தனமாகும். இப்போது இருக்கிறீர்களே அவ்விடத்திலேயே நீங்கள் தங்கிக்கொண்டிருப்பதன் மூலம், அந்த முடிவான ஸ்தலத்துக்கு அவர்கள் வருவதை நீங்கள் தடுக்க முடியாது.

ஆனல், அது இந்தியரைக் கைவிடுவதாகுமே, ஏகாதிபத்திய லட்சியத்தைத் துறப்பதாகுமே, கடமை தவறுவதாகுமே என்று நீங்கள் சொல்லுகிறீர்கள். அரசியலையும் தர்மத்தையும் போட்டுக் குழப்புவது நீண்ட காலமாகவே உங்கள் வழக்கமா யிருந்து வருகிறது. அந்த இரண்டைப் பற்றியுமே உங்களுக்கு ஒன்றும் தெரியாது; கலப்பற்ற மனக்குழைவே உங்களை உந்துகிறது. இதை அறியாதவர்களிடம், சென்ற காலத்தில் உங்கள் காரியம் பலித்து வந்தது, அந்த வழக்கத்தினலே. கெட்டிக்காரத்தனம் வாய்ந்த கிழ ஹிந்து வக்கீல்! ஒருவரை ஒரு மகான் என்று நீங்கள் இன்னும் பிடிவாதமாய் மதித்து வருவதன் காரணம், உங்கள் மனக்குழைவுதான். அதனல்தான், வக்கீல்களின் சொர்க்கமான நிரந்தர வழக்கை, அவருடன் ஆடிக்கொண்டுவருகிறீர்கள். வழக்கை நிறுத்தி யுத்தத்துக்குத் திரும்புங்கள். இந்தியா, உலகப் படத்திலிருந்து மறைந்துவிடாது. யுத்தம் முடிந்த பின்னும், அது இருந்து கொண்டுதான் இருக்கும். உங்கள் சேனையை ஒரு மூலையில் குவியுங்கள்; குவியுங்கள். மூட மாணவரும், தீய விஷமிகளும் கொள்ளையடிக்கட்டும்; கொளுத்தட்டும். ஆயினும், இந்தியாவின் ஜீவாதாரமான தலைநகருக்கு மட்டில் அவர்கள் வந்து சேர்ந்தவிடமுடியாது. பெர்லினுக்குச் செல்லுங்கள். எப்பொழுது வேண்டுமாயினும் உங்களுக்கு இஷ்டமான கப்பலில் டில்லிக்கும் கல்கத்தாவுக்கும் நீங்கள் திரும்பிப் போய்ச்சேர முடியும். இந்தியர்களின் அழைப்பின்மேல் அவ்வாறு நீங்கள் திரும்

ப்ச் சென்று, மலைக்குறவர்களின் கத்திகளினின்று சொட்டும் ரத்தத்தை நிறுத்தி, மக்களின் ஆத்மாக்களை அராஜகத்தினின்றும் படையெடுப்பினின்றும் பாதுகாக்கலாம். நீங்கள் இந்தியாவை இழக்கத் துணியோம் என்கிறீர்கள். மனமார இந்தியாவை இழப்பதன் மூலமாகவே உங்களை நீங்கள் ரட்சித்துக்கொள்ள முடியும் என்ற நிலையிலே, நீங்கள் அவ்வாறு கூறிக்கொண்டிருக்கிறீர்கள். இந்தியாவை நீங்கள் பாதுகாவல் செய்துகொண்டிருந்தால், உங்களுடைய ஒரே சத்துருவான ஜெர்மனியை, ராணுவ தந்திரத்தால் நீங்கள் ஜயிப்பது எங்கே? நான் இப்போது பேசுவது யுத்தத்தைப்பற்றி; மன உணர்ச்சிகளையும் கௌரவத்தையும் பற்றியல்ல. துணிகிறீர்களோ இல்லையோ; நீங்கள் நைல் நதிக்கரையை இழப்பீர்களானால், இந்தியாவை இழந்து விடுவீர்கள்; யுத்தத்திலேயே தோற்றுவிடுவீர்கள். அப்போது, நீங்கள் இந்தியாவுக்குத் திரும்பிச் செல்ல முடியாது; இந்தியாவிலுள்ள உங்கள் சேனையும் பயனற்ற எலும்புக் கூடாகும்.

யுத்தத்தைப் பற்றி நீங்கள் ஆராய்ச்சி ஒன்றும் புரிய வேண்டாம். கொஞ்சம் கணக்குப் போட்டுப் பாருங்கள். யுத்தம் என்பதே எளியதொரு கணக்குத்தான். உங்கள் போர்முனைகள் எவ்வளவு என்றுகூட உங்களுக்கு எண்ணத் தெரியவில்லை. மனமறிந்து ஆறும் போர்முனை ஒன்றையும் நீங்கள் சிருஷ்டித்துக்கொண்டிருக்கிறீர்கள். அதுதான் கலகமும் துரோகமும் என்ற போர்முனை. ஜீவாதாரமான அணிவகுப்புஎன்று நீங்கள் சொல்லும் உங்கள் அணிவகுப்புக்குப் பின்னே தோன்றியுள்ளது அந்த ஆறும் போர்முனை. நான் சொல்லுகிறபடி செய்து, உங்கள் சேனையை நீங்கள் ஒரு முனையில் குவிக்காவிட்டால், ஒரு கணக்காவது போட்டுப் பாருங்கள் என்று உங்களை நான் வேண்டுகிறேன். கடமை, கௌரவம் என்பவை பற்றிய அலங்கார வார்த்தைகளையெல்லாம் ஒருபுறம் கட்டி வையுங்கள் — உங்கள் மாதிரி வாக்குச் சாதுர்யம் எனக்குக் கிடையாது என்று ஒப்புக்கொள்ளுகிறேன்— அது ஓர் எளிய கணக்கு—சகலத்தையும் சம்பாதிக்க வேண்டும்; அல்லது எல்லாவற்றையும் இழக்க வேண்டியதுதான்.

இந்தியாவுக்கு நீங்கள் செய்ய வேண்டிய ஏதோ கடமையைப் பற்றிப் பேசுகிறீர்கள்; உங்கள் சேனைக்கும் உங்கள் லட்சியத்துக்கும் நீங்கள் புரிய வேண்டிய கடமை ஒன்றும் இல்லையா?

உங்கள் கீழ்ப்படிதலுள்ள

ஊழியன்,

என். போனபார்ட்டி.

★

யுத்தமும் சமாதானமும்

கி. மு. 1469-ஆம் வருஷம் தொடங்கி இன்றளவும் உலகத்தில் யுத்தமில்லாத சமாதான வருஷங்கள் 290 என்றும், யுத்தங்கள் நிகழ்ந்த வருஷங்கள் 3,200 என்றும் ஒரு ருமேனியச் சரித்திரப் பண்டிதர் கணக்கிட்டிருக்கிறார். கி. மு. 1500-ஆம் வருஷத்துக்கும் கி. பி. 1860-ஆம் வருஷத்துக்கும் இடையில், ஊழி காலம்வரை சமாதானமாயிருப்பதாக 8,000 உடன்படிக்கைகள் செய்யப்பட்டனவாம். அவைகளில் ஒவ்வொன்றும் சராசரி இரண்டு வருஷ காலத்தில் மீறப் பட்டதாம்.

சுயேச்சை எழுத்தாளன்

தி. ஜ. ர.

பத்திரிகை எழுத்தாளர்களில் இரண்டு தினுசு. பத்திரிகைக் காரியாலயம் ஏதாவது ஒன்றில் அமர்ந்து, எழுத்து வேலை புரிபவர்கள் ஒரு வகை. எந்த ஒரு பத்திரிகையிலும் உத்தியோகம் வகிக்காமல், வீட்டிலே இருந்தபடியே வெவ்வேறு பத்திரிகைகளுக்கு, கதைகள், கட்டுரைகள் முதலியவை எழுதி ஊதியம் பெறுபவர்கள் மற்றொரு வகை. இந்த இரண்டாவது வகையினரைத் தான், சுயேச்சை எழுத்தாளர்கள் என்று இங்கே குறிப்பிடுகிறோம்.

இந்த இரண்டு வகை எழுத்தாளர்களுக்கிடையிலும், ஒரு பெரிய வித்தியாசம் உண்டு. ஒரு பத்திரிகையிலே அமர்ந்து வேலை பார்க்கும் உதவியாசிரியர்களும் நிருபர்களும், தங்களுடைய தனிப்பட்ட அபிப்பிராயங்களை வெளியிட முடியாது; அந்தப் பத்திரிகையின் பொதுக் கொள்கையை ஒட்டியே எழுத வேண்டும். சுயேச்சை எழுத்தாளர்களுக்கோ இந்த நிர்ப்பந்தமில்லை.

உதவியாசிரியர்களின் கதியை, தமிழ்த் தினசரிகளில் நீண்ட கால அனுபவமுடைய ஒரு துணையாசிரியர், ஒருமுறை மிக அழகாக என்னிடம் கூறினார்: "நமக்கென்ன, ஐயா! நாமெல்லாம் வக்கீல்கள் மாதிரி. இந்தப் பத்திரிகையில் இருந்தால் இந்தக் கட்சியைப் போற்றுவோம்; அந்தப் பத்திரிகையிலிருந்தால் அந்தக் கட்சியைத் தாக்குவோம்- இதுதான் பத்திரிகைத் தொழிலின் நுட்பம்" என்றார். உதவியாசிரியர்களின் நிலைமையை, நான் இவ்வளவு மோசமாக நினைப்பதில்லை. தம் அடிப்படையான கொள்கைகளுக்கு மாறுபட்ட ஒரு பத்திரிகையில், ஒருவர் உதவியாசிரியர் வேலைக்கு அமரமாட்டார். ஆனாலும், அநேக சந்தர்ப்பங்களில், குறிப்பிட்ட அநேக விஷயங்களில், உதவியாசிரியர்கள், தங்கள் சொந்த அபிப்பிராயங்களை, ஒருபுறம் மூட்டை கட்டி வைக்க வேண்டிய அவசியம் நேரிடத்தான் நேரும். சுயேச்சை எழுத்தாளனுக்கோ இந்தச் சங்கடம் கிடையாது.

நமது நாட்டிலே, பத்திரிகைத் தொழில், வேறெந்த நாட்டோடும் வெற்றிகரமாய்ப் போட்டி போடக் கூடிய அளவுக்கு வளர்ந்

எந்தப் பத்திரிகைகளிலேயும் சம்பளத்துக்கு அமராமல், பற்பல பத்திரிகைகளுக்கும் கட்டுரை, கதைகள் எழுதி, ஊதியம் பெறும் 'சுயேச்சை எழுத்தாளன', மேல் நாட்டுப் பத்திரிகைத் தொழிலிலே ஒரு முக்கிய ஸ்தானம் வகிக்கிறான். இந்தப் பொருள் பற்றி, எப்பிரல் மாதம் 8-ஆம் உயன்று திருச்சி ரேடியோ நிலயத்திலிருந்து ஒலி பரப்பப்பட்டது இந்தக் கட்டுரை. நிலயத்தாரின் அனுமதியுடன் வெளியிடுகிறோம்.

திருப்பது வாஸ்தவம். ஆனல், சுயேச்சை எழுத்தாளர்களை மட்டில் இங்கே காண்பது அபூர்வமாயிருக்கிறது. இந்த விஷயத்தைப் பற்றி நான் யோசித்துக்கொண்டிருந்தேன். "என்ன ஸார், யோசிக்கிறீர்கள்?" என்று கேட்டார் ஒரு நண்பர். "சுயேச்சையான பத்திரிகை எழுத்தாளனைப்பற்றி என்ன பேசுவது என்றுதான் யோசிக்கிறேன்" என்றேன். "இதுதானே? நிரம்பச் சுலபமாயிற்றே! 'அந்த ஆசாமிக்கு இந்தத் தேசத்திலே இடங்கிடையாது' என்று நாலே வார்த்தையில் முடிக்க வேண்டியது" என்ருர் நண்பர். ஒருவிதத்தில் 'பனித் தீவில் பாம்பு'க் கதை மாதிரிதான் இருக்கிறது இன்று இந்த நாட்டிலே சுயேச்சையான பத்திரிகை எழுத்தாளனின் நிலைமையும்.

மேல் நாடுகளிலும் அமெரிக்காவிலும் ஏராளமான சுயேச்சை எழுத்தாளர்கள் இருக்கிருர்கள். அவர்களிலே பல வகையானவரும் இருக்கிருர்கள். சொல்லப் போனல் அந்த நாடுகளில் ஒவ்வோர் அரசியல் வாதியுமே அநேகமாய் ஒரு சுயேச்சை எழுத்தாளனுக இருக்கிருன். உதாரணமாக, சர்ச்சில், முஸலீனி, ஹிட்லர் எல்லோருமே சுயேச்சை எழுத்தாளர்களாயிருந்தவர்கள் தான். அந்த அரசியல் வாதி எழுத்தாளர்கள் அனைவரும் அரசியல் ஒன்றைப் பற்றி மட்டிலுமே எழுதுவார்கள் என்பது மில்லை. பிற விஷயங்களைப் பற்றி எழுதுவதும் உண்டு.

சமீபத்தில்தான், பிரிட்டிஷ் பிரதம மந்திரி சர்ச்சிலைப் பற்றி, ரஸமான ஒரு கதை வெளிவந்தது. சுமார் பத்து வருஷங்களுக்கு முன்னே, அமெரிக்காவில் சுற்றுப்பிரயாணம் செய்து, பல பிரசங்கங்கள் புரிய, அவர் ஒப்புக்கொண்டார். நாடகம், சினிமா முதலியவைகளை நடத்திப் பணம் சம்பாதிப்போர் உண்டு அல்லவா? அதேபோல, இம்மாதிரி பிரசங்கிகளையும் ஊதியத்துக்கு ஏற்பாடு செய்து; அவர்களுடைய பிரசங்கங்களுக்குக் கட்டணம் வைத்து வசூலித்து வருமானம் சம்பாதிக்கும் ஏஜெண்டுகள், அமெரிக்காவில் உண்டு. சர்ச்சிலை அவ்விதம் ஏற்பாடு செய்த ஓர் ஏஜெண்டுதான், அந்த அனுபவத்தை இப்போது வெளியிட்டிருக்கிருர்.

சர்ச்சில் அமெரிக்காவுக்கு வந்தால், அவரைக் கொலை செய்வதென்று அப்போதே ஒரு சதிக் கூட்டம் இருந்ததாம். அதற்கெல்லாம் அஞ்சாமலே அந்தச் சுற்றுப் பிரயாணப் பிரசங்கக் கச்சேரிகளுக்கு அவர் ஒப்புக்கொண்டார். அமெரிக்க ரகஸ்யப் போலீஸார், சர்ச்சிலுக்கு சதா பாராக் கொடுத்துக்கொண்டிருந்தார்கள். அவர்களையும் அறியாமல் ஒரு நாள் இவர் எங்கேயோ கிளம்பிவிட்டார். அப்போது இவர் மீது ஒரு மோட்டார் மோதியது. பலமான காயம் பட்டது. ஆஸ்பத்திரியில் சில நாள் பிரக்ஞையில்லாமலே கிடந்தார். பிரக்ஞை தெளிந்தபோது, இவரைப் பிரசங்கத்துக்கு ஏற்பாடு செய்த ஏஜெண்டு வந்து கண்டார். "நீங்கள் போட்டிருந்த சுற்றுப் பிரயாணத் திட்டம் பங்கம் அடைந்துவிட்டதே" என்று வருத்தப்பட்டார் சர்ச்சில்: "எப்படியானலும், உங்கள் கணக்குப்படி பிரசங்கங்களைச் செய்து முடித்துவிடுகிறேன். கவலைப் படாதீர்கள்" என்று, அந்த ஏஜெண்டுக்கு உறுதியும்கூறினர்.

இதெல்லாம் முக்கியம் அல்ல. இன்னொரு விஷயத்தைக் குறிப்பிடவே, இவ்வளவும் சொன்னேன். தமக்கு நேர்ந்த மோட்டார் விபத்தை வர்ணித்து, அங்கேயே சர்ச்சில், ஒரு கட்டுரை எழுதினர், அதை அமெரிக்கப் பத்திரிகைகளுக்கு விற்பனையும் செய்தார். அதனால் வந்த பணத்தில், ஆஸ்பத்திரிச் செலவு பூராவும் போக, நல்ல மிச்சமும் கிடைத்தது. இங்கே இப்படி முடியுமா? என் மூக்குக் கண்ணாடி ஒரு சமயம் காணமற் போயிற்று. அந்த அனுபவத்தைக் கட்டுரை எழுதி, நானும் தான் பணமாக்கினேன். எனக்குக் கிடைத்த லாபம் எவ்வளவு தெரியுமோ? விள்ளாமல் விரியாமல் ஒன்றே முக்கால் ரூபாய்! சர்ச்சில் எங்கே, நான் எங்கே? அமெரிக்கர் எங்கே, நீங்கள் எங்கே?

ஆனால், எல்லாச் சுயேச்சை எழுத்தாளர்களும் இப்படி அரசியல் வாதிகளாய் இருக்க வேண்டியதில்லை; இருக்கவும் இல்லை. பத்திரிகைக்கு எழுதுவது ஒன்றையே தொழிலாகக் கொண்டு, அநேகர் இருக்கிறார்கள். சிறந்த சில பத்திரிகைகளின் அபிப்பிராயங்களுக்கு எவ்வளவு செல்வாக்கு உண்டோ அதற்கு அதிகமான செல்வாக்கைக்கூட அவர்களில் சிலர் பெற்றிருக்கிறார்கள்; ஜனங்களிடம் ஒரு விஷயத்தைப் பற்றிக் கிளர்ச்சி செய்ய அரசியல் வாதிகளுக்கு உள்ள சக்தியை விட அதிகமான சக்தியையும் சில சுயேச்சை எழுத்தாளர்கள் பெற்றிருக்கிறார்கள். காரணம் என்னவென்றால், அரசியல் வாதிகளையும், பத்திரிகைகளையும் விட அதிக சுதந்திரமுடையவர்களாக, அவர்கள் இருப்பது தான். அரசியல் வாதிகள், கட்சிகளுக்கும் தாங்கள் செய்த செயல்களின் பலன்களுக்கும் கட்டுப்பட்டவர்கள். பத்திரிகைகளும் ஏறக்குறைய அதே போல் தளைப்பட்டு விடுகின்றன. சுயேச்சை எழுத்தாளர்களுக்கோ, இந்த மாதிரி பந்தமெல்லாம் கிடையாது. அமெரிக்காவில் கோடிக்கணக்கான மக்கள் வாரத்துக்கு வாரம் சில சுயேச்சை எழுத்தாளர்களின் கட்டுரைகளை விழுந்து விழுந்து படித்துக் கொண்டிருக்கிறார்கள். அப்படிப்பட்ட எழுத்தாளர்களில் ஒருவரைப் பற்றிய செய்தி ஒன்று சமீபத்தில் வந்ததை உங்களில் பலர் கவனித்திருக்கலாம். அவர் நேற்று ஒரு விஷயத்தை பற்றி ஓர் அபிப்பிராயத்தை எழுதி யிருப்பாராம். இன்று அவசியம் ஏற்பட்டால், கூசாமல் அந்த அபிப்பிராயத்தைத் தலைகீழாய் மாற்றி எழுதிவிடுவாராம். 'இதென்ன பல்டி' என்று நாம் பரிகசித்துப் பயனில்லை. உண்மை என்பது என்றும் எந்நிலையிலும் ஒரே விதமாய் இருப்பதல்ல. நேற்றைய நிலைமைகளிலும், நேற்று நாம் இருந்த மனோபாவத்திலும் நம்மிடம் பிறர் கொண்டிருந்த தொடர்புகளிலும் உண்மையாயிருந்த ஒன்று, அந்த நிலைமையும் மனோபாவமும் தொடர்பும் மாறியதால், இன்று பொய்யாகிவிடலாம். உடனே அதற்கேற்றபடி ஒரே சுழலாய் 'அந்தர்' அடிக்கும் சர்க்கஸ் வித்தையை, அநாயாசமாய்ச் செய்யக்கூடியவன் சுயேச்சை எழுத்தாளன்தான். அரசியல் வாதிகளும் பத்திரிகைகளும் இப்படிச் செய்ய முடியாது; கொஞ்சம் கொஞ்சமாய்ப் பல 'குட்டிக் காரணங்கள்' போட்டுத்தான் அவர்கள்

அந்த மாறுதலை அடைய முடியும். அதாவது, புரட்சிக்கும் பரிணாமத்துக்கும் எவ்வளவு வித்தியாசமுண்டோ அவ்வளவு வித்தியாசமுண்டு அவனுக்கும் இவர்களுக்கும் இடையிலே.

பத்திரிகாலயங்களிலே கட்டுண்ட எழுத்தாளர்களை விட, சுயேச்சை எழுத்தாளர்களுக்கு மிகுந்த சுதந்தரமுண்டு என்பது மாத்திரமல்ல; அதிக வசதிகளுமுண்டு. சுயேச்சை எழுத்தாளர்கள், நாலு இடங்களுக்கும் போய்வர முடியும்; ஜனங்களின் நிலையை நேரே காணமுடியும்; பல அந்தஸ்தில் உள்ளவர்களையும் கண்டு பேசமுடியும்; வேண்டிய ஓய்வும் எடுத்துக்கொள்ள முடியும். இந்த அனுபவங்களையெல்லாம் அடிப்படையாய் வைத்துக்கொண்டு, எந்தப் பிரச்னையையும் பற்றி, தர்க்க நியாயங்களோடு மனித உணர்ச்சிகளையும் குழைத்த சித்திரங்களை, சுயேச்சை எழுத்தாளர்கள் தீட்டிவிடுவார்கள். பத்திரிகாலய எழுத்தாளர்களோ, காகிதத் தகவல்களையே ஆதாரமாய்க் கொண்டு, வறட்டுத் தர்க்கவாதம் மட்டிலுமே புரியமுடியும்.

இவ்விதமான சுயேச்சை எழுத்தாளர்களுக்கு, அமெரிக்காவிலும் ஐரோப்பாவிலும் தான் இடம் உண்டா? இங்கே, தமிழ் நாட்டிலே, கிடையாதா? தாராளமாய் இங்கேயும் அவர்களுக்கு இடம் உண்டு. ஆனால், ஏன் அவர்களைப் பிரபலமாய் இங்கே காண முடியவில்லை என்றால், இன்னும் நம் பத்திரிகை முதலாளிகளில் பெரும்பாலோருக்கு; பத்திரிகைத் தொழிலின் மிக முக்கியமான ஒரு தத்துவம் தெரியாததுதான் காரணம். எழுத்தாளர்களுக்குச் செலுத்தவேண்டிய பூரண மதிப்பையும், அவர்கள் இன்னும் செலுத்தவில்லை. பத்திரிகைத் தொழிலுக்கும் உப்புப்புளி வியாபாரத்துக்கும் எவ்வித வித்தியாசமும் இல்லை என்பது போலவே இருக்கிறது அவர்களுடைய மனோபாவம். உடம்புக்கு மூளை எவ்வளவு அவசியமோ அவ்வளவு அவசியம் பத்திரிகைக்கு எழுத்தாளர்களும் என்று அவர்கள் அறியவில்லை. ''விளம்பரத்திலே பணம் வருகிறது; மற்ற வழிகளிலே பணம் வருகிறது—அதெல்லாம் நமது சாமர்த்தியத்தைப் பொறுத்தவை'' என்று அவர்கள் நினைக்கிறார்கள். நியாயம். ஆனால், ''அந்தப் பணத்திலே எழுத்தாளனுக்கு ஏன் பங்கு கொடுக்கவேண்டும்? எழுத்தாளனைத் தர்வைக்கு வைத்துக்கொண்டு, ஏதோ 'காமா சோமா' என்று காரியத்தை நடத்தவேண்டியது'' என்றும் நினைக்கிறார்கள். இதுதான் தவறு. பத்திரிகை என்பது வெறும் வர்த்தகம் அல்ல; ஜனநாயகத்திலேயே ஓர் அங்கம் அது. பத்திரிகைகளுக்கு மேம்பாடும் நீடித்த பெருமையும் நல்ல செல்வாக்கும் வேண்டும் என்றால், அதெல்லாம் எழுத்தாளர்களால்தான் சம்பாதிக்க முடியும். அதனால் கிடைக்கும் வியாபார வெற்றி, உப்பு சப்பற்ற பத்திரிகையைக் கொண்டு, முதலாளியின் சாமர்த்தியத்தினால் மட்டுமே அடையும் வியாபார வெற்றியைக் காட்டிலும், எவ்வளவோ அமோகமாகவும் இருக்கும்.

இன்றாவது நிலைமை கொஞ்சம் தேவலை. சுமார் பதினைந்து வருஷங்களுக்கு முன்னே சுயேச்சை எழுத்தாளர்களுக்கு, தமிழ் நாட்டில் ஆதரவே கிடையாது. அப்போது ஒரே ஒரு பெரிய பத்திரிகைதான், எனக்குத் தெரிந்த

மட்டில், விஷயதானம் செய்வோருக்கு ஏதோ கையைக் கிள்ளுவதுபோல், சொற்ப சன்மானம் அளித்து வந்தது. அதற்கும் பிரமாத சிபார்செல்லாம் வேண்டும். மற்றப் பத்திரிகைகளுக்குச் செய்யப்பட்ட விஷயதான மெல்லாம், விஷயதானம்தான். இந்த நிலைமையில் ஒரு நண்பர், புதிதாய்ப் பத்திரிகை முயற்சி ஒன்றில் இறங்கினார். அவரிடம் ஏராளமான முதல் ஒன்றும் கிடையாது. அப்படியிருந்தும் அவர் சொன்னார்: ''எழுத்தாளர்களைப் பட்டினி போடக்கூடாது. அவர்கள் ஒவ்வொருவருக்கும் நிறைய நிறையச் சன்மானம் அளிக்க வேண்டும். சன்மானம் அளிக்காத ஒரே ஒரு விஷயங்கூட என் பத்திரிகையில் இருக்கக்கூடாது'' என்றார். எனக்கு ஆச்சர்யமா யிருந்தது. '' இது சாத்தியமே யில்லை. செய்ய வேண்டியவர்கள், செய்யக்கூடியவர்கள் எல்லாம் இப்படிச் செய்யவில்லை. நீங்கள் என் இவ்வித சங்கல்பம் செய்துகொள்கிறீர்கள்?'' என்றேன். ஆரம்ப காலத்தில், அவரால், எழுத்தாளர்களுக்குப் பணம் கொடுக்க முடியவில்லை. இருந்தாலும், கணக்கு மாத்திரம் வைத்துக்கொண்டு, ஒவ்வொருவருக்கும் பணம் கொடுப்பதாகவே சொல்லி வந்தார். கொஞ்சகாலத்தில், மிகுந்த செல்வாக்கும் பெருமையும் அடைந்தது அவரது பத்திரிகை. எழுத்தாளர்களுக்கு ஏராளமாய்ச் சன்மானம் அளிக்கத் தொடங்கினார். இன்று தமிழ் நாட்டில், மிக உன்னதமான ஒரு ஸ்தானம் வகிக்கிறது அவருடைய பத்திரிகை. உண்மையைச் சொல்லப்போனால், இன்று சுயேச்சையான தமிழ் எழுத்தாளர்களுக்குப் பற்பல பத்திரிகைகளும் ஏதோ கொஞ்சம் ஊதியமாவது அளிக்கிற தென்றால், அதற்கு வழி காட்டியவர் அவரே என்றுதான், நான் மதிக்கிறேன்.

அவருடைய பத்திரிகைக்கு இணையாக, செல்வாக்கிலும் பெருமையிலும், முன்னேறக் கூடியவை என்று தோன்றிய சில பத்திரிகைகள் விழுந்து போனதையும் நான் கண்டிருக்கிறேன். வியாபார ரீதியில், அவை மிக உச்ச நிலையை எட்டி விட்டன. அப்படியிருந்தும், அவை ஏன் விழுந்து போயின என்று யோசிக்கும் போது, ஒரே ஒரு காரணம்தான் எனக்குத் தோன்றுகிறது. எழுத்தாளர்களுக்குச் செலுத்த வேண்டிய மதிப்பை அவற்றின் அதிபர்கள் செலுத்தவில்லை. ஆசிரியர்களைக் குமாஸ்தாக்களைப் போல் அந்த அதிபர்கள் மதித்தார்கள்; எழுத்தாளர்களை, சப் ரெஜிஸ்டிரார் ஆபீஸில் சாசனம் எழுதுபவனைப் போல் எண்ணினார்கள். அவர்களுடைய பத்திரிகைகளுக்குப் பெருமையும் கௌரவமும் இல்லாது போயிற்று.

ஆனால், காலம் மாறி வருகிறது. வர வர, பற்பல தமிழ் எழுத்தாளர்களுக்கும் ஜனங்கள் அதிகமதிகமாய் மதிப்புச் செலுத்தி வருகிறார்கள். அதனால், இன்று எழுத்தாளர்கள் நேரே லாபம் அடையா திருக்கலாம். என்றாலும், பத்திரிகைத் தொழில் இந்த மாறுதலால் சிறப்படைந்துதான் வருகிறது. இந்தப் பாழும் யுத்தம் மட்டில் இன்று நடந்து கொண்டிராவிட்டால், இப்பொழுதே கூடத் தமிழ்ப் பத்திரிகை உலகம் மிக உயர்ந்த நிலையை எட்டி யிருக்கும். அதன் ஓர் அம்சமான சுயேச்சை எழுத்தாளர்களும், சக்தியும் செல்வாக்கும் அடைந்திருப்பார்கள். இந்த

யுத்தத்தினுல் வாழ்க்கையின் பல துறைகள் நிலைகுலைந்தன. அவை களுக்குள் ளெல்லாம் மிக முக்கியமான ஒன்று பத்திரிகைத் தொழில்தான். ஆயினும், யுத்தத்தின் சகல பாதகங்களுக் கிடையேயும் இடைஞ்சல்களுக் கிடையேயும், அணையா விளக்காக, பத்திரிகைத் தொழிலை நாம் காப்பாற்றிவர வேண்டும்; சுயேச்சை எழுத்தாளர்களையும் மனந் தளராதபடி பாதுகாத்து வர வேண்டும். ஏனெனில், எந்த ஜனநாயகத்தைக் காப்பாற்றுவதற்காக இந்த யுத்தம் நடப்பதாய்ச் சொல்லப்படுகிறதோ அந்த ஜனநாயகத்தின் வருங்காலத்தில், அவற்றினுடைய கடமையும் அவர்களுடைய சேவையும் மிக முக்கியமானவை யாகும்.

★

நரகம் உண்டா?

கறுப்புப் பாதிரியார் ஒருவர், 'நரகம் உண்டா?' என்ற விஷயம் பற்றிப் பிரசங்கம் செய்தார்.

பாதிரியார்: "சகோதரர்களே! உலகத்தைக் கர்த்தர் ஒரு பந்துபோல் உருண்டையாய்ப் படைத்தார்."

சபையோர்: "ஆமென்."

பாதிரி: "அந்த உலகம் சுழல்வதற்காக, வட துருவத்திலும் தென் துருவத்திலும் இரண்டு அச்சுக்களை அவர் அமைத்தார்."

"ஆமென்!"

"அந்த அச்சுக்கள் தேய்ந்து சூடாகாமல் ஒழுங்காக வேலை செய்வதற்காகப் பூமியின் வயிற்றிலே ஏராளமாய் எண்ணெயை ஆண்டவன் ஊற்றி வைத்தார். அதன் பின்பு, ஏராளமான பாவிகள், டெக்ஸாஸ், ஒக்லஹாமா, கலிபோர்னியா, பென்ஸில்வானியா, மெக்ஸிகோ, ருஷ்யா ஆகிய இடங்களில் கிணறுகள் வெட்டி, கர்த்தரின் எண்ணெயைத் திருடி வருகிறுர்கள்."

"ஆமென்!"

"ஒருநாள், சகோதர சகோதரிகளே! கடவுளின் எண்ணெய் பூராவும் காலியாகிவிடப் போகிறது. அச்சுக்கள் சூடேறிவிடும். அப்போது உலகம் நாசமாகப் போகிறது. அதுதான் நரகம், சகோதரர்களே! அதுதான் நரகம்."

சங்கீத சுகம்

பீதோவன் என்ற ஜெர்மன் சங்கீத சாகித்ய கர்த்தா ஒரு மகா மேதை. அவருடைய சங்கீதமும் சரி, சாகித்யமும் சரி, கேட்போரைப் பரவசப்படுத்தி மெய்மறக்கச் செய்யுமாம். இப்பேர்ப்பட்ட கீர்த்திமான், ஒரு ரொட்டிக் கடைக்காரனின் வீட்டில் ஜாகை வைத்துக்கொண்டிருந்தார். அவரால் யாருக்கும் எவ்விதத் தொந்தரவும் கிடையாது. என்றுலும், அவரிடம் ஒரே ஒரு வழக்கம் மாத்திரம் உண்டு. அதாவது, தமது அறையில் அடிக்கடி சங்கீதம் பொழிந்துகொண்டிருப்பார்.

இந்தக் கர்ணமிர்தமான சங்கீதத்தை, பாட்டருமை தெரியாத அந்த ரொட்டிக்கடைக்காரனுல் சகிக்கமுடியவில்லை. ஒருநாள் அவன் பீதோவனிடம் வந்து, "ஐயா! நான் ரொட்டி சுடவேண்டியவனு யில்லாவிட்டால், இந்தச் சந்தடியெல்லாம் எனக்குத் தொல்லையா யிராது. நானே ரொட்டி சுடுபவன். பகலிலே தூங்கினுல்தான் இரவிலே விழித்துக்கொண்டு, ரொட்டி சுட முடியும். ஆகையால், ஐயா பீதோவன்! நீங்கள் வேறு ஜாகை பார்த்துக்கொள்ளுங்கள். என்மேல் வருத்தப்படக்கூடாது" என்றுன்! ஆட்டிடையன் சங்கீத வித்வானுக்குச் சூடு போட்ட கதை மாதிரிதான் இருக்கிறது இது. இல்லையா?



17 MAY 1943
88833
MADRAS

★

ஐயரவர்கள்

மு. அருணாசலம்

தமிழிலக்கியப்பரப்பிலே, இலக்கியத்துக்கும் இலக்கணத்துக்கும் உரைசெய்த பழைய உபகாரிகள் பலர் இருந்திருக்கிறார்கள். தமிழ் வளத்தை நாம் உணர்வதற்கு இவர்களுடைய அருந்தொண்டு காரணமாயிருந்து வருவது உண்மை. இளம்பூரணர், அடியார்க்கு நல்லார், பரிமேலழகர், நச்சினார்க்கினியர் முதலியவர்கள் அவ்வுபகாரிகளிற் சிலர். இவர்களனைவரும் உரையாசிரியர்களே ஆயினும், பொதுவாக உரையாசிரியர் என்று மட்டும் குறிப்பிட்டவுடனே, இப் பெயர் இளம்பூரணரையே குறிக்கும் என்பதைத் தமிழ்நூற் பயிற்சியுடையவர் யாவரும் அறிவார்கள். இளம்பூரணர் உரையின் எளிமையும் நேர்மையும் தெளிவும் காரணமாக, உரையாசிரியர் என்ற பொதுப் பெயர் அவருக்கே யுரிய சிறப்புப் பெயராகி விட்டது.

> தமிழ்ப் பற்று நிறைந்த எவருக்கும் ஐயரவர்களிடம் பயபக்தி. தமிழ்ப் பற்றுள்ள எவரையும் சந்திப்பதில் ஐயரவர்களுக்குப் பெரு மகிழ்ச்சி. கட்டுரையாளர், தமிழன்பு மிக்கவர். ஐயரவர்களைத் தாம் சந்தித்த இனிய அனுபவங்களைக் கூறும்போதே, ஐயரவர்களின் அருங் குணாதிசயங்களையும் அழகாய் விளக்கி விடுகிறார்.

இதே போன்றதோர் உண்மையை இந்த இருபதாம் நூற்றாண்டின் முற்பாதியிலே நாம் காண்கிறோம். எத்தனையோ பேர் தமிழ் நூல்கள் எழுதியும் உரையிட்டும் பதிப்பித்தும் தமிழ்ப் பணி செய்திருக்கிறார்கள். ஆனால், இன்று தமிழறிந்தவர்கள் அடங்கிய எந்தக் கூட்டத்திலும், ஐயரவர்கள் என்று சொன்னால், அப்பெயர் சுட்டுவது காலஞ் சென்ற டாக்டர் உ. வே. சாமிநாதையர் ஒருவரை மட்டுமே யாகும். சாமிநாதையர் அவர்களுக்கு எத்தனையோ பட்டங்கள் வழங்கப் பட்டன — மகாமகோபாத்தியாயர், தட்சி

ஞாத்திய கலாநிதி, திராவிட வித்தியா பூஷணம், டாக்டர் என்றெல்லாம் பல பட்டங்கள். ஆனால், பொதுப் பெயராகிய ஐயர் என்ற பட்டம், அவருக்கு மட்டுமே யுரிய சிறப்புப் பெயராகி, அவருடைய பட்டங்கள் அனைத்திலும் புகழுடையதாக இன்றும் விளங்குகிறது.

ஐயரவர்கள் பதிப்பித்து வெளியிட்டுள்ள தமிழ்ப் புத்தகங்கள் யாவும், அவர்களுடைய கல்விப் பெருக்கு, ஆராய்ச்சியின் திறம், சமய வுணர்ச்சி, அயராத உழைப்பு, 'என் கடன் தமிழ்ப் பணி செய்து கிடப்பதே' என்ற அவர்களது உள்ளப்பாங்கு, உரைக்குறிப் பெழுதுவதிலுள்ள நேர்மை, அடக்கம் ஆகிய அரிய இயல்புகளை நமக்குத் தெளிவாகக் காட்டுகின்றன. அவர்கள் பதிப்பித்த மிகப் பெரிய நூல்களாகிய சிலப்பதிகாரம், சீவக சிந்தாமணி முதல், முப்பதே பாடல்கொண்ட மிகச் சிறிய நூலான பழனிப் பிள்ளைத்தமிழ் வரையி லுள்ள எல்லா நூல்களிலும் இந்த இயல்பு களைக் காணலாம். பலவேறு காலத்திலே தோன்றிப் பல ஆசிரியர்கள் செய்தற்குரிய தமிழ்ப் பணியை யெல்லாம் ஐயரவர்கள் தம் வாழ்நாளிலே செய்து முடித்தார்கள்.

அவர்கள் தமிழுக்குச் செய்துள்ள தொண்டைப் பாராட்டும் பொருட்டு, அவர்களுடைய எண்பதாண்டு நிறைவு விழா சென்னையில் பெருஞ் சிறப்போடு கொண்டாடப் பெற்றது. அந்தக் காலம் முதற்கொண்டு, அடிக்கடி அவர்களைச் சந்தித்துப் பழகும் பேறு எனக்குக் கிடைத்தது. இரண்டாந் தடவை அவர்களை நான் மட்டும் தனித்துப் பார்த்துப் பேசிய போது நிகழ்ந்த வற்றை நான் மறத்தல் இயலாது. அப்போது காலை நேரம். அருகில் வேறெவரும் இல்லை. மாடியிலே காலடிச் சத்தத்தைக் கேட்டு, 'யாரது?' என்றார்கள். 'அருணாசலம்' என்றேன். அதிகப் பழக்கமில்லாமையினாலும், கண் பார்வை சிறிது குறைந்திருந்தமையினாலும், உடனே நினைவு வரவில்லை. மறுபடியும், 'மாம்பலத்திலிருந்து வருகிறேன், எனது ஊர் திருச்சிற்றம்பலம்' என்றேன். அவ்வளவுதான்: 'வரவேண்டும், வரவேண்டும்' என்று கூறிவிட்டு, தங்களுடைய தள்ளாமையையும் பொருட்படுத்தாமல் எழுந்து ஒரு நாற்காலியை எடுத்தார்கள்; அதற்குள் அங்கிருந்த ஒரு பலகையில் உட்கார்ந்து விட்டேன். ஆனால் அவர்கள், 'இங்கே இருக்க வேண்டும்' என்று அந்த நாற்காலியைக் காட்டினார்கள். அவர்கள் விருப்பப்படி அதில் நான் உட்கார்ந்த பிறகுதான், மேலே பேசவும் விசாரிக்கவும் தொடங்கினார்கள்.

மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் பாடிய விளத்தொட்டிப் புராணத்தை அப்போதுதான் ஐயரவர்கள் அச்சிட்டு முடித்திருந்தார்கள்; மற்றொரு புராணமாகிய ஆற்றூர்ப் புராணத்தை அச்சிட ஏற்பாடு செய்து வந்தார்கள். இவ்விரண்டு ஊர்களும் என் ஊரை யடுத்துள்ளவை. நூல்களை அச்சிடுமுன் ஐயரவர்கள் இவ்வூர்களை ஒருமுறை போய்ப் பார்த்து விட்டு வந்தார்கள். அங்கே போனதையும், அப்போது எங்கள் ஊருக்குப் போனதையும், அங்கே என் தகப்பனார் முதலியவர்களைக் கண்டதையும், அங்குள்ள கோயில்களின் அமைப்பையும் பற்றிச் சிறிது நேரம் எனக்குச் சொல்லிக் கொண்டுவந்தார்கள். பிறகு, கேட்டார்கள்:

"தம்பி இப்போது என்ன படித்து வருகிறது?"

இந்தக் கேள்விக்கு விடை கூறக் கூடிய நிலைமையில் நான் அப்போது இல்லை. தமிழ் நூல் எதையும் நான் படித்து வரவில்லை. ஐயரவர்கள் தமிழுக்குச் செய்த அருந் தொண்டையும் அவர்களுடைய அயராத உழைப்பையுங் கண்டு, அவர்களிடம் எனக்கு அளவற்ற பக்தியும் மரியாதையும் பிறந்திருந்தன. இருந்தாலும், தமிழ் படிக்கும் பழக்கம் இன்னும் ஏற்பட்டுவிடவில்லை. ஆகவே, அவர்கள் இயல்பாகக் கேட்ட கேள்விக்கு விடைகூற வகையின்றி, நான் விழித்ததில் வியப்பில்லை.

மற்றொரு முக்கிய காரணமும் உண்டு. அக்காலத்தில் தமிழாசிரியர்கள் பலரைக் கண்டு பேசி வந்திருக்கிறேன். தமிழ் படிக்க வேண்டும், தமிழறிவு நிரம்பப் பெற வேண்டும் என்ற ஆசை காரணமாகத் தமிழறிஞர் பலரோடு பழகியு மிருக்கிறேன். இவர்கள் அனைவரும் என் போன்ற இளைஞர்களோடு உரையாடும் போது, சினிமாவைப் பற்றிப் பேசுவார்கள்; அரசியலைப் பற்றிப் பேசுவார்கள்; உத்தியோகத்தில் 'பிரமோஷன்' கிடைப்பதைப் பற்றிப் பேசுவார்கள்; உடல் நலத்தை விசாரிப்பார்கள்; டாக்டரிடம் 'இஞ்செக்ஷன்' பண்ணிக் கொள்வதைக் குறித்துக் கேட்பார்கள்; தமிழ் ஒன்றைப் பற்றி மட்டும் பேசவே மாட்டார்கள். ஒரு வேளை, 'இவனும் தமிழ் படித்து விட்டால், ஆபத்தல்லவா?' என்ற பயமோ என்ன காரணமோ எனக்குத் தெரியவில்லை. 'தமிழ் படிக்கிறாயா? இன்ன புத்தகத்தைப் படி' என்று சொன்னவர்களை நான் அதுகாறும் கண்டதில்லை.

ஆகவே, எதிர்பாராத வகையில் ஐயரவர்கள் வினவியபோது, நான் திணறிப்போனேன். எந்த நூலையும் நான் படித்து வரவில்லை என்று எனக்கு வெட்கமாயிருந்தது. ஆயினும், ஒரு வகையிலே நிதானித்துக்கொண்டு, "தாங்கள் எந்த நூலையாவது படிக்கும்படி குறிப்பிட்டுச் சொல்லுங்கள்; அதையே முறையாகப் படித்து வருகிறேன். தமிழ் நூல்களிலே எனக்கு அதிகப் பழக்கமில்லை" என்று சாமர்த்தியமாகக் கூறினேன்.

அப்போது அவர்கள் சொன்ஞர்கள்: "திருவிளையாடற் புராணம் படிக்கவேண்டும். பரஞ்சோதி முனிவருடைய வாக்கு அருள்வாக்கு. முனிவர், கம்பராமாயணம் போன்ற பேரிலக்கியங்களின் சுவையிலே திளைத்தவர். அன்றியும் ஆழ்ந்த சிவபக்தியுடையவர். எனவே, அவர் பாடிய திருவிளையாடற் புராணம் அரிய இலக்கிய மணம் கமழும்; அதனோடு, நுட்பமான சைவ சித்தாந்தக் கருத்துக்களை ஆங்காங்குச் சுவைபட எடுத்துரைக்கும். சைவபரம்பரையிலே உதித்த தம்பி போன்ற சிறு பிள்ளைகள், தங்கள் சமயக் கோட்பாடுகளையுணரவும், இலக்கிய உணர்ச்சி பெறவும், இந்நூல் பெரிதும் துணை செய்யும்" என்ஞர்கள்.

அப்படியே படிப்பதாக ஒப்புக் கொண்டேன். புத்தகத்தின் பெயரைமட்டும் எனக்குச்சொன்னல் போதாதென்று கருதி, அவர்கள் அதிலிருந்து ஒரு பாடலை எடுத்து எனக்கு விளக்கிச்சொன்ஞர்கள்.

கூடவுள் அடியார்க்கு எளியன்
அல்லவா? மதுரைச் சோம

சுந்தரக் கடவுள்பால் அன்பு மிகுந்த பாண பத்திரர் என்ற ஓர் இசைப் புலவர் பொருட்டுச் சிவ பெருமான் தம்முடைய திருமுடி யிலே விறகுக்கட்டைச் சுமந்து பாதங்கள் நோவ வந்து, பாண பத்திரரோடு இசைவாது செய்ய வந்த இசைப் புலவன் வீட்டுத் திண்ணையில் இருந்து பாடுகிறார். இறைவனுடைய பெருங்கருணை யையும் எளிமையையும், 'நிந்தா ஸ்துதி' என்று சொல்லுகின்ற முறையிலே சொல்லிப்பாடுகிறார்.

உள்ளன்போடு ஒரு கை நீரைச் சொரிந்து அவனை நீராட்டி ஏதே னும் ஒரு பசிய இலையைக் கிள் ளிப் போடுபவருக்கு அவன், இந்திரலோகமாயினும் வைகுந்த லோகமாயினும் பிரமலோகமாயி னும் எளிதிலே கூட்டி வைக் கிறான். இப்படிப்பட்ட பெருமை யுடைய இறைவன், பிச்சையேற் குந் திருமேனியோடு உலகிலே உலவி, ஆன்மாக்களுடைய அறி யாமையாகிய ஆணவத்தையே பிச்சையாக ஏற்கிறான் என்பதை மாந்தர் உணராமல், அவன் கையிலே ஓட்டை ஏந்திப் பிச்சை ஏற்கிறான் என்று கூறி நகைக் கிறார்கள் என்பது பாட்டின் பா வம். இதைச் சொல்லிவிட்டு ஐய ரவர்கள் பாட்டைப்பாடினார்கள்:

குடங்கை நீரும் பச்சிலையும்
இடுவார்க் கிமையாக் குஞ்சரமும்
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய், மதுரைப் பரமேட்டி!
படங்கொள் பாயும் பூவணையும்
தருவாய் கையிற் படுதலைகொண்டு
இடங்கள் தோறும் இரப்பாய் என்று
ஏசு வார்க்கென் பேசுவனே!

இப்படி அவர்கள் திருவிளை யாடலைப் பாடியும் பாராட்டியும் எனக்குச் சொல்லியபோது, ஓர் எண்ணம் மனதிலே எழுந்தது. அவர்கள், ஐம்பெரும் காப்பியங் கள் என்பவற்றிலே மூன்றை மிக்க அருமையோடு வெளியிட் டிருக்கிறார்கள். எட்டுத்தொகை யுள் புற நானூறு போன்ற நான்கை வெளியிட் டிருந்தார் கள். அன்றியும், பத்துப் பாட்டு, பெருங்கதை என்றெல்லாம் எண் ணற்ற பெரு நூல்களையும் சிறு நூல்களையும் வெளியிட்டுள்ளார் கள். இவற்றுளொன்றைப் படிக்குமாறு எனக்கு அவர்கள் சொல்லி யிருக்கலாம்; ஆனால் சொல்லவில்லை! இதை எண்ணுந் தோறும், ஐயரவர்களுடைய உள் ளப் பாங்கை நினைத்து நினைத்து எனக்குள்ளேயே பாராட்டிக் கொள்வேன்.

அடுத்த முறை அவர்களை நான் பார்த்தபோது, 'கம்பராமாய ணத்தைப் படிக்கும்படி ஏன் கூற வில்லை?' என்று கேட்டேன். அதற்கு அவர்கள் சொன்னார் கள்: "கம்பராமாயணம் ஓர் அரிய இதிகாசம். புதிதாகப் படிக்கத் தொடங்குபவர்கள் . அதைப் படித்தால் அதன் சுவை முழுவ தையும் உணர்ந்து அனுபவித்தல் இயலாது. முதலிலே படிக்கத் தக்க நூல்கள் அந்தாதி, கலம் பகம், பிள்ளைத்தமிழ், உலா, தூது முதலியன. இவற்றைப் படித்து, தமிழ்ப் பயிற்சி சிறிது வந்தவர் கள், திருவிளையாடல் போன்ற இலக்கியத்தைப் படிக்கலாம். இதையும் தேவார திருவாசகங் களையும் படித்த பின்னரே, கம்ப ராமாயணம் படித்தற்குரியது" என்றார்கள். தமிழறிவும் வாழ்க்கை யனுபவமும் நிரம்பப் பெற்றபின் படித்தால்தான், கம்பராமாயணம் மிக்க பயன் தரும் என்பது அவர்கள் கருத்து.

கம்ப ராமாயணத்தை ஐய ரவர்கள் நன்ருக ஊன்றிப் படித்த வர்கள். ஒரு தட்வை கம்பராமாய ணத்தின் பெருமையை விளக்கிச் சொல்லியபோது, கடைசியில், "கருப்பூரம் நாறுமோ, கமலப்பூ

நாறுமோ, திருப்பவளச் செவ்வாய்தான் தித்தித்திருக்குமோ" என்ற ஆண்டாள் பாசுரத்தைச் சொன்னார்கள். சொல்லியபின், "அந்தத் திருப்பவளச் செவ்வாய்தான் கம்பராமாயணத்தின் சுவை முழுமையும் எடுத்துக் கூற வல்லது" என்று முடித்தார்கள்.

அந் நூலினிடம் அவர்களுக்கிருந்த ஈடுபாட்டை அவர்களுடைய செயலாலேயே அறியலாம். கம்பர் பிறந்த ஊரென்று வழங்கும் தேரழுந்தூருக்கு அவர்கள் ஒரு முறை போயிருந்தார்கள். அங்குள்ள சிவன் கோயிலிலும் விஷ்ணு கோயிலிலும் வழிபாடு செய்தபின், கம்பரைப் பற்றி விசாரிக்க வேண்டுமென்று அவர்களுக்கு ஆசை யுண்டாயிற்று. கம்பரைப் பற்றி யாருக்குத்தான் தெரியமுடியும்? முதியவரொருவர் வந்து, கம்பர் வாழ்ந்த வீடு இருந்த இடத்தைக் காட்டுவதாக ஐயரவர்களை அழைத்துச் சென்றார். ஊரின் தென்மேற்கு மூலையிலுள்ள ஒரு மேட்டைக் காட்டி, "இதுதான் கம்பர் மேடு, கம்பர் வாழ்ந்தவீடு இங்கேதான் இருந்ததென்று பெரியோர் சொல்லுவார்கள்" என்றார். ஐயரவர்கள் அப்படியே கண்ணீர் பெருக்கி, எல்லா உறுப்புக்களும் நிலத்தில் தோயக் கீழே விழுந்து வணங்கினார்கள். இச் செய்தியைத் தேரழுந்தூர்வாசிகள் இன்னும் சொல்லி வருகிறார்கள்.

சிறந்த முறையிலே கம்பராமாயணத்தை அதிலுள்ள பல்வகைச் சுவைகளும் விளங்கும்படியாக விசேடக் குறிப்புக்களோடு ஒரு பதிப்பு வெளியிட வேண்டுமென்று முயன்று குறிப்பெழுதி வைத்ததுமுண்டு; அவ் வெண்ணம் முற்றுப் பெறவில்லை.

டி. கே. சி. யவர்கள் கம்பராமாயணப் பாட்டை எடுத்துச் சொல்லும் முறையிலே ஐயரவர்களுக்கு மிக்க ஈடுபாடுண்டு. டி. கே. சி. வந்து தம்மோடு பேசிக்கொண்டிருக்கும்போதும் பாடல் சொல்லும்போதும், தம் மாணவர்களையழைத்துக் கவனமாய்க் கேட்கச் சொல்லுவார்கள். ஒரு சமயம் அவர்கள் டி. கே. சி. க்கு எழுதிய கடிதமொன்றில், "நூல்களை ஆராய்ந்து வருகையில், நல்ல கவியைப் பார்க்கும்போதெல்லாம் தங்கள் நினைவு வருகிறது" என்று குறிப்பிட்டார்கள். இது ஐயரவர்களின் ரசிகத் தன்மைக்குச் சிறந்த எடுத்துக்காட்டாகும்.

ஐயரவர்கள் இளமையில் முறையாக இசை பயின்றவர்களென்பதை அவர்கள் சரித்திரத்தால் அறியலாம். அன்றியும், நூற்பரிசோதனையிலும், ஆராய்ச்சியிலும் ஈடுபடாத நேரத்தில் அவர்கள் மனமுருகத் திருவாசகத்தையும் தேவாரத்தையும் பாடிக்கொண்டு சிவத்தியானத்திலே ஆழ்ந்திருப்பார்கள். ஒரு முறை அவர்கள் நோய் வாய்ப்பட்டு, சத்திர சிகிச்சை செய்துகொண்டு, பிறகு குணமடைந்து வந்தார்கள். அந்த நிலையிலே, வீட்டிலே சென்று அவர்களைக் கண்டேன். ஏதோ பேசிக்கொண்டே வந்தவர்கள் இடையிலே ஒரு பாட்டைச் சொல்ல வேண்டி வந்தது. தள்ளாமையும் அயர்ச்சியும் காரணமாக நாற்காலியில் சாய்ந்துகொண்டிருந்தவர்கள், மிக்க சிரமத்தோடு எழுந்து நிமிர்ந்து உட்கார்ந்து, பாட்டைப் பாட ஆரம்பித்தார்கள். கையை ஆட்டிக்கொண்டு பாடலானார்கள். முதுமையினாலும் நோயினாலும் கைகள் நடுங்கின. உதடுகளும் நாவும் அசைந்து நடுங்கி

68833

யது போலவே தோற்றின. குர லிலும் ஓர் ஆட்டம் இருந்தது. ஆயினும், பாடல் என்ற உட னேயே, தமது உடல் தளர்ச்சி யையும் பார்க்காமல் அவர்கள் பாட ஆரம்பித்து விட்டார்கள். அன்றியும், பாட்டென்ருல் அதைப் பாடவேண்டும், உயி ரற்ற வசனம்போல் படிக்கக் கூடாதென்பதே அவர்களுடைய கொள்கை. அன்று அவர்கள் ஒரு பாடலைப் பாடிய தோற்றமும், முகத்திலே பொலிந்த உற்சாக மும், குரலின் நடுக்கமும் உட லின் தளர்ச்சியும் இப்போதும் என் கண் முன் நிற்கின்றன.

ஐயரவர்கள் பேச்சு எப்போதும் சுவையுடையதா யிருக்கும். வீணிலே வந்து பேசிப் பொழுது போக்க விரும்புவோருக்கு இடங் கொடுக்கமாட்டார்கள். வருப வர் மனம் புண்படாமல், தமது நேரம் வீணாய்ப் போகிறதென் பதை நயமாகக் குறிப்பிட்டு விடை கொடுத்து அனுப்பிவிடு வார்கள்.

ஒருசமயம் பிற்பகலிலே ஆசிரிய ரொருவர் ஐயரவர்களைக் கண்டு நெடு நேரம் பேசிக்கொண்டிருந் தார். இரண்டு மணி நேரம் பேசியும் போவதாகக் காணேம். இந்த நிலையிலே மாலை நான்கு மணிக்கு நான் போனேன். என் னைக் கண்டதும் அவர்கள் அன் புடன் வரவேற்று, அவ்வாசிரிய ருக்கும் அறிமுகம் செய்துவைத் தார்கள். இரண்டு மூன்று நிமி ஷம் கழிந்த பிறகு, அவர்கள் அவரைப் பார்த்து, "தம்பி என் பால் நிரம்ப அன்புடையவர்கள். ஏதோ காரணமாக என்னைப் பார்க்க வந்திருக்கிருர்கள்" என் ருர்கள். உண்மையில் நான் எந் தக் காரியத்துக்காகவும் போகவு மில்லை. ஆனல், அவரைப் போகச் சொல்லாத ஒரு குறை யாகவே ஐயரவர்கள் இப்படிச் சொன்னுர்கள்; இதை அவர் அவ்வளவாக உணர்ந்துகொள்ள வில்லை.

அவர் சொன்னுர்: "அப் படியா, நீங்கள் மாடியில் பேசிக் கொண்டிருங்கள்; நான் வெளி யே சிறிது நேரம் உட்கார்ந்திருக் கிறேன்."

"தம்பிக்குக் கொஞ்சம் அதிக நேர வேலையிருக்கிறது" என்ருர் ஐயரவர்கள்.

"குற்றமில்லை. எவ்வளவு நேர மானலும் நான் காத்திருக்கி றேன்."

ஐயரவர்கள் சிரித்துவிட்டார் கள்; "தாங்கள்தான் எப்போ துமே காத்திருக்கிறீர்களே! இப் போது சிறப்பாக நீண்டநேரம் காக்கவேண்டாம்" என்று, காத் தல் என்ற சொல்லுக்கு இரு பொருள் படும்படி, பக்கு வமாகச் சொல்லிவிட்டார்கள். அவ்வாசிரியரும் வேறு வழி யில்லாமல் புறப்பட்டுப் போய் விட்டார். பிறகு, ஐயரவர்கள், அவர் தம்மோடு நெடுநேரம் பய னற்ற முறையிலே உரையாடி யதையும் அதனல் தம் நேரம் வீணாய்ப் போனதையும் கூறி வருந்தினுர்கள்.

அடுத்த முறை அவர்களை நான் பார்த்தபோது, "நான் நெடு நேரம் காத்திருக்கிறவ னல்ல" என்று சொன்னேன். முந்திய நிகழ்ச்சியை மறவாது நினைவுக் குக் கொண்டுவந்து அவர்களும் சிரித்தார்கள்.

ஐயரவர்களுடைய பேச்சிலே சிறப்பான அம்சம், அவர்கள் பேச்சின் நடை. பொதுவாக இக் காலத்தில், யார் பேசுவதானு லும், (தனிப்பட்ட முறையிலே உரையாடிக்கொண் டிருக்கும் போது) ஆங்கில மொழிச் சொற்

களும் பிறவும் பேச்சிலே ஏராள மாகக் கலக்கும். தவிர, பேசும் சொற்களும் சொற்களின் வடிவும் பெரிதும் சிதைவுற்றும் திரிந்துமே காணப்படும். வேற்றுமை உருபுகள், வினைச்சொல் விகுதிகள் முதலியன பெரும்பாலும் நாவிலே உச்சரிக்கப் பெறுமலே கழிந்துவிடும். சிலர் இவற்றை அதிகமாகச் சிதைப்பர்; சிலர் சிதைப்பது குறைவாக இருக்கலாம். எல்லோரும் ஓரளவுக்குச் சிதைத்தே வழங்குகிறுர்கள் என்பது உண்மை.

ஆனல், ஐயரவர்கள் சாதாரணமாக அன்பர்களோடிருந்து வேடிக்கையாகப் பேசிக்கொண்டிருக்கும்போதுகூட, அவர்கள் பேச்சிலே இத்தகைய சிதைவுகள் ஒன்றையும் காண முடியாது. ஒருமை பன்மை அமைப்பு, வினைமுடிபு, சொல் முடிபு, பொருள் முடிபுமுதலியன யாவும் அழகாகவும் எளிமையாகவும் பொருத்தமாகவும் அமைந்திருக்கும். எந்தச் சொல்லைச் சொல்லும்போதும், அதை நிறுத்தி ஓரெழுத்தும் கெடாதபடி உச்சரிப்பார்கள். இப்படி அவர்கள் சொல்வதும் உச்சரிப்பதும் ஏதோ வேண்டுமென்று மிக்க கஷ்டத்துடன் முயன்று செய்வதாயிராது; இயற்கையாகவே அவர்களுக்குச் சொற்கள் அத்துணைத் திருத்தமாய் வருவனவாக நமக்குத் தோற்றும். கேட்க இனிமையாகவும் வியப்பைத் தருவனவாகவும் இருக்கும். இளமையிலிருந்தே சரியான முறையில் பேசிப் பழகிவந்த ஓர் அருமை காரணமாக, அவர்கள் பேச்சின் நடை இயல்பாகவே அழகுடையதாகிவிட்டது. அவர்களுக்கு ஆங்கிலம் தெரியாதாகையினலே, ஆங்கிலச் சொற்கள் அவர்கள் பேச்சில் கலந்து வாரா. ஆகவே, எத்துணை நுட்பமான கருத்தையும் எளிய தமிழில் தெளிவாக விளக்கிக் கூறும் அவர்களுடைய பேச்சுத் திறமை யாருக்கும் வியப்பளிப்பது இயல்பு.

இளைஞர்களோடு பேசும் போது, அவர்கள் 'நீ' என்று கூறுவதே இல்லை. அவர்கள் வயதையும் நம் வயதையும் பார்க்கையில், அவர்களுடைய பேரப் பிள்ளையின் வயது கூட நமக்கு இராது என்று சொல்லலாம். ஆயினும், அவர்கள் 'நீ' என்று சொல்வதில்லை. இதற்காக ஒரு போலி மரியாதையோடு 'நீங்கள்' என்றும் சொல்லமாட்டார்கள். முன்னிலைச் சொல்லே வராதபடி பேசுவார்கள். நெடுநேரம் பேசிக்கொண்டிருந்த போதிலும், பேச்சில் சுவை குன்றுதபடியும், நீ என்றே நீங்கள் என்றே முன்னிலைப்படுத்திக் கூருமலும், மிக்க திறமையோடு பேசிவருவார்கள்.

கல்லூரி ஆசிரியரா யிருந்து பல வகையான மாணவர்களோடு பழகி, அவர்கள் செய்யும் குறும்புகளுக் கெல்லாம் ஈடுகொடுக்க வேண்டியிருந்தமையால், தம்மை வந்து பார்ப்போரிடம் திறமையாகப் பழகும் தன்மையும் அவர்களுக்கு ஏற்பட்டிருந்தது. ஒரு தடவை, ஆங்கிலப் பட்டமெல்லாம் பெற்ற ஒருவர், பல வகையான தமிழ்ப் பாடல்களை எழுதி அச்சிட்டு, அதற்கு முன்னுரை எழுதும்படி அவர்களைக் கேட்டுக்கொண்டு வந்தார்; ஒரு நாள் நேரிலும் வந்து கேட்டார். அவர் அப்போது கையிலே தந்த புத்தகத்தை ஐயரவர்கள் புரட்டிய போது, அதில் அவருடைய பெயர் 'வெங்கிட்டராமன்' என்றெழுதியிருந்தது. அப்போது அவர்கள் சொன்னர்கள்: "ஐயா, தமிழ் நாட்டில் இந்த

மாதிரி யாரும் பெயர் வைக்க மாட்டார்கள். தங்களுடைய பெயரையே சரியாக எழுதத் தாங்கள் இன்னும் தெரிந்து கொள்ளவில்லை. அதைத் தெரிந்து கொண்டு வாருங்கள்; முன்னுரை எழுதுவதைப் பிறகு கவனிக்கலாம்'' என்று சொல்லி விட்டார்கள். வந்தவருக்குத் தம்முடைய பெயரில் என்ன பிழை என்பது விளங்கவில்லை. ஐயரவர்களுடைய மாணுக்கர்களைக் கேட்டு, 'வேங்கடராமன்' என்பதே திருந்திய பெயர் என்றும், அதையே திரித்து வெங்கிட்டராமன் எனத் தாம் பிழையாக எழுதி யிருந்தார் என்றும் அறிந்து கொண்டு, வெட்கி அப்படியே திரும்பிப் போய்விட்டார்.

இப்படியாக, ஐயரவர்கள் நூல் பதிப்பிடுவதில் மட்டுமின்றி, பேச்சிலும் வல்லவராக விளங்கினர்கள். சில அன்பர்கள் ஒரு சமயம், "தாங்கள் நீண்ட காலம் உயிர் வாழ முடிந்த தெப்படி?" என்று கேட்டார்கள். அவர்கள் சிரித்துக் கொண்டே, தமக் குதவியா யிருந்த காய கல்பம் இன்னதென்று சொல்லி விட்டார்கள். "என் ஆயுள் முழுதும் தமிழ் என்ற ஒரே மருந்துதான் என் உயிர்ப்பும் உணர்வும் உயிருமா யிருந்துவந்தது. அதன் துணை கொண்டுதான் நான் இவ்வளவு காலம் வாழ்ந்தேன்" என்றுர்கள். ஆனல், இன்று எத்தனை பேர் இந்த மருந்தைக் கைக்கொள்ளத் தயாரா யிருக்கிறுர்கள்?

ஐயரவர்கள் எண்பத்தேழு ஆண்டுகள் உயிர் வாழ்ந்து, தமது எண்பத்தெட்டாம் ஆண்டில் (28-4-42-ல) திருக்கழுக்குன்றத்தில் காலஞ்சென்றுர்கள். அவர்கள் காலஞ்சென்று ஓராண்டு நிறைகிறது. இன்று தமிழ்நாட்டில் அவர்களால் பயன்பெருதோர் இலர் என்பது உண்மை. அன்பர்களும் மாணவர்களும், பொதுவாகத் தமிழர் அனைவரும், அவர்களுடைய தமிழ்ப் பணியால் பயன்பெற்றிருக்கிறுர்கள். இதுமட்டுமல்ல; அவர்களைக் குறை கூறுவோருடைய படிப்பையும் ஆராய்ச்சியையும் பார்த்தால், இவர்களும் ஐயரவர்களால் பெரும் பயன் பெற்றுர்கள் என்றே தெரியவரும்.

திருவிளையாடல் படிக்கும்படி ஐயரவர்கள் எனக்கு அறிவுறுத்தினர்கள். அப்போது எனக்குத் தமிழிலே உணர்ச்சி அதிகமிருந்த போதிலும், படிப்பு அதிகமில்லாத காலம். அவர்கள் சொல்லியபடியே திருவிளையாடலை ஒருபெரிய இலக்கியமாக எண்ணிப் படித்தேன். ஒரு முறை படித்தேன், இரண்டு முறை படித்தேன்; மொத்தம் ஐந்து முறை படித்தேன் என்று ஞாபகம். படித்ததனுலே எவ்வளவோ பயன்பெற்றேன். தமிழறிவையும் தமிழிலே பெரியதோர் ஊக்கத்தையும் எனக்கு அளித்தது அந்த நூலேயாகும். அந்த நூலும், அதைக் குறிப்பிட்டுச் சொன்ன ஐயரவர்கள் பழக்கமும், என்னுடைய வாழ்க்கையின் போக்கையே மாற்றிவிட்டன என்பது இன்று நான் உணர்கிற உண்மை. வாழ்க்கையிலே தமிழ் என்ற ஒரே குறிக்கோளைக் கொண்டு அதைச் சிறிதும் மறவாமலும் புறக்கணியாமலும் உழைத்து வந்த அவர்களுடைய உழைப்பு மற்றெருவருக்கு எளிதிலே கைவராது. ஆனல், அந்தக் குறிக்கோளைக் கொண்டு யாருமே ஒழுகலாம்.

தமிழ்த் தாத்தாவாகிய சாமிநாதையர் தோற்றுவித்த தமிழ் யுகம் வாழ்வதாக!

★

குடிகள் யார்?

வெ. சாமிநாத சர்மா

அரசுக்கு என்ன உரிமைகளும் கடமைகளும் உண்டோ அதே உரிமைகளும் கடமைகளும், குடிகளுக்கும் உண்டு. எங்கெந்த லட்சணங்கள் அரசுக்கு இன்றியமையாதவை என்று நாம் கருதுகிறோமோ அதே லட்சணங்கள் குடிகளுக்கும் இன்றியமையாதவை. அந்த லட்சணங்களையுடையவர்கள்தான் குடிகள். ஒரு நாட்டிலே வசிக்கிற எல்லா மனிதர்களும் குடிகளல்லர். சிங்காதனத்திலே வீற்றிருக்கிறவர்கள் எல்லோரும் எப்படி அரசர்களாக மாட்டார்களோ அப்படியே ஒரு நாட்டில் வசிக்கிற எல்லோரும் குடிகளாகமாட்டார்கள். சிலசில லட்சணங்களையுடையவர்களைத்தான் அரசர்களென்று சொல்கிறோம். அதைப்போல் குடிகளுக்கும் சில லட்சணங்கள் உண்டு. அரச சக்தி எவ்வளவு பலம் பொருந்தியதோ, புனிதமுடையதோ அவ்வளவு பலம் பொருந்தியது, புனிதமுடையது பிரஜா சக்தியும். ஏனென்றால், பின்னதிலிருந்தே முன்னது பிறக்கிறது. ஒன்றில்லாவிட்டால் மற்றொன்று இல்லை. வித்தியாசம் என்னவென்றால், அரச சக்தி இயங்குவது பகிரங்கமாகத் தெரிகிறது; பிரஜாசக்தியோ சூட்சுமமாக இருக்கிறது. ஒரு கட்டிடந்தான் மேல் பார்வைக்கு நன்றாகத் தெரிகிறது. ஆனால், அதற்கு ஆதாரமாயிருப்பது எது? அஸ்திவாரம். அஸ்திவாரமில்லாவிட்டால் கட்டிடம் இல்லை. எந்த மாதிரி திட்டம் போட்டுக்கொண்டு மேல் கட்டிடத்தை அமைக்கிறோமோ அதேமாதிரி திட்டத்தில்தான் அஸ்திவாரத்தையும் அமைக்கிறோம். அஸ்திவாரத்தைப் பார்த்த மாத்திரத்தில், மேல் கட்டிடம் எழும்பாவிட்டாலும் அதன் உருவம் இன்னபடிதான் இருக்கும் என்று ஒருவகையாக நம் அகக் கண் முன்னர் அமைத்துக் கொண்டுவிடுகிறோம். இந்த மாதிரியான பொருத்தங்களையே அரசுக்கும் குடிகளுக்கும் வைத்துப் பார்க்கவேண்டும்.

குடிகளைப் பார்த்து அரசை நிதானித்துவிடலாம். ஒரு நாட்டின் பூரணப் பிரஜா உரிமையையும் அநுபவித்துக் கொண்டிருக்கிற ஒருவனைக் கவனித்து நோக்கினால், அவனுடைய பேச்சுத் தோரணை, அவன் நடந்துகொள்கிறமாதிரி, பொது விவகாரங்களில் அவன் ஈடுபடுகிறவிதம் ஆகிய இவைகளைக் கொண்டு, அவன் எந்த நாட்டின் பிரஜையாயிருக்கிறானோ அந்த நாட்டின் அரசைப் பற்றி, நாம் ஒருவாறு அளவு போட்டுக் கொண்டு விடலாம். எனவே, அரசை இயக்குவிப்பது குடிகள்; குடிகளை வாழ்விப்பது அரசு. அரசுக்கும் குடிகளுக்குமுள்ள தொடர்பை, கிரேக்க

குடிகள் யார்? இந்தக் கேள்விக்குப் பற்பல கோணங்களிலிருந்து விடையளிக்கிறார் அன்பர் சர்மா. நிலத்தைப் பயிர் செய்யும் குடியானவன்தான் குடி என்பது அவருடைய முதல் கோட்பாடு. ஆனால், அந்தக் குடிக்கு, ஆட்சி உரிமையிலே பங்கு உண்டு. அந்தப் பங்கை அளிப்பதுவே ஜனநாயகம்.

அறிஞனாகிய அரிஸ்டாட்டல் வெகு அழகாக எடுத்துச்சொல்லுகிறான் : "ஒருவன் ஊது குழலைச் செய்து கொடுக்கிறான் ; இன்னொருவன் அதில் வாசிக்கிறான். இரண்டு பேருக்கும் ஊது குழலின் லட்சணங்கள் தெரிந்திருக்கின்றன. ஆனால், ஊதுகுழலில் வாசிக்கிறவனைத்தான் நாம் பார்க்கிறோம். செய்கிறவன் யாரென்பதைப் பற்றி நாம் விசாரிக்கிறோமா? இல்லை. என்றாலும், இனிய சங்கீதத்தை நாம் அநுபவிக்க வேண்டுமானால், இரண்டு பேருடைய ஒற்றுமையான முயற்சியும் நமக்குத் தேவையாயிருக்கிறது. அதுபோல் மனிதனுடைய நல் வாழ்வுக்கு அரச சக்தியும் பிரஜா சக்தியும் ஒன்றுபட்டிருப்பது அவசியமாகிறது. ஊது குழலைச் செய்துகொடுப்பது பிரஜா சக்தி ; அதில் வாசிப்பது அரச சக்தி. அதிலிருந்து பிறக்கிற இனிய நாதமே சமுதாயத்தின் நல் வாழ்வு."

விவசாயிகளைக் குடியானவர்கள் என்று சொல்கிறோம். ஒரு நாட்டின் பிரஜைகளையும் குடிகள் என்று அழைக்கிறோம். அப்படியானால், இரண்டுக்கும் ஏதோ ஒரு விதத் தொடர்பு இருக்கிறதென்று தெரிகிற தல்லவா? இதனைச் சற்று விவரிப்போம்.

நிலத்திலே ஒருவன் உழைக்கிறான் ; அதிலிருந்து பலனையும் அநுபவிக்கிறான். உழைக்கிற கடமையை அவன் செய்தால் பலனை அநுபவிக்கிற உரிமை அவனுக்கு ஏற்படுகிறது. இந்தக் கடமையைச் செய்து உரிமையைச் சம்பாதிக்கிறவன் எவனோ அவன்தான் குடியானவன் ; விவசாயி ; உழவோன். உழைப்பிலிருந்து பிறந்ததுதான் உழவு. இப்படியே, தனது நாட்டிலே, தனது நாட்டிற்காக உழைக்கிறவன் எவனோ, அப்படி உழைப்பதன் மூலம் அந்த நாட்டின் பாதுகாப்பை, நல்வாழ்வு நடத்துவதற்குரிய வசதிகளைப் பெறுகிறவன் எவனோ அவன் ஒரு குடி ; பிரஜை. நிலத்தின் விவசாயி, நாட்டின் பிரஜை. இரண்டு பேரையும் குடியென்ற ஒரு பெயராலேயே அழைக்கிறோம். இதனால் இந்த இரண்டு பேருடைய லட்சணங்களும்—அதாவது கடமைகளும் உரிமைகளும்—ஒன்றேயென்பது சித்தமாகிறது! சொந்த நிலத்திலே உழைத்துப் பிழைக்கிறவன் தான் நாட்டின் நல்ல பிரஜையாக இருக்கமுடியும் என்பதே முன்னோர்களின் கொள்கை. உழவுக்கு முக்கியத்துவம் கொடுத் திருப்பதெல்லாம் இந்த நோக்கத்துடனேயே. உலகத்திற்கு அச்சாணி போன்றவர்கள் உழவோர்கள் என்று திருக்குறள் ஆசிரியர் கூறியிருக்கிறா ரென்றால், அவர்களை நாட்டின் நல்ல பிரஜைகள் என்ற திருஷ்டியிலேதான் பார்க்கிறார். நல்ல பிரஜைகளில்லாவிட்டால் நல்ல ராஜ்யம் ஏது? அச்சாணி இல்லாவிட்டால் ரதம் ஓடுமா?

நற்குடியினர் அல்லது நற்குடிப் பிறந்தார் என்று சொன்னால் என்ன அர்த்தம்? பரம்பரைச் செல்வ முடையவர்கள் என்றோ அல்லது உயர்ந்த ஜாதியினரென்றோ இதற்கு அர்த்தமில்லை. பரம்பரை, ஜாதி, மதம் முதலிய பாகுபாடுகள் இந்தச் சொல்லில் பிரவேசிக்க வில்லை. யாரொருவர் விவசாயத்தை முக்கிய ஜீவனோபாயமாகக் கொண்டு, பரிபூரண சுதந்திரத்துடன் வாழ்கிறாரோ, தாம் எந்த நாட்டின் பிரஜையா யிருக்கிறாரோ அந்த ராஜ்யத்தின் நற்பெயருக்கும் பாதுகாப்புக்கும் பங்கம் ஏற்படாமல் தமது அன்றாட வாழ்க்கையை

நடத்திக் கொண்டு வருகிருரோ, அவர்தான் நற்குடியினர். அப்படிப்பட்டவர்களுக்குத் தான், ஒரு ராஜ்யத்தினின்று சகல நன்மைகளையும் எதிர்பார்க்க உரிமை யுண்டு.

நல்ல குடும்பத்தைச் சேர்ந்தவர், நல்ல விவசாயி, நல்ல பிரஜை ஆகிய மூன்று பேரும் ஒரு சொல்லிலேயே அடங்குகின்றனர். அந்த ஒரு சொல்தான் குடியென்பது. அதாவது, மேற்சொன்ன மூன்று பேருடைய பண்புகளும் எந்த ஒருவனிடத்தில் தங்கி யிருக்கின்றனவோ அவன்தான் உண்மையான குடி. இந்த மூன்று பண்புகளும் சேர்ந்ததுதான் குடிமை. குடிமை என்ற வார்த்தைக்கு நற்குடியிலே பிறந்தவர்கள் என்று சுருங்கிய ஒரு பொருளைக் கொண்டால் மட்டும் போதாது. குடிமை என்ற அதிகாரத்தில் ஆசிரியர் திருவள்ளுவர் "ஒழுக்கமும், வாய்மையும், நாணும் இம் மூன்றும் இழுக்கார் குடிப் பிறந்தார்" என்று கூறுகிருர். அதாவது உயர்ந்த குடியில் பிறந்தோர்கள் ஒழுக்கம், மெய்ம்மை, மானம் ஆகிய இவற்றில் தமது நிலை தவற மாட்டார்கள் என்பது இதற்கு அர்த்தம். சரி; இந்த மூன்று தன்மைகளும் யாரிடத்தில் இருக்கும்? அடிமைகளிடத்திலே இருக்குமா? இராது. எப்பொழுது ஒருவன் மற்ருருவனுக்கு அடிமையாகி விட்டானே அப்பொழுதே அவன் ஒழுக்க ஹீனனுகவும், பொய்யனுகவும், மானமில்லாதவனுகவும் ஆகிவிட்டான். சுயநிலையி லிருந்து இறங்கினவன்தான் அடிமை. சுய நிலை யாவது என்ன? சுதந்திர நிலை. சுதந்திர நிலைதான் இயற்கை நிலை. அதாவது சுதந்திரமா யிருப்பது தான் இயற்கை; அடிமையாயிருப்பது, அதாவது மற்றவர்களுக்குப் பராதீனப் பட்டுக் கிடப்பது செயற்கை. செயற்கை வாழ்வு என்று சொன்னுல் போலி வாழ்வுதானே? பொய்யான வாழ்வுதானே? பொய்யான வாழ்வில் ஒழுக்கத்தை எப்படிக் காண முடியும்? அதனை மானமுள்ள வாழ்வு என்று எப்படிச் சொல்ல முடியும்?

இயற்கையான வாழ்வு அல்லது சுதந்திர வாழ்வு நடத்துகிறவன் யார்? விவசாயி. மண்ணேடு உறவாடுகிற அவன் உழைத்துப் பயனை நுகர்கிருன். அதாவது அவனுடைய பிழைப்பு அவனுடைய உழைப்பினுல் நடைபெறுகிறது. அதனுல் யாருடைய சலுகையையோ தயவையோ அவன் எதிர்பார்க்கவில்லை. அதனுல் அவன் சுதந்திர புருஷனுயிருக்கிருன். அவனுடைய வாழ்வுதான் உண்மையான வாழ்வு. "உழுதுண்டு வாழ்வாரே வாழ்வார்" என்ற குறளின் ஓரடியை நாம் நுணுகி ஆராய்ச்சி செய்து பார்த்தோமானுல், சுதந்திர வாழ்க்கைக்கும் உழவுக்கும் எவ்வளவு நெருங்கிய தொடர்பு இருக்கிறதென்பது நன்கு தெரியும்.

சுதந்திரமுள்ள இடத்தில்தான் ஒழுக்கம் பிறக்கிறது. ஒழுக்கம் என்பது என்ன? "தத்தம் கடமையைச் செய்து உலக வாழ்க்கை நடத்துதல்" என்ருர் ஓர் அறிஞர். தனக்கும், தான் பிறந்த நாட்டிற்குமான கடமைகளைச் செய்து கொண்டு போகிறவன் எவனே அவன்தான் ஒழுக்கமுடையவன்; அவனுக்கு உயிர் பெரிதல்ல; தன் நிலையினின்று தாழாதிருத்தலே பெரிது. அதாவது மானத்தோடு வாழ்தலைத் தான் அவன் பிரதானமாகக்

கொள்கிறான். மானத்தோடு வாழ்தலே சுதந்திரத்தோடு வாழ்தல்.

எனவே, விவசாயத்தை முக்கிய ஜீவனோபாயமாகக்கொண் டிருக்கிறவன் எவனோ அவன்தான் உண்மையான சுதந்திர புருஷன்; அவனிடத்திலேதான் கடமையைச் செய்துகொண்டு போகிற பண்பு இயற்கையாக அமைந்திருக்கிறது. கடமை உரிமையை நல்குகிறது. கடமையைச் செய்து உரிமையை அநுபவிக்கிறவர்கள் தான் உண்மையான பிரஜைகள்; உயர்ந்த குடிகள்.

மேனாட்டு அரசியல் பண்டிதர்கள், குடிகளுக்குச் சில லட்சணங்களைக் கூறியிருக்கிறார்கள். அவை என்ன என்பதைச் சிறிது கவனிப்போம்.

"ராஜ்ய நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்ளும் உரிமை யாருக்கு உண்டோ அவன்தான் பிரஜை" என்பது அரிஸ்டாட்டலின் கருத்து. ராஜ்ய நிருவாகத்தில் பங்கெடுத்துக்கொள்வதென்றால், எல்லாரும் அரசாங்க உத்தியோகஸ்தர்களாயிருக்கவேண்டுமென்பதில்லை. அரசாங்கத்தின் நீதி செலுத்தும் முறையும், நிருவாகம் செய்யும் முறையும் இன்ன இன்னபடிதான் இருக்க வேண்டுமென்று நேர்முகமாகவோ மறைமுகமாகவோ சொல்ல யாராருக்கு உரிமை யுண்டோ அவர்களெல்லோரும் ராஜ்ய நிருவாகத்தில் பங்கெடுத்துக் கொள்கிறவர்கள் தான். ஏனென்றால், இவர்களுடைய விருப்பப் படிதானே அரசாங்கம் நடைபெறுகிறது? ஜனநாயகப் பேச்சிலே அழுந்திக் கிடக்கும் இப்பொழுதுள்ள நமக்கு அந்த ஜனநாயக பாஷையிலேயே சொன்னால்தான் சுலபமாக விளங்கும். எப்படியென்றால், ஓட்டுரிமை யாராருக்கு உண்டோ அவர்கள் எல்லாம் தான் உண்மையான பிரஜைகள் என்று நாம் கொள்ள வேண்டும்.

ராஜ்ய நிருவாகத்தில் பங்கெடுத்துக்கொள்கிற உரிமை மட்டும் இருந்தால் போதுமா? அந்த ராஜ்ய நிருவாகத்தினால் உண்டாகிற அனுகூலங்களை அடைகிற உரிமையும் இருக்க வேண்டும். கிரேக்க ஆசிரியன் ஒருவன் கூறுகிற மாதிரி "ராஜ்யத்தினுடைய கௌரவங்களில் பங்கு பெறுகிற உரிமை ஒவ்வொரு பிரஜைக்கும் உண்டு." பிரஜையாயிருப்பது ஓர் உரிமை மட்டுமல்ல. அது ஒரு பெருமை; பதவி; அந்தஸ்து. "நான் இன்ன நாட்டின் பிரஜை" என்று ஒருவன் சொல்லிக் கொண்டால், அவன், தனது அரசியல் அந்தஸ்தை வெளிப்படுத்துகிறான் என்பதுதான் அர்த்தம். அரசன் என்பது எப்படி ஒரு பதவியோ அப்படியே குடியென்பதும் ஒரு பதவி. இரண்டுக்கும் பொறுப்புண்டு; சக்தியுண்டு. இந்த இரண்டு சக்திகளையும் மோத விடாமல் பார்த்துக்கொள்வது தான் அரசாங்கம்.

குடிகள் யார் என்பதற்கு ஓர் ஆங்கில அறிஞன் பின்வருமாறு லட்சணங் கூறுகிறான்:—"ஒரு ஜன சமுதாயத்தின் அங்கத்தினர்களே குடிகள். அந்தச் சமுதாயத்திற்குச் சில கடமைகளைச் செய்ய இவர்கள் கட்டுப்பட்டிருக்கிறார்கள்; அந்தச் சமுதாயத்தின் ஆதிக்கத்துக்கும் கட்டுப்பட்டிருக்கிறார்கள்; அந்தச் சமுதாயத்தினால் உண்டாகிற சாதகங்களில் சம பங்கு பெறும் சம உரிமையும் உடையவர்களாயிருக்கிறார்கள்." "ஒரு சமுதாயத்தின் அங்கத்தினனாயிருந்துகொண்டு, எவனொருவன், தன்னுடைய

மனிதத் தன்மையில் பூரண வளர்ச்சியடைகிருனே, அப்படி வளர்ச்சியடைகிற அதே தருணத்தில், சமுதாயத்தின் உயர்வை நாடுகிருனே அவன்தான் உண்மையான பிரஜை" என்பது வேருெரு பண்டிதனது கருத்து. ஒரு நாட்டில் வசிக்கிற பிரதியொரு பிரஜையும் இரண்டுபட்ட தன்மைகளை யுடையவனுயிருக்கிருன். ஒன்று தனி மனிதன்; மற்ருென்று சமுதாயத்தின் அங்கத்தினன். தனிப்பட்ட மனிதர்கள் பலர் சேர்ந்ததுதான் ஒரு சமுதாயம்; சமுதாயம் என்ற தொகுப்பில் ஒரு சிறிய அமிசம் தனிமனிதன். தனிமனிதன் செய்கிற ஒவ்வொரு காரியமும் சமுதாயத்தில் அதிர்ச்சியை உண்டாக்குகிறது. அதுபோல் சமுதாயத்தில் நிகழ்கிற ஒவ்வொரு சம்பவமும் தனிமனிதனைப் பாதிக்கிறது. எனவே, இந்த இரண்டுபட்ட தன்மைகளையும் எவனுெருவன் ஒன்று படுத்திக்கொண்டு செல்கிருனே, அவன்தான் உண்மையான பிரஜை. அதாவது தனி மனிதனுடைய உரிமைகளுக்குப் பங்கம் வராமல் சமுதாயத்தின் அங்கத்தினனுடைய உரிமைகளை எவன் பாதுகாத்து வருகிருனே, தனி மனிதனுடைய கடமைகளைச் செய்துகொண்டே சமுதாய அங்கத்தினனுடைய கடமைகளையும் எவன் நிறைவேற்றிக்கொண்டு வருகிருனே அவன்தான் உண்மையான பிரஜை.

தனி மனிதனுடைய சர்வாதிகார ஆட்சி முறையை ஆதரிக்கிற சிலர், பிரஜைக்கு ஒரே ஒரு லட்சணம் தான் இருக்க வேண்டுமென்று கூறுகிருர்கள். அதுதான் ராஜ்யத்தின் க்ஷேமத்தை நாடுதல். இதை இன்னும் சிறிது பச்சையாக இவர்கள் சொல்கிறபோது, ராஜ்யத்தினுடைய க்ஷேமத்திற்காகத் தனி மனிதனுடைய க்ஷேமத்தைப் பலிகொடுத்துவிட வேண்டுமென்று சொல்கிருர்கள். இதற்குப் பூர்வீககிரேக்க அறிஞர்களைச் சாட்சிகளாகக் கொண்டு வந்து நிறுத்திவிடுகிருர்கள். உதாரணமாக, அரிஸ்டாட்டல் என்பவன், ராஜ்யத்தை ஒரு கப்பலுக்கு ஒப்பிட்டுப் பேசுகிறபோது, கப்பலிலே வேலை செய்கிற சிப்பந்திகளில் ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான வேலையைச் செய்து கொண் டிருந்தபோதிலும் எல்லோருக்கும் கப்பல் ஒழுங்காகச் செல்லவேண்டு மென்பதிலே எப்படி ஒரே நோக்கம் இருக்கிறதோ அப்படியே, ஒரு ராஜ்யத்தினுடைய பிரஜைகள் எத்தரத்தினரா யிருந்தபோதிலும், எவ்வேலையைச் செய்துகொண்டிருக்கிறவரா யிருந்தபோதிலும் ராஜ்யத்தின் க்ஷேமத்தையே நாடவேண்டுமென்று சொல்லி, தனி மனிதனுடைய உரிமையைச் சீர்குலைத்து, ஒரு தனி மனிதனுடைய சர்வாதிகாரத்தை ஊர்ஜிதம் செய்யப் பார்க்கிருர்கள். இங்ஙனம் தனி மனிதர்கள், தங்கள் சுய உரிமையைப் பறிகொடுத்துவிட்டு, அரசாங்கத்தினுல் ஆட்டி வைக்கப்படுகிற பொம்மைகள் மாதிரி இருப்பார்களானுல் அவர்களை, உரிமையுள்ள பிரஜைகள் என்று எப்படிச் சொல்வது? ராஜ்யத்தின் க்ஷேமத்தை நாடுவ தென்பது பிரதியொரு பிரஜையினுடையதும் கடமை யென்பதை யாரும் மறுக்கமுடியாது. ஆனுல், அதே சமயத்தில் பிரதியொரு பிரஜையினுடைய உரிமையையும் அங்கீகரித்து அதனைப் பாதுகாத்து வருவது அரசின் கடமை யென்பதையும் ஒப்புக் கொள்ளவேண்டு மல்லவா? அப்பொழுதுதான் அரசுக்கும் குடிகளுக்கும் உள்ள

தொடர்பில் ஒரு சமத்துவம் நிலவும்.

குடி அல்லது பிரஜை என்று சொன்னாலே உரிமையுள்ள ஒரு நபரைத்தான் குறிக்கிறது. ஆங்கிலத்தில் "சிடிஸன்" (Citizen) என்றும் "ஸப்ஜெக்ட்" என்றும் இரண்டு வார்த்தைகள் உண்டு. இந்த இரண்டு வார்த்தைகளுக்கும் பொதுவாக, குடியென்றும் பிரஜை யென்றும் சொல்கிறோம். ஆனால், "சிடிஸனு"க்கும் "ஸப்ஜெக்ட்"டுக்கும் வெவ்வேறு அர்த்தங்கள் உண்டு. ராஜ்யத்தின் நிருவாக விஷயத்தில், அந்த நிருவாகம் ஒழுங்காக நடைபெறுவதற்குத் துணையாகச் சட்டங்களை நிர்மாணிக்கிற விஷயத்தில் எவனொருவனுக்கு உரிமையுண்டோ அவன் "சிடிஸன்"; அந்த உரிமையில்லாதவன், சட்டதிட்டங்களுக்குக் கீழ்ப்படிந்து நடக்கிறவன் "ஸப்ஜெக்ட்". நவீன அரசியல் பரிபாஷையில் சொல்வோமானால், ஓட்டுரிமையுடையவன் "சிடிஸன்"; ஓட்டுரிமையில்லாதவன் "ஸப்ஜெக்ட்". கடமையைச் செய்து உரிமையை எதிர் பார்க்கிறவன் "சிடிஸன்"; கடமையை மட்டும் செய்துகொண்டுபோகவேண்டுமென்று எதிர்பார்க்கப்படுகிறவன் "ஸப்ஜெக்ட்". இந்தப் பிந்தியவன், அரசாங்கத்தினிடமிருந்து ஏதேனும் சௌகரியங்களைப் பெறுவானாயின், அது அந்த அரசாங்கத்தின் தயவைப் பொறுத்த விஷயமே தவிர, அவன் நியாயமாக எதிர்பார்க்க வேண்டிய உரிமையல்ல. "ராஜ்யாதிகாரத்தில் பங்குடையவர்கள் 'சிடிஸன்'கள்; ராஜ்யத்தின் சட்டங்களுக்கு அடங்கினவர்கள் 'ஸப்ஜெக்ட்'டுகள்" என்பது, பிரெஞ்சு அறிஞராகிய ரூஸ்ஸோவின் வியாக்யானம்.

★

தன்னையே மறந்தான்

சென்ற நூற்றாண்டில், வங்காளத்தில் பல கொள்ளைக்காரர்களை, ஐம்பது அல்லது அறுபது பேர்களாகப் பிடித்து, தீபாந்தர சிட்சை விதித்து அந்தமானுக்கு அனுப்பி வந்தார்கள்.

மகா கொடியவனென்று பேர்பெற்ற ஒரு கொள்ளைக்காரனை ஜட்ஜி பார்த்த போது, அவன் நோஞ்சலாய், பலவீனனாய் இருக்கக் கண்டார். "இவனைக் கொண்டு வந்தீர்களே? இவனால் என்னையா செய்ய முடியும்?" என்று கூறிய ஜட்ஜி, அவனை விடுதலை செய்ய உத்திரவிட்டார்.

உடனே அந்தக் கொள்ளைக்காரனுக்குப் பரவச முண்டாகிவிட்டது. தன்னையே மறந்தான். கைதிக் கூண்டிலிருந்து, முதுகுப் பக்கமாய் ஓர் அந்தரடித்து, கூண்டுக்கு வெளியே வந்து குதித்து, 'ஜம்' மென்று நின்றான். ஜட்ஜி பிரமித்துப் போய் மீண்டும் அவனைக் கூண்டிலேற்றி, அந்தமான் வாசமும் அளித்தார்.

ஏன் யுத்தம்?

ஓர் அமெரிக்கரிடம் கொஞ்ச காலத்துக்கு முன் ஓர் எஸ்கிமோ, இவ்வாறு கூறினானாம்: "உங்கள் உலகத்தில் ஜனங்கள் ஒருவரை ஒருவர் ஏன் சுட்டுக் கொல்லுகிறார்களென்று எனக்குப் புரியவே யில்லை. அவர்களிடம் அளவுக்கு மேல் உணவு இருக்கிறது. அப்படி யிருந்தும் அவர்கள் சண்டை யிடுகிறார்கள். எங்கள் கிரீன்லாந்தில் எங்களுக்குப் போதிய உணவு இருக்குமானால், நாங்கள் சண்டை போட மாட்டோம். எல்லாரும் உட்கார்ந்து விருந்துண்டுதான் களிப்போம்."

பவுனை யார் திருடினார்கள்? எல்லாரும் சோதனைக்கு இசைகையில், அவன் மாத்திரம் ஏன் இசையவில்லை?

மறைந்த பவுன்

ஸி. பொல்லாக்

முதல் உலக யுத்தம் நடந்தபின்பு, ராணுவ உத்தியோகஸ்தர்கள் சிலர், பிரான்ஸில் தங்கள் கிராமத்துக்குத் திரும்பிச் சென்றார்கள். அவர்களில் பெரும்பாலானவரும், ஏதோ கொஞ்சம் கொஞ்சம் பணம் சேர்த்துவிட்டார்கள். ஆனால், பிராங்காய் லெபா என்ற ஒருவன் மாத்திரம் யுத்தத்திலே விஷவாயுப் புகையால் தாக்கப்பட்டு, இழந்த பலம் திரும்பாமலே அவதிப்பட்டதால், தரித்திர மாகிவிட்டான். என்றாலும், கௌரவத்தை விடாதவன். ஆகையால், தன் சகோதர கிராமவாசிகளிடமிருந்து தர்மம் வாங்கிக் கொள்ள, அவன் மறுத்து விட்டான்.

இந்த ராணுவ உத்தியோகஸ்தர்கள், யுத்தத்தில் தப்பித் தாங்கள் திரும்பி ஒன்று சேர்ந்த சந்தோஷத்தை கொண்டாடுவதற்காக, வருஷம்தோறும் ஒரு நாள் ஒரு விருந்து நடத்தினார்கள். இப்படிப்பட்ட ஒரு விருந்தின்போது, ஜூலிஸ் கிராண்டின் என்பவனின் வீட்டில் அவர்கள் கூடினார்கள். ஜூலிஸ் கிராண்டின், பணத்திலே கொழுத்து மிக்க ஆடம்பரமாய் வாழ்ந்தவன். அவன் ஓர் அபூர்வ வஸ்துவைத் தன் நண்பர்களுக்குக் காட்ட விரும்பினான். அது வேறொன்று மல்ல; ஒரு பெரிய பவுன் காசுதான். அது நிரம்பப் பழமையான தென்றும், அகப்படவே அகப்படா தென்றும், மதிப்பரியதென்றும், நண்பர்களிடம் கிராண்டின் வெகுவாக அளந்தான்.

அந்தக் காசை மேஜையைச் சுற்றிலும் ஒவ்வொருவராக வியப்போடு வாங்கிப் பார்த்தார்கள். எல்லாரும் தாராளமாய்ச் சாராயத்தைக் குடித்து விட்டு இரைச்சல் போட்டுப் பேசத் தொடங்கியதால், இந்த ஆரவாரத்தில், வெகு சீக்கிரம் அந்தக் காசை மறந்து விட்டார்கள். பின்னல், கிராண்டினுக்கு அந்தக் காசு ஞாபகம் வந்ததும், அது எங்கே என்று கேட்டான். காசு காணாமல் போய்விட்டது!

உடனே, 'நீ தானே பார்த்தாய்', 'நானில்லையே' என்ற கேள்விகளும் மறுப்புக்களுமாய் ஒரே கலவரமாயிற்று. கடைசியில், கிராமத்து வக்கீல் ஒரு யோசனை சொன்னார்; ஒவ்வொருவரையும் சோதித்துப் பார்த்து விட வேண்டும் என்றார். தட்சணமே அதற்கு எல்லாரும் இசைந்தார்கள்; ஆனால், லெபா மாத்திரம், அதற்குச் சம்மதிக்கவில்லை. அவனுடைய தோழர்கள், அவனை ஆச்சர்யத்துடன் பார்த்தார்கள்.

"அப்படியானால், உன்னைச் சோதிக்கக் கூடாதென்று ஆட்சேபிக்கிறாயா?" என்று, தன்னையே நம்ப முடியாமல், கேட்டான் கிராண்டின்.

லெபாவின் முகம் சிவந்தது. "ஆமாம்; அதற்கு நான் சம்மதிக்க முடியாது" என்றான்.

"உன் ஆட்சேபனைக்கு அர்த்தம் என்ன, தெரியுமா?" என்று, பவுன் காசின் சொந்தக்காரன் கேட்டான்.

"நான் அந்தக் காசைத் திருடவில்லை. என்னைச் சோதனைபோட, நான் உட்பட மாட்டேன்" என்று லெபா பதிலளித்தான்.

மற்ற அனைவரும் ஒவ்வொருவராகத் தங்கள் சட்டை ஜேபிகளைத் திருப்பிக் காட்டினார்கள். காசு எவர் ஜேபியிலும் இல்லை. மீண்டும், எல்லார் கவனமும் லெபா மீது சென்றது.

"உன்னைச் சோதிக்கக் கூடாதென்று இன்னுமா பிடிவாதம் செய்கிறாய்?" என்று கேட்டார் வக்கீல். லெபா பதிலே சொல்லவில்லை. கிராண்டின் ஆத்திரத்தோடு அறையைவிட்டு வெளியே சென்றான். எவரும் அதற்குமேல் லெபாவிடம் ஒரு வார்த்தையும் பேசவில்லை. நண்பர்களெல்லாம் பரிதாபத்தோடு தன்னை விழித்துப் பார்க்க, தண்டனை யடைந்த கொடுங் குற்றவாளி போல, தலை குனிந்த வண்ணம், தன் வீட்டுக்குத் திரும்பினான் லெபா.

அன்று முதல், லெபாவை ஊராரெல்லாம் கேவலமாய் மதித்தார்கள். அவனைக் கண்டால், தோழரெல்லாம் தங்கள் கண்களை மறுபுறம் திருப்பிக் கொள்வார்கள். லெபா பின்னும் ஏழையானான். சிறிது காலத்தில் அவனுடைய மனைவியும் மாண்டாள். இது வறுமையாலா, அவமானம் தாங்காமலா என்று யாரும் அறியக் கவலை கொள்ளவு மில்லை.

சில வருஷங்கள் கழிந்தன. அந்தத் தங்கக் காசு மறைந்த சம்பவம் ஏதோ பழங்கதையாய் மறந்துபோன காலம். அப்போது, கிராண்டின், தன் வீட்டிலே சில பகுதிகளை இடித்துக் கட்டலானான். அச் சமயம், அந்த விருந்து அறையின் தரையிலே மண்ணோடு மண்ணாய் ஒரு பவுன் காசு பதிந்து கிடந்ததை, ஒரு வேலையாள் கண்டான்.

கிராண்டின், ஆடம்பரமும் கர்வமும் நிறைந்தவனே யென்றாலும், நியாயத்துக்குக் கட்டுப்பட்டவன்.

லெபாவின் ஏழைக்குடிசைக்கு ஓட்டமாய் ஓடினான். பவுன் காசு ஆச்சரியமாய் அகப்பட்ட விதத்தைத் தெரிவித்தான். மனம் வருந்தி மன்னிப்புக் கேட்டுக் கொண்டான்.

கடைசியிலே கிராண்டின், "அதிருக்கட்டும், லெபா! பவுன் காசு உன் பையில் இல்லை என்று உனக்கோ நன்றாய்த் தெரியும். அப்படி யிருந்தும் உன்னை ஏன் சோதிக்கக் கூடா தென்றாய்?" என்று கேட்டான்.

கரடிபோல் மயிர் வளர்ந்து, நோஞ்சலாகி, பிஞ்சிலே பழுத்த கிழவனை லெபா, தன் ஒளியற்ற கண்களால் கிராண்டினைக்கூர்ந்து பார்த்தான். பின்பு, நாக்குழறலுடன், "ஏனென்றால், நான் அப்போது ஒரு திருடனா யிருந்தேன். என் குடும்பமும் நானும் பல வாரங்களாய் உண்ண உணவற்று வாடியிருந்ததால், என் சட்டை ஜேபி நிறைய, ரொட்டி முதலிய உணவுப் பண்டங்கள் நிரம்பியிருந்தன—என் மனைவிக்கும் பசியால் அலறிய குழந்தைகளுக்கும் கொண்டுபோய்க் கொடுப்பதற்காக, உன் வீட்டு விருந்து மேஜையிலிருந்து திருடிய உணவுப் பண்டங்கள்" என்றான்!

★

இந்தியத் தேயிலையில் மிகச்சிறந்தது

லிப்டன்ஸ்

ஜாகூஜா, வெள்ளை லேபில், தேயிலைப்பெண் தரங்கள்

LTK-52

லிப்டன் தேனீர் அருந்துகையில்
ஜாக்கிரதைக் குறைவாய்ப் பேசாதீர்கள்.

விரைவில் வருகிறது!

ஹரிச்சந்திரா

(கன்னடம்)

சுப்பய்ய நாயுடு. B.S.ராஜா அய்யங்கார். STUDIO: PRAGATI
நாகேந்திர ராவ். கிருஷ்ணமூர்த்தி ராவ்.... & FAMOUS TALKIE
லக்ஷ்மி பாய்.... M.G.மரிராவ்........ RELEASE

மதராஸ் டி. சி. என். கோல்டன் மெடல் ஜ்வல்லரி மார்ட்

பலவித அழகிய

வளையல்கள்

அசல் தங்க வளையல்களைவிடப் பிரகாசத்திலும் நிறத்திலும் குறைந்தனவல்ல.

கறுக்காது. 2-வருஷம் உத்திரவாதம். மிகவும் அழகாக இருக்கும்.

பெரிய சைஸ் 2" அகலமும், அதற்கு மேற்பட்டதும் ஜதை	3	12	0
மத்திய சைஸ் 1¾" முதல் 2"-க்குள் ஜதை	3	2	0
குழந்தை சைஸ் 1¾"-க்கு உட்பட்டது ஜதை.	2	8	0

வி. பி. செலவு 1 ஜதை முதல் 6 ஜதை வரை அணா 8

எமது கேட்லாக் இனும்

டி. சி. நாகலிங்கப்பா & கோ.

280, வால்டாக்ஸ் ரோட், பார்க் டவுன், மதராஸ்

'சக்தி' சந்தா விவரம்

வருடச் சந்தா	...	ரூ. 6
தனிப் பிரதி (தபால் மூலம்)...		அணா 8

ஆங்கில மாதம் முதல் தேதி தோறும் வெளிவரும்

மானேஜர்,

சக்தி காரியாலயம்,

31, பவழக்காரத் தெரு, சென்னை.

டெலிபோன் நெ. 4536.

நமது தமிழ் நாடு

வ. ரா.

ஒரு புஸ்தகத்தை இளவயதில் படிக்கலாம்; நடுவயதில் படிக்கலாம்; கிழவயதில் படிக்கலாம். சந்தோஷ நிலைமையில் படிக்கலாம்; துக்க சமயத்தில் படிக்கலாம். ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும், அந்த நூல், ஒவ்வொருவகையில், படிப்பவர்களுடைய உள்ளத்தில் பதியும். இதைப் போலவே, ஒவ்வொருவரும், தமிழ்நாட்டை கண்டிருப்பார்கள்.

தமிழ்நாட்டை, முதன் முதலாக, நான் கண்டதாக, மெய்யாகச் சொல்லக்கூடியது எனது மூன்ருவது வயதில். அதற்குமுன், கண் இருந்தும் பார்வையில்லாததைப் போலத்தான், ஒவ்வொரு குழந்தையும் இருக்கும். வினைத் தெரிகிறது என்கிருர்களே, அந்த வயது, எல்லோருக்கும் ஒரே வயதாயிருப்பதில்லை. சிலருக்கு, பத்து வயதில்கூட, 'வினைத்தெரிவதில்லை'. சில குழந்தைகள், மூன்று வயதிலேயே, பெற்ருேர்களை, மூச்சுவிடாமல் கேள்வி கேட்டு, சல்லடைக் கண்களாக, துளைத்து விடுகின்றன.

என் சம்பந்தப்பட்டவரையில், நான் மூச்சு விட்டுக்கொண்டு தான் கேள்விகளைக் கேட்டேன். என் பெற்ருேர்களுக்கு, அந்தத் தொந்திரவை நான் கொடுத்ததில்லை. எனது 'ப்ளிட்ஸ்க்ரிக்' தாக்குதல் எல்லாம், என் தாத்தாவின் பேரிலேதான். ஆஜானுபாகுவான அவருடைய தேகம், என் 'மின்னல்' தாக்குதல்களையெல்லாம் தாங்கக்கூடிய சக்தி படைத்ததாகும்.

மூன்று வயதில் நேர்ந்த பல சம்பவங்கள் எனக்கு நினைவு இருக்கிறபடியால், தமிழ் நாட்டை, முதன் முதலாக நான் கண்டது அந்த வயதிலேதான் என்று தர்க்க முறைப்படி சொல்லத் துணிந்தேன்.

வடவேங்கட முதல் குமரி முனை வரையிலும் பரந்து கிடக்கும் தமிழ்நாடு என்று தமிழ்ப் புலவர்கள் வர்ணித்திருக்கிருர்கள். "வட வேங்கடம் (திருப்பதி) தமிழ் நாடாவது? சென்னையில் சென்ட்ரல் ஸ்டேஷனுக்குத் தெற்கேயிருந்துதான், தமிழ்நாடு புறப்படுகிறது" என்று ஆந்திர நண்பர்கள் அறைகூவி வாதுக்கு அழைக்கிருர்கள்.

இப்பொழுதும், எது சரியான கக்ஷி என்று எனக்குத் தெரியவில்லை. கலிங்கம் (ஒரிஸா) வரையிலும் என் தமிழ்நாடு நீண்டு இருக்கக் கூடாது? மகேஞ்சதாரோ என்ற வடமேற்கு இந்தியாவில் கிடைத்திருக்கும் பாழ் நகரத்திலிருந்து, தமிழர்கள் வெகு காலத்துக்கு முன்னர், அந்தப் பிராந்தியங்களில், சிறந்த நாகரி

நமது தமிழ் நாட்டை, தாம் கண்ட தோரணையில் சித்தரிக்கிருர் தலை சிறந்த எழுத்தாளர் வ. ரா. சமூகவாழ்விலும் அரசியலிலும் எழுத்துலகிலும் அபூர்வ அனுபவங்கள் உடைய அவர், தம் பழைய நினைவுகளை, பல கட்டுரைகளில், 'சக்தி'யில் எழுதிவர இசைந்திருக்கிருர். இந்தச் செய்தி, வாசகர்களுக்கு மகிழ்ச்சி யளிப்பது நிச்சயம்.

கப் பண்புடன் வாழ்ந்தார்கள் என்று தெரிகிறது.

சரித்திர சம்பந்தமான ஆராய்ச்சிகளும் புலவர்களின் வம்பு வாதங்களும் இன்றைக்குக் கூட எனக்கு அர்த்தமாவதில்லை. ஆரியர், திராவிடர் என்று பிரிக்கும்போது, எனக்குச் சிரிப்பு உண்டாகிறது. ஏன் என்கிறீர்களோ? வங்காளத்தில் இருப்பவர்களும் பீகாரில் இருப்பவர்களும் ஆரியர்கள் என்று தமிழர்களில் சிலர் சொல்லுகிறார்கள். ஆனால், அவ்விரு மாகாணத்தாருக்குள்ளும் இருக்கும் வேற்றுமைகளைப் பார்த்தால், 'ஆரியர் திராவிடர்' என்ற வகுப்பார்களுக்குள் இருக்கும் வித்தியாசங்களைக்காட்டிலும் அதிகமா யிருக்கின்றன.

ஒவ்வொரு பிராந்தியத்திலும் படை எடுப்பும் போர்களும் மலிந்துகிடந்த இந்த நாட்டில், ஜனங்கள் கலந்து ஒன்ருகவில்லை என்று சொல்லும் கக்ஷி அபத்தமான கக்ஷியாகும். ஆனல், இந்த விவகாரங்கள் எல்லாம் என் மூன்ருவது வயதில் தெரியவே தெரியாது. எனவே, அந்த வயதில், நான் கண்ட தமிழ்நாடு எப்படிப் பட்டது என்பதை அல்லவா, நான் உங்களுக்குச் சொல்ல வேண்டும்?

நான் கண்ட தமிழ்நாடு, எங்கள் ஊர்தான். சுமார் நூறு ஏகரா விஸ்தீரணம் கொண்டது எங்கள் ஊர். ஆகவே, தமிழ்நாடு, அப்பொழுது, நூறு ஏகரா பூமியாக, என் கண்ணில் பட்டது என்ருல், அதைக் கேட்டு, நீங்கள் ஏன் சிரிக்கவேண்டும்? உங்களில் ஒவ்வொருவருக்கும், உங்களுடைய மூன்ரும் பிராயத்தில் தமிழ்நாடு விஸ்தீரணத்தில், என் கண்ணில் பட்டது மாதிரிதான் பட்டிருக்கும்.

'என் தமிழ் நாட்டுக்கு' எங்கள் வீடுதான் ராஜதானி நகரம். எங்கள் பாட்டனர் (எங்கள் தகப்பனரைப் பெற்றதாக மரியாதையாகச் சொல்லும்) எங்கள் பாட்டனர், தலைநகரில் ஏக சக்ராதிபத்தியம் செலுத்தி வந்தார். அவருக்கு நான்தான் தோழனும் தலைமை மந்திரியும் என்று சொன்னல், நீங்கள் கண்டிப்பாகச் சிரிக்கத்தான் செய்வீர்கள். நீங்கள் எவ்வளவு நேரம் விடாமல் சிரித்தாலும், அதுதான் உண்மை.

எங்கள் பாட்டனரோடு சம அந்தஸ்தை வகித்து, ஊரில் யாரும் உட்காரமாட்டார்கள். அவரைக் காண வரும் பேர்வழிகள் யாவரும் அநேகமாக 'நின்ற சேவகம்'தான் செய்வார்கள். எங்கள் வீட்டு ஆசாமிகளோ, தாத்தாவுக்கு முன்னல் கூட வரமாட்டார்கள். நான்தான், பாட்டனரின் பக்கத்தில் உட்கார்ந்துகொண் டிருப்பேன். எனவே, 'என் தமிழ்நாட்டில்', எனது மூன்ருவது வயதிலேயே, எனக்கு முதல் மந்திரி பதவி கிடைத்துவிட்டது.

என்னைப்போல, மற்றவர்கள் பாக்கியசாலிகளாக இருந் திருக்க முடியாது. மார்லி-மிண்டோ சீர்திருத்தம், மாண்டேகு-செம்ஸ்போர்டு அரசியல் அமைப்பு, 1935-ஆம் ஆண்டுப் புதிய இந்தியச் சட்டம் முதலியவைகளுக்காகக் காத்திருந்து, மற்றவர்கள் மந்திரிகளானர்கள். எனக்கு அப்பேர்ப்பட்ட தொந்திரவு எதுவுமில்லை.

மேலும், என் 'மந்திரி வேலை'யில் கஷ்டம் ஒன்றும் கிடையாது.

அடிக்கடி, ஒரே ஒரு வேலையைத் தான், நான் திரும்பித் திரும்பிச் செய்ய நேரும். பாட்டனரின் பொடிமட்டை எப்படியோ மாயமாய்ப் பறந்து போய்விடும். அந்த மட்டை ஒளிந்துகொண் டிருக்கும் இடத்தைத் துப் பறிந்து, அதைக் கண்டெடுத்து, பாட்டனரிடம் கொடுக்கவேண் டிய வேலைதான் அடிக்கடி நேரும்.

பாட்டனர், 'அரண்மனை'யில் இல்லாத நேரத்தில், நான் 'தமிழ் நாட்'டைச் சுற்றப் புறப்பட்டு விடுவேன். அரசர் குலத்தில் பிறந்தவர்கள் அல்லது அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொண்ட வர்கள் மாறுவேஷம் பூண்டு, நாட்டைச் சுற்றிப்பார்த்து, சோதனை செய்வது சம்பிரதாய மல்லவா?

எங்கள் தமிழ்நாட்டில், மொத் தம் முப்பது வீடுகள்தான். பார்ப்பனர்களின் வீடு எட்டு; மற்றவர்களின் வீடு இருபத் திரண்டு. மனிதர்கள் நீராட்டம் செய்வதற்கும் மாடுகளைக் குளிப் பாட்டுவதற்கும் தோதாக அமைந்த குளம் ஒன்று உண்டு. காவிரியாற்றில், நீர் ஓடும்வரை யில், எங்கள் அருமைக் குளத்தி லும் ஜலம் இருக்கும். 'அற்ற குளத்தில் அருநீர்ப் பறவைகளை'ப் பார்க்க முடியாது. வருஷ முழு தும் மாட்டின் அழுக்கையும் மனிதர்களின் அழுக்கையும் ஏக போகமாக உண்டு வளர்ந்து கொழுத்த மீன்களைப் பார்க்க லாம்.

இவைகளுக்காக மனம் வாடிக் கொண்டு, தவம் செய்யும் கொக்குகளையும், குறி தவருமல் இவைகள் மீது பாய்ந்து வெற்றி யுடன் மேலே ஏறும் மீன் கொத் திக் குருவிகளையும் காணலாம்.

குளத்தின் மேல்புறத்தில் களம். போர்க்களமல்ல. நெல் கதிர்களை அடித்து, வைக்கோல் போர் போடும் களம். இதைப் போர்க் களம் என்றுகூடச் சொல்லலாம் போலிருக்கிறதே! இப்பொழுது தெரிகிறது, அப்பொழுது எனக் குத் தெரியுமா?

எங்கள் தமிழ்நாட்டில், குடிப் பதற்கான நீர் எங்கிருந்து கிடைத்தது என்று கேட்கலாம். ஒரே ஒரு கிணறு; அதிலிருந்து தான். ஆனல், அந்தக் கிணற்றி லிருந்து, குடியானவர்கள் நீர் எடுக்க முடியாது. கோடை காலத்தில், இவர்கள் படும் கஷ் டத்தைச் சொல்லி முடியாது.

ஒரு புதுக் கிணறு வெட்டுவ தற்கு, முப்பது ரூபாய் அந்தக் காலத்தில் இருந்தால் போதும். அதுக்குக்கூட வழி யில்லாமல், கிணறு வெட்டச் சொந்த நில மில்லாமல், 'என் தமிழ்நாட் டிலே', குடியானவர்கள் அந்தக் காலத்தில் வாழ்ந்தார்கள் என் ருல், எங்கள் நாட்டில் அப் பொழுது உலவிய ஒற்றுமை உணர்ச்சியையும் செல்வ நிலையை யும் நீங்களே யூகம் செய்து கொள்ளுங்கள்.

'மந்திரீ! ஆலயங்களில் பூஜை முதலானவைகள் ஒழுங்காக நடைபெற்றனவா?' என்று நீங் கள் என்னைக் கேட்டுவிடுவீர் களே என்று அஞ்சி, முன் எச் சரிக்கையாக, நானே சொல்லி விடுகிறேன்.

ஒரு பெருமாள் கோவில், ஒரு சிவன் கோவில், ஒரு பிடாரி கோவில், ஒரு பிள்ளையார் கோவில், இன்னெரு கோவில்— இவைகள் இருந்தன. பெருமா ளுக்கு, பூஜை உண்டு; உற்சவம் கிடையாது. பக்கத்து ஊரிலிருந்து

பூஜைக்காக வரும் பட்டர், தமக்குத் தோன்றிய நேரத்தில் வந்து பூஜையை, யாருக்கும் தெரியாமல் முடித்துவிடுவார்.

சிவன் கோவில் குருக்களும் இந்த ரகத்தைச் சேர்ந்தவர்தான். இவர் பட்டரைக் காட்டிலும் சிறிது யோசனைக்காரர். "சுவாமிதான் எந்த நைவேதனத்தையும் ருசி கூடப் பார்ப்பதில்லையே! எதற்காக, சமைத்து, பிரசாதமாக்கி நைவேத்தியம் செய்ய வேணும்? எதை நைவேத்தியம் செய்தாலும் சுவாமி ஏற்றுக் கொள்ளுவார்" என்று சிவன் கோவில் குருக்கள், 'தாம்புக் கயிறு' நைவேத்தியம் செய்வார் என்று எங்கள் ராஜ்யத்தில் வம்பு பேசுவது உண்டு.

நான் 'முதல் மந்திரியாக' இருந்தபோதிலும், என் பழக்கமெல்லாம் மாடு மேய்க்கும் பையன்களோடுதான். அவர்கள் ஆடுவதும் பாடுவதும் கண்களுக்கு இனிய காட்சியாகவும் காதுக்கு இன்பமாகவும் இருக்கும்.

'மாட்டுக்காரப் பயல்களோடு சேர்ந்தால், மாட்டுப் புத்திதான் வரும்' என்று என் பாட்டி சொல்லுவாள். என் பாட்டியின் தோழமையைக் காட்டிலும், மாட்டுக்காரப் பயல்களின் தோழமை இயற்கை கொண்டதாக இருந்தது என்பதை நான் சொல்லவும் வேண்டுமா?

எங்கள் 'தமிழ்நாடு' இத்துடன் முடிந்துவிடவில்லை. இன்னும் எத்தனையோ வேடிக்கைகளை, என் தமிழ்நாட்டில் நான் கண்டிருக்கிறேன். கொஞ்சம் கொஞ்சமாக—.

★

பொறுமையின் லாபம்

சுசன்னு வெஸ்லி என்னும் பிரபல மாது, ஒரு சமயம் ஒரு குழந்தையிடம் ஒரே விஷயத்தைப்பற்றித் திரும்பத் திரும்ப இருபது தடவை சொல்லிக்கொண் டிருந்தாள்.

"கண்ணே! உன் பொறுமையை மெச்சுகிறேன். ஒரே விஷயத்தை இருபது தடவை அந்தக் குழந்தையிடம் சலியாமல் சொல்லி விட்டாயே!" என்றார் அவளுடைய கணவர்.

"வாஸ்தவம். ஆனால், நான் பத்தொன்பதாவது தடவையோடு திருப்தி யடைந்து விட்டேனானால், நான் பட்ட சிரமம் அத்தனையும் அல்லவா வீணாகிவிடும்?" என்றாள் சுசன்னு.

குறையில்லாக் கதை

ஸினிமாக் கதை எழுதுவதற்காக ஒருவர், பிரசித்தி பெற்ற ஸாமுவேல் கோல்ட்வின் ஸ்டுடியோவுக்கு ஒரு சமயம் வந்து சேர்ந்தார். அவர் புதிதாய் எழுதிய ஒரு ஸினிமாக் கதை, ஸாமுவேல் கோல்ட்வினின் பார்வைக்குப் போயிற்று.

என்ன ஆகுமோ என்று ஆவலோடு காத்திருந்த கதாசிரியரை, கோல்ட்வின் கூப்பிட்டனுப்பினார். "இது குறையே இல்லாத ஸினிமாக் கதை. நான் பார்த்தவைகளுக்குள்ளே ஒரு பிழையும் இல்லாத ஒரே ஸினிமாக் கதை இதுதான். இதற்கு நீங்கள் 100 நகல்கள் எடுக்க வேண்டும்; என்னிடம் வேலை செய்யும் ஒவ்வொருவருக்கும் ஒரு பிரதி அனுப்ப வேண்டும். இந்த ஸ்டுடியோவிலுள்ள ஒவ்வொருவரும், ஒரு குறையில்லாத ஸினிமாக் கதையைப் பார்க்க வேண்டும் என்பது என் விருப்பம்" என்றார் கோல்ட்வின். ஆசிரியர் பேரானந்த மடைந்து விட்டார். ஆனால், கோல்ட்வின் மேலும் தொடர்ந்து, "சீக்கிரம், சீக்கிரம் போங்கள்; நான் இதைத் திருத்தி எழுத ஆரம்பிக்குமுன் போங்கள்" என்றார்!

மேல் நாடுகளில் பெண்களின் அழகுப் போட்டி நடக்கிறதே, அது நம் நாட்டுக்கும் வருமானால் எப்படி யிருக்கும்?

அழகுப் போட்டி

— 'மணி'

மேல்நாடுகளில் அழகுப் போட்டிகள் தொன்று தொட்டு நடந்து வருகின்றன. ஆனால், முற்காலத்திய அழகுப் போட்டிகளுக்கும் தற்காலத்திய அழகுப் போட்டிகளுக்கும் ஒரு முக்கிய வித்தியாச மிருக்கிறது.

முன்காலத்திய ஆடவர்கள் முட்டாள்கள். அவர்களுடைய பழக்க வழக்கங்களே முட்டாள்தனமானவை. இதை நான் எவ்வளவு தடவை வேண்டுமானாலும் திருப்பித் திருப்பிச் சொல்லலாம். ஏனென்றால், முன்காலத்தவர் யாரும் வந்து என்னுடன் சண்டைபோட மாட்டார்கள் அல்லவா? அதனால்தான். முன்காலத்திலே ஒருவன் தன் வீட்டுக் கூரையின்மேல் ஏறிக்கொண்டு, "என் மனைவிதான் இந்த உலகத்திலுள்ள பெண்கள் எல்லோரைக் காட்டிலும் அழகி" என்று கத்துவான். அதைக் கேட்ட வழிப்போக்கர்களில் ஒருவன், "என்ன சொன்னாய்? என் மனைவிதான் இந்த உலகிலேயே அழகி. மரியாதையாக உன் வார்த்தையை வாபீஸ் வாங்கிக் கொள்ளுகிறாயா? இல்லாவிட்டால்........." என்று உறுமியவாறே தன் கோடரியைக் காண்பிப்பான். முதலவன் தன் வார்த்தையை வாபீஸ் வாங்கிக் கொள்ளாமல் தன்னுடைய மண்வெட்டியைக் கையிலெடுத்துக் கொள்வான். இருவருக்கும் பிரமாத யுத்தம் நடக்கும். இவர்கள் இருவரில் எவன் வெற்றியடைகிறானோ அவனுடைய மனைவிதான் அழகி என்று முடிவு கட்டுவார்கள். என்ன முட்டாள்தனமான கொள்கை!

நல்ல வேளையாக இந்த முட்டாள்தனமான வழக்கம் நின்று விட்டது. இப்பொழுது பெண்களின் அழகை நிர்

போட்டிக்கு இந்த நாரீமணிகள் போகாதிருப்பார்களா?

ணயிக்க ஆடவர்கள் ஒருவருக்கொருவர் சண்டை போட்டுக்கொள்வதில்லை. அந்த வேலையை இப்பொழுது பெண்களே மேற்கொண்டு விட்டார்கள்!

மேல் நாடுகளில் தற்காலத்திய அழகுப் போட்டிகள் மிகவும் சமாதான முறையில் நடத்தப்பட்டு வருகின்றன. ஒவ்வொரு வருஷமும் உலகில் சிறந்த அழகி என்று தேர்ந் தெடுக்கப்படுபவளுக்கு ஒரு பரிசு வழங்கப்படுகிறது. யார் அழகி என்பதைத் தீர்மானிக்க, ஒரு கமிட்டியார் நியமிக்கப்படுகிறார்கள்.

நம் தேசத்திலும் இத்தகைய அழகுப் போட்டிகள் நடந்தால், நன்றாயிருக்கு மென்பது சிலர் அபிப்பிராயம். ஒருவேளை அவர்களுக்குத் தங்கள் மனைவிதான் சிறந்த அழகி யென்றும், தமக்குத்தான் அந்தப் பரிசு வரும் என்றும் எண்ணமோ என்னவோ! ஆனால், என்னைக் கேட்டால் 'அழகுப் போட்டியும் வேண்டாம்; ஒன்றும் வேண்டாம்' என்றுதான் சொல்லுவேன். "ஏன் அப்படிச் சொல்லுகிறீர்கள்? உங்கள் மனைவி அவ்வளவு அழகல்லவோ?" என்று தானே கேட்கிறீர்கள்? ஆமாம். என் மனைவி அவ்வளவு அழகியல்ல என்பது உண்மைதான். இப்படி நான் சொல்லுவதை என் மனைவியிடம்போய்ச் சொல்லித் தொலைக்காதீர்கள். அவளிடம், நான், "உன்னைவிட அழகாக இந்த உலகத்திலேயே ஒருவரும் இருக்க முடியாது" என்று சொல்லி யிருக்கிறேன். "இந்தக் கட்டுரையைப் படித்தால் அவள் நீர் இங்கே சொல்லுவதைத் தெரிந்து கொண்டுவிட மாட்டாளா?" என்று நீங்கள் கேட்கலாம். அந்தப் பயம் எனக்குக் கொஞ்சமும் இல்லை. என் கட்டுரைகள் ஒன்றையும் அவள் படிப்பதேயில்லை. நானும் 'படி, படி' என்று எவ்வளவோ தடவை சொல்லிப் பார்த்தாகி விட்டது.

ஹூம்! என்னவோ சொல்ல ஆரம்பித்தேன். என்னவோ சொல்லிக்கொண்டு போகிறேன். சே! இந்தப் பெண்களே இப்படித்தான். நடுச் சந்தியில் கொண்டு வந்து விட்டுவிடுகிறார்கள்? என்ன சொல்லிக்கொண் டிருந்தேன்? ......ஆமாம். நம் தேசத்தில் அம்மாதிரி அழகுப் போட்டிகள் ஒன்றும் வேண்டாம் என்றுதான் சொன்னேன்? ஏன் என்று தானே கேட்கிறீர்கள்? சொல்லுகிறேன். சாவதானமாகக் கேளுங்கள்.

நம்முடைய வாழ்க்கை நடைமுறையும் மேல் நாட்டவரின் வாழ்க்கை நடைமுறையும் அடிப்படையிலே வேறுபட்டவை. ஆகவே, அவர்களுடைய பழக்க வழக்கங்களை யெல்லாம் நாமும் காப்பியடிக்க விரும்புவது முட்டாள்தன மாகும்.

இந்த அழகுப் போட்டிக்கும் சாதாரணமாகப் பத்திரிகைகளில் வரும் 'பகுத்தறிவு'ப் போட்டிக்கும் ஒரு முக்கிய வித்தியாசமிருக்கிறது. 'பகுத்தறிவு'ப் போட்டியில் விடை யெழுதும் ஒவ்வொருவனும் தன்னுடைய விடைதான் சரியான விடை என்றும், மற்றவர்களுடைய விடைக ளெல்லாம் தவறானவை யென்றும், தனக்குத்தான் கட்டாயம் பரிசு வரப்போகிற தென்றும் நினைக்கிறான். ஆனால், அழகுப் போட்டியில் அம்மாதிரி யில்லை. ஒவ்வொருவனுக்கும் தன் மனைவி அழகி யல்ல என்று நன்றாகத் தெரியும். இருந்தபோதி

லும், அவள், "நானும் இந்த அழகுப் போட்டியில் சேர்ந்து கொள்ளப்போகிறேன். 'நீ தான் இந்த உலகிலேயே சிறந்த அழகி' என்று நீங்கள் எத்தனை தடவை சொல்லியிருக்கிறீர்கள்? ஆகையால், இந்தப் போட்டியில் கலந்து கொண்டால் எனக்குக் கட்டாயம் பரிசு வரும்" என்று பிடிவாதம் செய்யும்பொழுது, பாவம் அவன் என்ன செய்ய முடியும்? 'நீ ஒன்றும் அவ்வளவு அழகில்லை' என்று சொல்லவும் அவனுக்குத் தைரியம் வராது. 'நீ ஒன்றும் இதில் கலந்துகொள்ள வேண்டாம்' என்று சொல்லுவதற்கும் பயம். ஏனென்றால், "அப்படி இவ்வளவு நாளாக நீங்கள் என்னிடம் சொன்னதெல்லாம் வெறும் பொய்தானா?" என்று அவள் கேட்டுவிட்டால் என்ன செய்கிறதென்று திகில். ஆகவே வேண்டா வெறுப்புடன் - தன் மனைவிக்குக் கட்டாயம் பரிசு வராது என்ற தீர்மானத்துடன் - போட்டியில் கலந்து கொள்ள அவளுக்கு அனுமதி கொடுப்பான். அப்படித் தான் அனுமதி கொடுக்கா விட்டாலும் அவள் போட்டியில் கலந்து கொண்டு விடுவாளென்று அவன் அறிவானதலால், தான் அனுமதி கொடுத்தே அவள் போனதாக இருக்கட்டுமே என்று நினைத்து அனுமதி கொடுத்து விடுவான். பிறகு கேட்பானேன்? இத்தனை நாளாக வயிற்றை வாடவைத்து அவன் சேமித்து வைத்திருந்த பணத்தையெல்லாம் வெளியில் எடுக்க வேண்டியதுதான். பவுடர், ஹேர் ஆயில், ரிப்பன், புடவை, ஜாக்கெட் என்று பெரியதொரு 'லிஸ்ட்' போட்டு விடுவாள் மனைவி. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல், கணவன் எல்லாவற்றையும் போய் வாங்கிக் கொண்டுவந்து கொடுப்பான் அவளுக்கு.

நவநாகரிக முறையில் உடை உடுத்தியவளாய் நாணிக்கோணிக் கொண்டு அழகுப் போட்டிக்குச் செல்வாள் பத்தினி. அவள் பின்னால் 'டபேதார்' மாதிரி செல்வான் கணவன். அவளழகைக் கண்டு யாராவது மயங்கி விடப் போகிறார்களே என்ற பயத்தால் அல்ல! அவள் அழகு ஒருவரையும் மயக்காது என்று அவனுக்குத் தெரியும். அவள் கட்டளையைச் சிரமேல் தாங்கித்தான்.

போட்டி நடக்கும் இடத்துக்குப் போனதும், போட்டியில் கலந்து கொள்ளும் பெண்மணிகளெல்லாம் நாற்காலியில் உட்கார்ந்து கொள்வார்கள். யார் சிறந்த அழகி என்று தீர்மானிப்பதற்காக நியமிக்கப்பட்டிருக்கும் கமிட்டியார், ஒவ்வொரு பெண்மணியின் அருகிலும் வந்து அவளுடைய முகத்தைக் கூர்ந்து கவனிப்பார்கள். அப்பொழுது போட்டியில் பரிசு பெறவேண்டுமென்று ஆவலுடையவர்களான அந்தப் பெண்மணிகள், கமிட்டியாரை வசப்படுத்த எண்ணி மெல்லிய புன்னகை பூப்பதும் அவர்களைக் கடைக் கண்ணால் பார்ப்பதுமாக இருப்பார்கள். இதைக் கண்ட கணவன்மார்களுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வரும். அந்தப் போட்டி வைத்தவர்கள்மீது வசை புராணம் பாட ஆரம்பித்துவிடுவார்கள். (தம் மனைவிமார்கள்மீது ஒரு குற்றமும் சொல்ல இவர்களுடைய நாக்குத் துணியாது!)

கடைசியில் போட்டியின் முடிவு தெரியப்படுத்தப்படும். மேல் நாடுகளில் எப்படித்தான் அவர்கள் ஒரு முடிவுக்கு வருகி

ளுர்களோ தெரிய வில்லை. நம் நாட்டில் சாதாரணமாக எந்த விஷயத்திலுமே நம்மவர்கள் ஒரு முடிவுக்கு வருவதில்லை. அதிலும், இந்த அழகுப் போட்டியில் அவ்வளவு இலகுவாக முடிவுக்கு வந்து விடுவார்களா? ஒவ்வொரு கமிட்டி மெம்பரும் தன் மனைவி தான் எல்லாப் பெண்களையும்விட அழகு என்று வாதிப்பான். தன் மனைவிக்குப் பரிசைக் கொடுக்காவிட்டால், தான் வீடு திரும்ப முடியாதே என்று ஒவ்வொருவனுக்கும் பயமா யிருக்கும். கடைசியில் எல்லோருமாகச் சேர்ந்து பரிசையே கொடுப்பதில்லை என்று தீர்மானித்துவிடுவார்கள். (இம்மாதிரி முடிவுக்கு வருவதில் நம்மவர்கள்தான் பேர்போனவர்க ளாயிற்றே!) தம் மனைவிமார்களை அலங்கரிப்பதற்காகப் பணத்தை வாரி யிறைத்த கணவன்மார்க ளெல்லாம் இந்த முடிவைக் கேட்டு வயிறெரிவார்கள்.

'இவ்வளவு கஷ்டம் ஏன்? கல்யாண மாகாத பிரம்மசாரிகளைக் கமிட்டி மெம்பர்களாய்ப் போட்டால் போகிறது' என்று நீங்கள் சொல்லலாம். ஆனல், அவர்களுடைய கண்களை நம்ப முடியாதே? ஒரு பெண்ணைப் பார்க்கும்போது, "ஆஹா! இவள்தான் சிறந்த அழகி" என்று அவர்களுக்குத் தோன்றும். அடுத்த பெண்ணைப் பார்க்கும்போது தாம் பார்த்த முதல் பெண்ணை முற்றிலும் மறந்து, "ஆமாம்! இவள் தான் எல்லோரையும்விட அழகி" என்பார்கள். இப்படியாக, எல்லோருமே அவர்களுக்குச் சிறந்த அழகிகளாகத் தோன்றுவார்கள். அதற்கு என்ன செய்வது?

'ஏன்? வயது முதிர்ந்த பெண்மணிகளைக் கமிட்டி மெம்பர்களாகப் போட்டால் போகிறது' என்று நீங்கள் கூறலாம். ஆனல், அவர்களும் போட்டியில் கலந்து கொள்ள விரும்புவார்கள் என்பதை நான் உங்களுக்குத் தெரிவிக்க விரும்புகிறேன். பெண்கள் தாங்கள் இருபதாவது வயதில் இருந்ததுபோலவே தங்களுடைய எழுபதாவது வயதிலும் இருப்பதாக அல்லவோ நினைத்துக் கொண்டிருக்கிருர்கள்!

வேண்டாம், வேண்டாம். இந்த அழகுப் போட்டியே நம் நாட்டுக்கு வேண்டாம். நமக்குள்ளிருக்கும் பல சச்சரவுகள் தீர்ந்தால் போதுமென்றிருக்கிறதே. இன்னும் வேறு சச்சரவுகளுக்கு வழி பார்ப்பானேன்?

★

தந்திரப் பேச்சு

பிரஞ்சுப் புரட்சியின் போது, ஒரு தெருவில் ஸோல்ஜர்கள் போக முடியாதபடி பொது ஜனங்கள் கூடிவிட்டார்கள். அவர்களைச் சுட்டுக் கலைக்கும்படி, படைத் தலைவன் உத்திரவிடப் போனான். அச்சமயம் இளைஞனை கீழ் உத்தியோகஸ்தன் ஒருவன், தலைவனிடம் சென்று, "கலையும்படி இந்த ஜனங்களிடம் முதலில் நான் பிரசங்கம் செய்து பார்க்கிறேன்" என்றான். "சரி; செய்து பார்" என்றான் தலைவன். வாலிப உத்தியோகஸ்தன் மரியாதைக்கு அடையாளமாகத் தன் தொப்பியை எடுத்துவிட்டு, ஜனங்களைப் பார்த்து, "இங்கே இருக்கக் கூடிய கனவான்கள் எல்லாரும் தயவு செய்து விலகிப் போக வேண்டுகிறேன். ஏனென்றால், இங்குள்ள காலிகளை யெல்லாம் சுடும்படி எங்கள் தலைவர் உத்திரவிட்டுள்ளார்" என்றான். உடனே, எவ்விதக் குழப்பமுமின்றி, ஜனங்கள் அத்தனை பேரும் அகன்று விட்டார்கள்!

மூலதனம்!

சண்டையிலும் சமாதானத்
திலும் பொருத்தமானதும்
உண்மையானதும்............

வைரங்களே

உறைவிடம்

ஸாராஜ்மல்ஸ்

நாணயத்திற்கும் நம்பிக்
கைக்கும்.........................
சென்ற அரை நூற்றூண்டு
களாக நிரந்தர நன்மதிப்புப்
பெற்றுள்ளது.

ஆகையால்

ஸாராஜ்மல்ஸ்

வைரங்களே !!!

313, எஸ்பிளனேட், மதராஸ்

அகத்தின் அழகு முகத்தில் தெரியும்

பக்கத்திலிருக்கும் துண்டுப் படத்தில் காண்பது போலுள்ள தனது சாதாரணமான தோற்றம் மாறி, இந்த நண்பர் குதூகலித்துச் சம்பாஷிப்பதேன்?

ஒவ்வொரு வேளையும்தான் வெற்றிலை போட்டுக் கொள்ளுகிறார் — ஏன்?......ஒவ்வொரு நிமிஷமுங் கூடப் போட்டுக் கொள்ளுகிறார்! பின் ஏன் இந்த இரண்டு முகங்களுக்கும் இவ்வித வித்தியாசம்?

ஆஹா! பாக்கின் மாறுதல் உள்ளத்தின் உணர்ச்சியை எவ்வளவு நன்றாக ருசுப்படுத்துகிறது! அகத்தின் மகிழ்ச்சியைப் பிரத்யக்ஷமாய்க் காட்டும் அசோகா முகமெங்கே — போலிப்பாக்கைக் குதப்பும் இதர முகமெங்கே!

REGD. No 1506
அசோகா
MILD SCENTED
ASOKA

உடம்பும் மருந்தும்

காப்பிப் பொய்கள்: 'காப்பியால் கெடுதலே இல்லை; ஆராய்ச்சியாளர்களின் முடிவு' என்ற தலைப்புடன், காப்பியின் பெருமையைப்பற்றிய ஒரு குறிப்பு ஐக்கிய அமெரிக்கப் பத்திரிகைகள் அனைத்திலும் ஒரு சமயம் வெளியாயிற்று. உடனே, 'குட் ஹெல்த்' என்ற ஆரோக்கியப் பத்திரிகை, 'காப்பிப் பொய்கள்' என்ற ஒரு மறுப்பை வெளியிட்டது. பிரபல டாக்டரான வில்லியம் ஹவார்டு ஹே, எம். டி., தமது 'சிறந்த உடல் அமைப்பு' என்ற புத்தகத்திலே, அந்த மறுப்பை, ஆமோதிப்புடன் வெளியிட்டுள்ளார்.

காப்பிப் பொய் நிர். 1:

காப்பி களைப்பைத் தீர்க்கிறது.

இது உண்மையல்ல. காப்பி களைப்பைத் தீர்க்கவில்லை; ஒளிக்கிறது. இதை எட்வர்டு ஸ்மித் என்ற ஆங்கில டாக்டர், ஐம்பது வருஷங்களுக்கு முன் நிரூபித்துக் காட்டியிருக்கிறார். காப்பி குடித்த வேகத்தினால் செய்யும் வேலை, அதைக் குடிக்காமலே செய்யும் வேலையைவிட அதிகக் களைப்பைத் தருகிறது என்று அவர் ருசுப்பித்திருக்கிறார்.

காப்பிப் பொய் நிர். 2:

வேலை செய்யும் சக்தியைக் காப்பி அதிகரிக்கிறது.

உண்மை இதற்கு நேர்மாறாகும். நான்ஸென் யாத்திரைக் கோஷ்டியார், கிரீன்லாண்டை ஆராய்ச்சி செய்யப் புறப்பட்டபோது, பாரமான பனி வண்டிகளை இழுத்துச் சென்றார்கள். ஆரம்ப காலத்தில், தினம் மாலையில் இரண்டு மூன்று முறை காப்பி குடித்தார்கள். பலன், அதிகமான சிரமந்தான். பிறகு, காலையில் மட்டும் ஒரே தரம் குடித்தார்கள். அதுவும் கெடுதலே பயந்தது. ஆகையால், 'காப்பியை அடியோடு நிறுத்திவிட்டோம்' என்று நான்ஸென் கூறுகிறார்.

காப்பிப் பொய் நிர். 3:

மனதை ஒருநிலைப்படுத்தக் காப்பி உதவுகிறது.

காப்பி குடித்துக் குடித்து, அதற்கு அடிமையானவர்களின் ஏகாக்கிர சக்தி பங்கமடைந்துவிடுகிறது. அவர்களுக்கு மட்டுமே, மனம் குவிய, காப்பி உதவும். மதுபானம், அபினி முதலிய லாகிரிக் குடியர்கள் தங்கள் நரம்புகள் ஸ்திரப்படுவதற்கு அது அதைக் குடித்தாக வேண்டியிருப்பது போலத்தான் இதுவும்.

காப்பிப் பொய் நிர். 4:

பிற லாகிரிகளைப் போலன்றி, காப்பியால், பின்னால் தளர்ச்சி ஏற்படுவதில்லை.

ஒவ்வொரு காப்பிக் குடியரும், இது உண்மையல்ல என்று அறிவார்கள். நேற்றுக் குடித்த காப்பியின் கேடுகளால் இன்று ஏற்பட்டுள்ள தளர்ச்சியை ஒளிப்பதற்காகத்தான், காப்பிக் குடியன், தன் காலைக் காப்பியைக் குடிக்கிறான். தங்கள் காலைக் காப்பி தவறிவிட்டால், கடுமையான தலைவலியால் தவிக்கும் ஆயிரக்கணக்கான காப்பிக் குடியர்கள் உண்டு.

காப்பிப் பொய் நிர். 5:

தேகத்திலுள்ள சக்தி எதுவும் காப்பியினால் விரயமாவதில்லை.

இதைவிடக் கேலிக்கூத்தான கூற்று வேறேதும் இருக்க முடி

யர்து. ஒருவனுக்குக் களைப்பு ஏற்பட்டால், ஓய்வு தேவையாகிறது. அப்போது காப்பி குடித்தால், களைப்புத் தேன்றுவதில்லை. என்றாலும், ஓய்வு தேவைதான். அந்நிலையில் அவன் வேலை செய்துகொண்டே யிருந்தால், தான் செலவழிக்கக்கூடிய அளவுக்கு மேல், தன் மூளையின் சக்தியையும் நரம்புகளின் சக்தியையும் அவன் செலவழித்து விடுகிறான். இது தேக சக்தியின் விரயமாகும்.

காப்பிப் பொய் நிர். 6 :

காப்பியால் ஏற்படும் உற்சாகம் உடம்புக்கு நன்மையேயாகும்.

புத்தி சாதுர்யம் வாய்ந்த நான்ஸென் இதுபற்றிக் கூறுவதைக் கேளுங்கள் : "செயற்கை முறைகளால் மனதுக்கும் உடம்புக்கும் உற்சாகமூட்டிக் கொள்வதால் நன்மையே ஏற்படும் என்று நினைப்பது, உடற் கூற்று சாஸ்திரத்தின் எளிய விதிகளைக்கூட அறியாத அறியாமையே யாகும் என்பது என் அபிப்பிராயம்."

காப்பிப் பொய் நிர். 7 :

காப்பியால் இதயம் துரிதமாய் வேலை செய்கிறது. இதனால் நன்மையே.

சாட்டையடியால் பறக்கும் குதிரைபோல, காப்பியால் இதயம் பரபரப்புற்று நாடி யோட்டம் விரைவுபடுவது வாஸ்தவம். ஆனால், அதன் காரணம் என்ன? காப்பி ஒரு விஷம். அந்த விஷத்தை எவ்வளவு சீக்கிரம் இயலுமோ அவ்வளவு சீக்கிரத்தில் வெளிப்படுத்தவே, இதயத் துடிப்புத் துரிதப்படுகிறது. இதனால் எப்படி நன்மை உண்டாகும்? இம்மாதிரி லாகிரியால், ஏதோ சில அவசரத் தேவைகளில் நன்மையடையலாம். கடுமையான ஆப்பரேஷன் செய்தபின், அந்த அதிர்ச்சிக்குப் பரிகாரமாக காப்பீன் என்ற காப்பி சத்தை ஸர்ஜன்கள் உபயோகிப்பதுண்டு. இரண்டே இரண்டு தானிய எடைகள்தான் அவர்கள் உபயோகிப்பார்கள். அதனால் இரத்தக் கொதிப்பு இருபது மடங்கு அதிகமாகிறது. இப்படி மருந்தாய் உபயோகிக்கவேண்டிய காப்பியை, வழக்கமாய் உபயோகித்துவந்தால், தேகத்தின் ரத்தக் குழாய்களெல்லாம் சுருங்கியும் மரத்தும் போய், பெரும் கேடு விளைகிறது.

மாயை

நாணலும் பாசியும் மூடிய குளத்தில் துள்ளியோடும் மீன்களை வெளியிலிருந்து காணமுடியாது ; அதுபோலவே, மனிதனுடைய இதயத்தில் விளையாடும் ஈசுவரனைக் காணவொட்டாதபடி மாயை மறைக்கிறது.

—ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்ஸர்.

*   *

'மார்ஜால மோஹினி' என்ற அதிசயமான பெயரைப் படைத்தது குப்பைமேனி என்ற பச்சிலை. இதன் குணதிசயங்களைக் குறித்துத் தேரையர் கரிசல் கூறுவதாவது :

தந்தமூ லப்பிணிதீத்
 தந்திடுபுண் சர்வவிடம்
உந்துகுன்மம் வாதம்
 உதிரமூ—லந்தினவு
சூலஞ்சு வாசம்
 தொடர்பீந சங்கபம்போம்
ஞாலங்கொள் மேனி
 யதனல்.

அதாவது, குப்பைமேனிப் பச்சிலையால் தந்த மூல நோய், தீச்சுட்ட புண், தாவர சங்கம விடங்கள், வயிற்றுவலி, வாதரோகம், ரத்த மூலம், நமைச்சல், குத்தல், இரைப்பு, பீநசம், கபாதிக்கம் ஆகியவை தீரும்.

★

பாலர் பாட்டு

எங்கள் ரயில் வண்டி

எங்கள் ரயிலுக்கு வாருங்கள்—அது
எத்தனை நீளம் பாருங்கள்!
அங்கே நிற்பாள் கைநீட்டி—உயர்
அம்புஜம் எங்கள் கைகாட்டி.

கிட்டு முதலில் நின்றிடுவான்—பின்
'கிப்குப்! கிப்குப்!' என்றிடுவான்.
பட்டு கையை ஆட்டிடுவாள்—அவன்
'பச்சை' எனச்சொலி ஓட்டிடுவான்.

திக்கெலாம் சுற்றி ஓடவைப்பான்—நாம்
திரும்பிப் பார்த்தால் குட்டுவைப்பான்.
செக்குப் போலே நின்றிடுவோம்—கொடி
'சிவப்பு' என்றவன் சொன்ன கணம்!

—'கௌதமன்'

★

சேவல் மிட்டாய்

பாலர் கதை

'நீலா'

பச்சை மிட்டாய், சிவப்பு மிட்டாய், மஞ்சள் மிட்டாய், ஊதா மிட்டாய் இப்படி ஏராளமான மிட்டாய்கள் ஒரு கடையிலே இருந்தன. இத்தனை மிட்டாய்களுக்கும் நடுவிலே, ஒரு பெரிய பஞ்சவர்ண மிட்டாய் இருந்தது. அது ஒரு சேவல் உருவத்தில், சாக்கலேட்டால் செய்யப்பட்டிருந்தது. இந்தச் சேவல் மிட்டாயை, ஊரில் உள்ள குழந்தைகள் எல்லாம் வந்து வந்து ஆச்சர்யமாய்ப் பார்க்கும். இதைக் கண்டு, அந்தச் சேவல் மிட்டாய்க்கு நிரம்பக் கர்வம் வந்து விட்டது.

"நான் மிட்டாய்ச் சேவலாக்கும்! நான் மிட்டாய்ச் சேவல்! என்னைப்போல், அழகான பட்சி இந்த உலகத்திலேயே கிடையாது" என்று அது கொக்கரித்தது.

அந்தச் சேவல் மிட்டாயின் கீழே அரை ரூபாய் என்று விலை போட்டிருந்தது. அவ்வளவு விலை கொடுத்து எந்தக் குழந்தையால் வாங்க முடியும்? ஒரு குழந்தையும் வாங்கவில்லை.

கொஞ்ச நாள் கழித்து, இந்தச் சேவல் மிட்டாய்க்குப் பக்கத்தில், சிறிய கோழிக் குஞ்சு மிட்டாய் ஒன்றை, கடைக்காரன் வைத்தான். அதன் விலை காலணாத்தான்.

அன்றே அந்தக் குஞ்சு மிட்டாயை, ஒரு சிறுவன் வாங்கி விட்டான். கடைக்கு எதிரேயே நின்று கொண்டான். அந்தக் குஞ்சு மிட்டாயின் தலையைக்

கடித்து மென்றுகொண்டே, "ஏ சேவல் மிட்டாயே! நாளைக்கு இதுதான் உன் கதியும். ஊரிலேயிருந்து, எங்கள் மாமா வந்திருக்கிறார். நாளைக்கு எனக்கு அரை ரூபாய் கொடுப்பதாய்ச் சொல்லியிருக்கிறார். உடனே வந்து, உன்னை வாங்கி, இதேமாதிரி கடித்து விழுங்குகிறேன், பார்" என்றான்.

சேவல் மிட்டாய் திடுக்கிட்டுவிட்டது. "ஐயையோ! நான் அற்புதமான பட்சி யாவேனே! இந்த அழுக்குப் பிடித்த சிறுவனின் கையிலும் வாயிலுமா அகப்படுவது! மாட்டேன்; மாட்டவே மாட்டேன்" என்று தனக்குள்ளே சொல்லிக்கொண்டது. அன்று ராத்திரியே கடைக்காரனுக்குத் தெரியாமல், ஜன்னல் வழியாய், நடுத் தெருவில் குதித்தது. சாலை வழியே நடந்தது.

"நான் மிட்டாய்ச் சேவலாக்கும்; உலகிலே அழகிய மிட்டாய்ச் சேவல்" என்று கொக்கரித்துக்கொண்டே, சென்றது.

இப்படியே நடந்து நடந்து, ஒரு விவசாயப் பண்ணைக்குப் போயிற்று. அங்கேபோனால், தன்னை அரசனாகச் செய்வார்கள் என்று அது எண்ணியது. "நானே உலகில் மகா அழகான பட்சி. ஏன் நான் அரசனாகக் கூடாது?" என்று தனக்குத் தானே சொல்லிக் கொண்டது.

விவசாயப் பண்ணையில் பல நிஜமான கோழிகள், வாத்துக்கள், ஆடுமாடுகள் எல்லாம் இருந்தன. அவை இந்த மிட்டாய்ச் சேவலைப் பார்த்ததும், ஆச்சர்யப்பட்டன.

"நீ யார்?" என்று கேட்டது ஒரு குள்ள வாத்து.

"நான் மிட்டாய்ச் சேவல். உலகிலே மகா அழகான பட்சி."

"உன்னால் என்ன உபயோகம்? தலையணைக்கு அடைக்க நீ இறகு கொடுப்பாயா?" என்று கேட்டது ஒரு வாத்து.

"ஐயே! நான் மாட்டேன்!" என்றது மிட்டாய்ச் சேவல்.

"முட்டையிட்டுக் குஞ்சு பொரிப்பாயா?" என்று கேட்டது ஒரு கோழி.

"ஐயே! நான் மாட்டேன்!" என்றது மிட்டாய்ச் சேவல்.

"பின் என்னதான் உபயோகம் நீ?" என்று கேட்டது ஓர் ஆடு.

"நான் உலகிலேயே அழகான பட்சி. புத்திசாலியான பட்சி. ஆகையால், நான் உங்களுக்கெல்லாம் ராஜாவாக இருக்கப்போகிறேன்" என்றது மிட்டாய்ச் சேவல்.

"ஓ! அப்படியா?" என்று, பண்ணையின் வாத்துக்கள், கோழிகள், ஆடுமாடுகளெல்லாம் கேலியாய் நகைத்தன.

"ஆமாம், நீ புத்திசாலி என்கிறாயே? ஏன் வெய்யிலிலே நிற்கிறாய்?" என்று கேட்டது ஒரு நிஜமான சேவல்.

"நீ ஏன் நிற்கிறாய்?" என்று ஆத்திரத்தோடு பதிலுக்குக் கேட்டது மிட்டாய்ச் சேவல்.

"நான் உண்மைச் சேவல். நீயோ மிட்டாய்ச் சேவல்; சாக்கலேட்டினால் செய்யப்பட்ட சேவல். நான் நிற்கலாம்; நீ நிற்கக் கூடாது" என்றது நிஜச் சேவல்.

"நானும் வெய்யிலில் நிற்கத் தான் நிற்பேன்" என்று பிடிவாதமாய்க் கர்வத்தோடு சொல்லியது மிட்டாய்ச் சேவல்.

அப்படியே கொஞ்ச நேரம் நின்றதும், மிட்டாய்ச் சேவலின் இறக்கை நழுவியது; வால் தொய்ந்தது; மூக்கு நீண்டது. உருவம் குலையத் தொடங்கியது. மிட்டாய்ச் சேவல், சூரிய வெப்பத்தால் வர வர உருகிக் கொண்டே வந்தது. அதை அது அறியவில்லை.

"ஓ! நான் மிட்டாய்ச் சேவலாக்கும். உலகிலே அழகிய சேவல்; புத்திசாலியான பட்சி. நானே இந்தப் பண்ணைக்கு ராஜா" என்று செருக்கோடு கத்திக்கொண்டேயிருந்தது. குரல் வர வரக் குறுகி, நின்றே விட்டது. சிறகடிப்பு ஓய்ந்தது. உருவமும் கரைந்து மறைந்தது. மிட்டாய்ச் சேவல், பானகம் போல் ஆகிவிட்டது. "ஐயோ! பாவம்! நம் ராஜா இப்படியானரே!" என்று சொல்லி, பண்ணையின் பட்சிகளும் பிராணிகளும் அந்தப் பானகத்தைக் குடித்துத் தீர்த்துவிட்டன.

★

ஆவணக்காப்பக 88833 600 008

லட்ச ரூபாய் நாய்க்குட்டி!

ஒரு மனிதனிடம் இருந்த நாய்க்குட்டியைக் கண்ட மற்றொருவன், அதன்மீது மிகவும் ஆசை கொண்டு, "இதை விலைக்குத் தருவாயா?" என்று கேட்டான்.

நாய்க்குட்டியின் சொந்தக்காரன் "ஆஹா! தருகிறேன்" என்றான்.

மற்றவன்: "நாய்க்குட்டியின் விலை என்ன?"

சொந்தக்காரன்: "லட்ச ரூபாய்!"

மற்றவன்: (திடுக்கிட்டு) "என்ன, ஒரு நாய்க்குட்டியின் விலை லட்ச ரூபாயா! இது உலகத்திலேயே இல்லாத புதுமையாய் இருக்கிறதே!"

சொந்தக்காரன்: "புதுமை என்ன? நானே முன்பு ஒரு நாய்க் குட்டியை லட்ச ரூபாய்க்கு விற்றிருக்கிறேன்."

மற்றவன்: "உண்மைதானா?"

சொந்தக்காரன்: "முழு உண்மை; பரிபூர்ண உண்மை. ஆனால், விலையை நான் பணமாக வாங்கிக்கொள்ள வில்லை. ஒவ்வொன்றும் அரை லட்ச ரூபாய் விலையுள்ள இரண்டு பூனைக்குட்டிகளை வாங்கிக் கொண்டேன்."

ஐரிஷ்காரனின் அவநம்பிக்கை

மாரிஸ் காலிஸ் என்ற ஆசிரியர், ஓர் ஐரிஷ்காரனுடன் சந்தித்துப் பேசிக்கொண் டிருந்தார். நாஜிகளை அவன் வெறுப்பதைக் கண்டார்.

"அப்படியானால், நீங்கள் ஏன் நாஜிகளை எதிர்க்கவில்லை? அவர்களை ஜயிக்காவிட்டால் எங்களிட மிருந்து நீங்கள் சம்பாதித்த சுதந்தர மெல்லாம் பறிபோய் விடுமே!" என்று கேட்டார் காலிஸ்.

ஐரிஷ்காரன்: "நீங்கள் அவர்களோடு போரிடுவதால்தான், நாங்கள் அவர்களை எதிர்க்கவில்லை. இதுதான் உண்மையான காரணம்."

காலிஸ்: "நாங்கள் மட்டுமல்ல; உலகமே அவர்களோடு போரிடுகிறது. உலகத்தோடு சேருங்கள். பன்னூற்றாண்டுகளாக எந்தச் சுதந்தரம், நீதி, சகிப்புத்தன்மை, உரிமைகளை நேசித்தீர்களோ அவைகளுக்காக மறுபடியும் போரிடுங்கள்.

ஐரிஷ்காரன்: "நாங்கள் மாட்டோம். அது உங்கள் குற்றமே. உங்களிடம் எங்களுக்கு அவ்வளவு பயம் வந்துவிட்டது. சுதந்தரம், நீதி முதலிய சொற்களையெல்லாம் நீங்கள் உபயோகிப்பதால், அவை அனைத்தும் அர்த்த மற்ற சொற்களாய் எங்களுக்குத் தோன்றுகின்றன."

புத்தக உலகம்

சுகம் எங்கே : ஆசிரியர் : வி. ஸ. காண்டேகர். மொழிபெயர்த்தவர் : கா. ஸ்ரீ. ஸ்ரீ. வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம், மயிலாப்பூர். விலை : ரூ. 2—0—0.

இது ஓர் அற்புதமான நாவல். சம்பிரதாயச் சோட்டிலே செல்லாமல், புதுமையான முறையில், கதைச் சுருள் நம்முன் விரிகிறது. ஒவ்வொரு கட்டத்திலும், கதையின் பாத்திரங்கள் ஒவ்வொருவருமே, தத்தம் சுய சரித ரீதியில், கதையைக் கொஞ்சம் கொஞ்சமாய்க் கூறுகிறார்கள். முத்தண்ணா, புகழுக்காக இயங்கும் ஓர் இயந்திரம். ஆனந்தன், வாழ்க்கைப் புயலில் அலமரும் ஒரு காற்றாடி. உஷா, காதலின் லட்சியப் பெண்மணி. சஞ்சலா, காமத் திருவிளையாடல் புரியும் ஒரு நாகப் பாம்பு. மாணிக்கம்...... அந்த மாணிக்கம் இருக்கிறாளே, அவள், இந்தச் சோகக் கதையின் இறுதிப் படலத்திலேதான், தன்னை அறிகிறாள்; ஆன்மத் தியாகமும் புரிந்துவிடுகிறாள். ஒவ்வொரு பாத்திரமும் தனித்தனி குணாதிசயங்களோடு ஜீவ களையுடன் உலவுகிறார்கள். நவரஸங்களையும் இந்தக் கதையிலே நாம் பருகுகிறோம். மனதைப் பரவசப்படுத்தும் அருங் கருத்துக்கள், கதையின் ஒவ்வொரு பக்கத்திலும் நிறைந்திருக்கின்றன. மொழிபெயர்ப்பு மொழிபெயர்ப்பாகத் தோன்றவில்லை; மூல நூல் போலவே தோன்றுகிறது. அவ்வளவு அருமையான மொழிபெயர்ப்பு. விறுவிறுப்பும் தெளிவும் கம்பீரமுமான இனிய தமிழ் நடை. படிக்கப் படிக்கச் சுவைதரும் இலக்கிய விருந்து என்று இதைச் சொல்வதும் தகும்.

* *

இரு சகோதரிகள் : ஆசிரியர் : ரவீந்திரநாத தாகூர். மொழிபெயர்த்தவர் : த. நா. குமாரஸ்வாமி. வெளியிட்டோர் : கலைமகள் காரியாலயம். விலை : ரூ. 1—0—0.

கதையில் நாலே முக்கிய பாத்திரங்கள் தான். எளியதொரு காதல் பின்னல். அக்காளின் கணவரிடம் தங்கை, தன் இளமையின் குதூகலத்தால், கொஞ்சம் அளவுக்கு மிஞ்சிச் சரளமாய்ப் பழகிவிடுகிறாள். ஆனால், வரம்புமீறி விபரீதமாகு முன்னரே, தானே விலகுகிறாள். பாத்திரங்கள் யாவரும் உணர்ச்சிக் களஞ்சியங்கள். ஆனால், அந்த நீரதன் மட்டில் ஒரு விலக்கு. சற்றுக் கடுமையாகச் சொல்லப்போனால், அவன் எதற்காக இந்தக் கதையில் தோன்றி மறைகிறான் என்று கூடக் கேட்கத் தோன்றுகிறது. அவன் இல்லாமலேயும் இவ்வளவு அழகாகவே இந்தக் கதை சிருஷ்டியாகியிருக்க முடியும். கதையின் முடிவிலே, ஒரு சம்பூர்ணத்தை நாம் காணமுடியாதுபோனாலும், கடைசிப் பக்கம் வரையில், மிகுந்த சுவாரஸ்யத்தோடுதான் கதையைப் படிக்கிறோம். மொழிபெயர்ப்பு நடையின் கதி, களங்கமற்றதொரு இன்னிசைபோல், செல்கிறது. கவிஞரின் வாக்கை அப்படியே தமிழிலே நாம் பருகுகிறோம் என்றே தோற்றுகிறது.

* *

யான் பெற்ற இன்பம் : ஆசிரியர் : மு. அருணாசலம், எம். ஏ. வெளியிட்டோர் : சக்தி காரியாலயம், வடக்கு வெளி வீதி, மதுரை. விலை : ரூ. 1—8—0.

பதினொரு இலக்கியக் கட்டுரைகளின் தொகுப்பு இது. அற்புதமான பழம் பாடல்கள், நாட்டுப் பாடல்கள், ஆகியவைகளின் கவிதைச் சுவையை, நாம் அப்படியே பருகச் செய்துவிடுகிறார் ஆசிரியர். 'மருங்கு வண்டு சிறந்தார்ப்ப, மணிப்பூ ஆடை யது போர்த்து வரும்' **காவேரி**யையும், 'இவள் செளிப்பதும், அவன் களிப்பதும், பல்லை இளிப்பது'மான பள்ளர் காட்சியை வர்ணிக்கும் '**சீகாழிப் பள்ளை**'யும், 'இலையுதிர்ந்து கொடி வாடி இல்லையென்று போமிடத்தே, சருகுதிர்த்துக் கனிந்து தந்த' **சாதிப் பலாப் பழத்தை**யும் பற்றிய கட்டுரைகளை எத்தனை முறை படித்தாலும் அலுக்காது. மற்றும் ஒவ்வொரு கட்டுரையும் பன்முறை படித்து இன்புறத் தக்கதேயாகும். அருவி நீரோட்டம்போல், தெளிந்த சுகமான நடை ஆசிரியருடையது.

* *

லக்ஷ்மீ கடாக்ஷம் : ஆசிரியை : ஸ்ரீமதி ஜயலக்ஷ்மி ஸ்ரீநிவாஸன். வெளியிட்டோர் : அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர். விலை : ரூ. 1–0–0.

அழகான பனிரண்டு சிறு கதைகள் அடங்கியது இந்தப் புத்தகம். கதைகளின் முக்கிய பாத்திரங்களெல்லாம், கௌரவமும் செல்வமும் நிறைந்த உயர்குலத்தைச் சேர்ந்தவர்களே என்றாலும், உயிர் நிரம்பியிருக்கின்றன. சாதாரணமான நித்திய வாழ்க்கைச் சம்பவங்களுக்குள்ளே பல உணர்ச்சிக் குழைவுகளைச் சித்தரித்துத் தருகிறார் ஆசிரியை. மனைவியின் 'லக்ஷ்மீ கடாக்ஷ'த்தைக் கணவன் பெறும் முதற் கதை இன்பமானது. 'சுந்தரி கட்டுரை' எழுதுவது, குடும்ப உபத்

திரவங்களை விளக்கும் ஒரு தமாஷ். ஓர் எளிய பெண்ணிடம் செல்வர் வீட்டுக் கமலா கருணைகாட்டி உபகாரம் புரிவதை வர்ணிக்கும் 'இரு தெய்வங்கள்', உணர்ச்சியோடு கூடியது. மற்றக் கதைகளும் வெவ்வேறு சுவை பயக்கின்றன.

*　　　*

காங்கிரஸும் அச்சும் (ஆங்கிலம்): எழுதியவர்: ஒரு விசேஷ நிருபர். வெளியிட்டவர்: எச். டபிள்யூ. ஸ்மித், டைம்ஸ் அவ் இந்தியா பிரஸ், பம்பாய். விலை: அணா 2.

சர்க்காருக்கு வக்காலத்து வாங்கிக்கொண்டு எழுதப்பட்டிருக்கிறது இந்தப் பிரசுரம். காங்கிரஸ் புரட்சிக்கார ஸ்தாபனம் என்றும், அதனுடன் எவ்விதச் சமாதானமும் முடியாதென்றும் ஸ்தாபிதம் செய்வதே இதன் நோக்கம். காங்கிரஸை விட, காந்திஜியைத்தான் இந்த நிருபர் அதிகமாய்த் தாக்குகிறார். காந்திஜியின் குற்றம் என்ன தெரியுமோ? "காந்திக்குச் சகல யுத்தங்களுமே வெறுப்பாயிருக்கின்றன. நாளைக்கே இந்தியா சுதந்தரம் பெற்றால், ஜப்பானையும் அதன் அச்சு நண்பர்களையும் எதிர்த்து யுத்தம் செய்யாது; ஜப்பானுடன் சமரசம் செய்துகொண்டு, படையெடுப்பில்லாமல் செய்துகொண்டுவிடும்" என்பது நிருபரின் வருத்தம். உண்மையில் சர்க்காரின் அவநம்பிக்கையும் இதுவே என்று தோன்றுகிறது. ஆதலால், கிரிப்ஸ் திட்டம் தோற்றதற்குக் காரணம், கூட்டுப் பொறுப்புடன் இந்திய சர்க்காரின் மந்திரிசபை ஏற்பட வேண்டும் என்றும் அதன் தீர்மானங்களுக்கு வைஸ்ராய் கட்டுப்பட்டு நடக்கவேண்டும் என்றும் காங்கிரஸ் கேட்டதுதான் என்பதாக நிருபர் கூறுவதில் வியப்பில்லை. அதெப்படி உண்மையான அதிகாரத்தைத் தேசப் பிரதிநிதிகளுக்கு மாற்றென்று காங்கிரஸ் கேட்கலாம் என்பதே அவருடைய ஆத்திரம். காங்கிரஸ் காரியக் கமிட்டிக்குள்ளேயே அனுபவசாத்திய அரசியல்வாதி திரு. ஸி. ராஜகோபாலாச்சாரியார்தான் என்று நிருபர் புகழ்கிறார். அப்பேர்ப்பட்டவர் சொன்னதையும் காங்கிரஸ் கேட்கவில்லையே என்று அவர் குற்றம் சாட்டுகிறார். காங்கிரஸ் போகட்டும். அந்த ஒரே 'அனுபவ சாத்திய அரசியல்வாதி', சர்க்காருக்கு எத்தனையோ உபதேசம் செய்தாரே, செய்கிறாரே; அது கேட்கலாமே? ஏன் கேட்கவில்லை?

★

நாளையக் கவலை

ராபின்ஸன் க்ருஸோ என்ற ஓர் அற்புதமான ஆங்கிலக் கதை உண்டல்லவா; அதன் கதாநாயகன், கப்பல் உடைந்ததால், நிர்மானுஷ்யமான ஒரு தீவில் போய் அகப்பட்டுக்கொள்கிறான். அங்கே கரைக்கு வெகு தூரத்தில் தன்னந் தனியாய் ஒரு பெரிய மரப் படகைக் கட்டுகிறான். கட்டி முடித்த பின் இதைத் தண்ணீரில் கொண்டுபோய்ச் சேர்ப்பது எப்படி என்ற வழி மாத்திரம் அவனுக்குத் தெரியவில்லை.

இதேமாதிரி சங்கடம் தமக்கும் பல சமயம் ஏற்பட்டதாக, பிரபல இந்திய வைஸிராயான வாரன் ஹேஸ்டிங்ஸ் ஒரு முறை கூறினார்: "என் வாழ்க்கையிலும் இதே போல நூறு தடவைகள் நிகழ்ந்திருக்கின்றன. படகைத் தண்ணீருக்குக் கொண்டு செல்லும் யோசனை எதையும் செய்யாமலேதான் நானும் அதைக் கட்டுவேன். யாராவது அது பற்றிய கஷ்டங்களையும் சிரமங்களையும் குறித்துக் கேட்டால், 'முதலில் படகைக் கட்டி முடிக்கிறேன். முடித்த பின், அதைத் தண்ணீரில் கொண்டுபோய்ச் சேர்க்கும் வழியைக் கண்டு பிடித்துக் கொள்கிறேன்' என்றே பதில் சொல்லுவேன்" என்று ஸர் பிலிப் பிரான்ஸிஸ் என்பவரிடம், ஹேஸ்டிங்ஸ் சொன்னார்.

கண் கூசாத வழி

மோட்டார்க் கார்களின் 'ஹெட் லைட்', நீங்கள் ரஸ்தாவிலே செல்லும் பொழுது, உங்கள் கண்களைக் கூசச் செய்து விடுகிறது. கார் போனபின், உங்கள் கண்கள் சற்று நேரம் வரையில் ஒளி மங்கி இருண்டுவிடுகிறது. இந்த அபாயத்துக்குத் தப்பித்துக்கொள்ள வழியில்லையா? இங்கிலாந்தின் இருட்டடிப்பின் போது, அதற்கொரு வழி கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறதாம். அதாவது, கார் வரும்போது, நீங்கள் ஒரு கண்ணை மட்டில் மூடிக்கொள்ள வேண்டும். கார் உங்களைக் கடந்ததும், அந்தக் கண்ணைத் திறந்து பார்த்தால், அந்தக் கண் நன்றாய்த் தெரியுமாம்.

தொடர்பு கொள்ளவேண்டிய
........................கம்பெனி இதுவே

"நல்ல இன்ஷியூரன்ஸ் கம்பெனியில் என்னைச் சேருங்கள்; என் வேலையை நேர்த்தியாய்ச் செய்கிறேன்" என்றே, முன்னேற்ற ஆவல்கொண்ட ஒவ்வொரு இன்ஷியூரன்ஸ் ஏஜண்டும் சொல்லுவார்கள். நல்ல இன்ஷியூரன்ஸ் காரியாலயமாய்த் தேர்ந்துகொள்ளுங்கள். அதற்கு நல்ல சேமதனம் இருக்கவேண்டும்; நல்ல பிரீமியம் வருவாய் வரவேண்டும்; நிதிகள் இருக்கவேண்டும்; நல்ல புதிய தொழில் நடந்துகொண்டிருக்க வேண்டும்; அது பணம் போடும் இனங்களிலிருந்து நல்ல வருமானம் வந்துகொண்டிருக்க வேண்டும்; மரண விகித அனுபவம் குறைந்ததாயிருக்க வேண்டும்; பொருளாதார நிர்வாகம் நன்றாயிருக்க வேண்டும்; நல்ல மிச்சம் உள்ளதாய் இருக்க வேண்டும் — சகல அம்சங்களிலும் நன்றாயிருக்க வேண்டும்.

அத்தகைய ஒரு நல்ல கம்பெனி ஹிந்துஸ்தான் கோவாப்பரேடிவ் — மன்னர்கள்கூடப் பொறாமை கொள்ளத்தக்க ஒரு மகுடம் சூடியுள்ள கம்பெனி அது — 'நல்ல பெயர்' என்பதே அந்த மகுடம்.

ஹிந்துஸ்தான் ஏஜண்டாயிருப்பது வாழ்நாள் பூராவுக்கும் கவலையற்ற ஒரு தொழிலாகும்.

ஹிந்துஸ்தான் கோவாப்பரேட்டிவ்
இன்ஷியூரன்ஸ் ஸொஸைட்டி லிமிடெட்

தலைமைக் காரியாலயம்:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
6-A, சுரேந்திரநாத் பானர்ஜி ரோடு
கல்கத்தா

சென்னைக் கிளை:
"ஹிந்துஸ்தான் பில்டிங்ஸ்"
107, அர்மீனியன் தெரு
ஜி. டி., சென்னை

விரைவில் வெளிவரும்



கார்ல் மார்க்ஸ்

(ஜீவிய சரித்திரம்)

★

வெ. சாமிநாத சர்மா
எழுதியது

விலை ரூபா
2—8—0

இந்நூலில் மார்க்ஸின் இளமைப் பருவ
பத்திரிகாசிரியனாயிருந்து அவன் பட்ட
கஷ்டங்கள், அவன் வகுத்த சமதர்ம சித்தா
த்தின் விளக்கம் முதலிய பல புதிய
அரிய விஷயங்கள் அடங்கியிருக்கின்றன.

சக்தி காரியாலயம், வடக்கு வெளி வீதி, மதுரை

நிதியின் பாதுகாப்புக்கு வழி இன்ஷியூரன்ஸ்

ஜூபிடர்

ஜெனரல் இன்ஷியூரன்ஸ் கோ. லிமிடெட்

(1919-ஆம் வூ இந்தியாவில் இங்கார்ப்பரேட் செய்யப்பட்டது)

ஆயுள், தீ, கப்பல், விபத்து ஆகிய முற்போக்கான பற்பலவித இன்ஷியூரன்ஸ்களும் செய்கிறது.

அதிகாரம் பெற்ற மூலதனம்	...	ரூ.	2,00,00,000
வெளியிட்டு, பங்குகள் சேர்ந்த மூலதனம்	...	ரூ.	1,50,00,000
பணம் செலுத்தி முடிந்த மூலதனம்	...	ரூ.	23,74,800
மொத்த ஆஸ்திகள்	...	ரூ.	88,40,000

ஜனங்களிடம் கம்பெனி பெற்றிருக்கும் செல்வாக்கையும், மேற்கண்ட புள்ளி விவரங்களே திட்டமாய்க் காட்டுகின்றன.

தலைமைக் காரியாலயம்: **கோட்டை, பம்பாய்**

சென்னைக் கிளை:

'ஜூபிடர் ஹவுஸ்,'

167, பிராட்வே, தபால் பெட்டி நெ. 1369, சென்னை

சக்தி காரியாலயம்

31, பவழக்காரத் தெரு

ஜி. டி. சென்னை

(போன் நெ. 4536)

சக்தி பத்திரிகை சம்பந்தமான கடிதங்கள் மேலே கண்ட விலாசத்துக்கும், புத்தகங்கள் சம்பந்தமான கடிதங்கள் மதுரை, வடக்கு வெளி வீதி விலாசத்துக்கும் எழுதப்பெறல் வேண்டும்.

சக்திக்கு ஏஜண்டு இல்லாத இடங்களுக்கு டிபாஸிட் கட்டக்கூடிய ஏஜண்டுகள் தேவை.

பிரபல ஜோதிஷர்

மஹா ராஜாக்களால் தங்க மெடல்கள் பரிசு பெற்றவர் மாதவாரி ஒரு வருஷ பலன் எழுத ரூ. 5. ஆருடம் 3 கேள்விகளுக்கு ரூ. 1. மேல் கேள்வி 1-க்கு அணா 8. ஜாதகம் அல்லது எழுதும் நேரம் தேவை.

பண்டித காழியூர்

ம. ஸ்ரீநிவாஸாச்சாரியார்

"சந்திரிகை" எல்டாம்ஸ் ரோட், ஆழ்வார்ப்பேட்டை, மதராஸ்

யான் பெற்ற இன்பம்

டால்ஸ்டாய் கட்டுரைகள்

ஒவ்வொன்றும் விலை ரூ. 1 8 0

சக்தி காரியாலயம்

மதுரை

இன்னும் படிக்கவில்லையா?

குழந்தை ராமு 8
ஒரு சமூக நாடகம்—ரா. ஸ்ரீ. தேசிகன், M
(புதிய கட்டிடம்)

கண்ணன் என் கவி 12
பாரதியின் கவிதையும் இலக்கிய பீடமு
கு. ப. ராஜகோபாலன், பெ. கோ. சுந்
ராஜன். (புதிய கட்டிடம்)

மது விலக்கு மங்கை 12
பிரபல அமெரிக்க நாவலாசிரியர் அப்ட
சிங்க்ளேர் (புதிய கட்டிடம்)

இதோ போதனை 3
மகாத்மா காந்தி

இந்தியப் பொருளாதார நூல் 0
தி. சு. அவினாசிலிங்கம்

இனி நாம் செய்யவேண்டுவது யாது 0
லியோ டால்ஸ்டாய்

அரசியல் ஞாபகங்கள் 0

சிறை அனுபவங்கள் 0

தென் ஆப்ரிக்கா சத்தியாக்கிரகம் 0
(மகாத்மா காந்தி)

(தபாற் செலவு வேறு)

சக்தி காரியாலயம்

வடக்கு வெளி வீதி : மதுரை

சிறந்த
ஆபரணங்களுக்கும்
வைரங்களுக்கும்
P.A. ராஜூ செட்டியார்
பிரதர்
கடைத்தெரு, கோயமுத்தூர்

வாழையடி வாழையாக வந்த பழக்கம்

இந்தியாவிலே இரண்டு பெரிய பாரம்பரிய
சொத்துக்கள் உண்டு. ஒன்று கலை. மற்
றொன்று அதிதி உபசாரம். இவ்விரண்டும்
வாழ்வின் இன்பத்தோடு பின்னிக் கிடக்
கின்றன. சோழர் காலத்து சிற்பங்களை
நாம் பார்க்கும்பொழுது நமக்கு மனதில்
எழும் ஒரு இன்ப உணர்ச்சி நாம் நமது
நண்பர்களுக்கு தேயிலைப் பானம் கொடுக்
கும்பொழுது உண்டாகிறது. அதிதி உபசா
ரத்துக்கு தேயிலைப் பானத்தைத் தவிர
வேறு சிறந்தது எது? எந்த நேரத்தில்
யார் வந்தாலும் நிமிஷத்தில் தயார் செய்யக்
கூடியது அதுவே. உங்கள் பாரம்பரிய
பழக்கத்தை மறக்கவேண்டாம். வீட்டுக்கு
விரும்பி வந்தோரை தேயிலை கொடுத்து
மனங்குளிரச் செய்யுங்கள்.

★

"சித்திய கர்மா" என்ற எங்கள் புது சித்
திரங்களுடன் கூடிய புத்தகம் எந்தெந்த
நேரத்திலெல்லாம் தேயிலை பானம் பரு
கலாம் என்பதைப்பற்றி விவரிக்கிறது.
இந்த விளம்பரத்தைக் கத்தரித்து உங்கள்
பெயர் விலாசம் முதலியவற்றுடன் கீழ்
கண்ட விலாசத்துக்கு அனுப்பவும். இந்தி
யத்தேயிலைக் கமிஷனர், இந்தியன் டீ
மார்கெட்டு எக்ஸ்பான்ஷன் போர்டு, தபால்
பெட்டி நெ. 2172, கல்கத்தா.

குடும்பத்துக்கு ஏற்ற ஒரே பானம்

இந்தியத் தேயிலை

...ன் டீ மார்க்கெட் எக்ஸ்பான்ஷன் போர்டாரால் வெளியிடப்பட்டது. I K 204

...ted ... L. Chidambaram, at the Commercial Printing & Publishing House,
46, Muthumari Chetty Street, George Town, Madras.
... P...lished by V. Govindan, 31, Coral Merchant Street, G. T., Mad.as.
Joint Editor: T. J. Ranganathan.